வானிலை
கூ.வெ. 31°C
கு.வெ. 26°C
இடியுடன் கூடிய மழை

# உதயன்

சுடர் 30 | கதிர் 177 | வள்ளுவர் ஆண்டு 2046 | வைகாசி 09, சனிக்கிழமை 23.05.2015

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை

பக்கம் 16

## பொலிஸ் அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், மே 23

யாழ். பிராந்தியத்துக்குட்பட்ட பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு உடனடியாக பொலிஸ் மா அதிபர் இலங்கக்கோனினால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இது உடனடியாக நடைமுறைக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதல், புங்குடுதீவு மாணவி கொலைக்குப் பின்னரான சம்பவங்கள் என்பவற்றைத் தொடர்ந்து இந்த இடமாற்றம் பக்.24

## கிளிநொச்சியில் நேற்றும் அஞ்சலி, ஆர்ப்பாட்டங்கள்

### புங்குடுதீவு மாணவி கொலைக்கு நீதி கேட்டு

கிளிநொச்சி, மே 23

கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவிக்கு நீதி வேண்டி நேற்றைய தினமும் கிளிநொச்சியில் மாணவர்கள், பொது அமைப்புகளால் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

புங்குடுதீவில் கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட மாணவி வித்தியாவுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று கூறி வடக்கு, கிழக்கில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாகத் தொடர் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும், கடை அடைப்புக்களும் இடம்பெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக நேற்றைய தினமும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் கவனவீர்ப்புப் போராட்டங்களும், அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கிளிநொச்சி விவேகானந்த வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களும் பாட சாலை சமூகமும் சேர்ந்து பக்.24



பாடசாலை மாணவிகள் வித்தியாவுக்கு அஞ்சலி செலுத்துகிறார்கள்

## மற்றொருவர் நேற்றுக் கைது

யாழ். மே 23

யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதிமீது நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் மற்றொரு நபர் நேற்று யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பக்.24

## போதை விற்பனை, பாலியல் தொந்தரவு 28 இடங்களில்

**பட்டியலிட்டது யாழ். மாவட்டச் செயலகம்**

யாழ்ப்பாணம், மே 23

போதைப் பொருள் விற்பனை செய்யும் இடங்கள், பாலியல் தொந்தரவு இடம்பெறும் பகுதிகள் என்பன யாழ். மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறான 28 இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, அந்த விவரங்கள் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் இதனைச் செய்துள்ளது.

மாவட்டத்தில் அதிகரித்துச் செல்லும் வன்முறைகள் தொடர்பில், மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடந்த சிறுவர் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்குத் திட்டமிட்ட ரீதியில் போதைப் பொருள் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றமை, மதுபானங்கள் வழங்குகின்றமை தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.


போதைக்கு பாடசாலை பக்.24

# மட்டு, திருமலை நேற்று ஹர்த்தாலால் முடக்கம்

### பள்ளி மாணவியின் கொலையை எதிர்த்து போராட்டங்கள் தீவிரம். அம்பாறையிலும் பல இடங்களில் கடையடைப்பு

யாழ்ப்பாணம், மே 23

புங்குடுதீவு பள்ளி மாணவியின் கோரக் கொலைக்கு நீதி கேட்டு வடக்கில் தீவிரம் பெற்ற போராட்டங்கள் கிழக்குக்குப் பரவிய நிலையில் நேற்று அங்கு உச்சம் பெற்றன. கிழக்கின் மூன்று மாவட்டங்களில் நேற்று முழுமையான ஹர்த்தால் நடத்தப்பட்டது. இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. அசம்பாவிதங்கள் எவையும் இன்றி அமைதியான முறையில் ஹர்த்தால் நடந்தேறியது.



மாணவியின் கோரக் கொலையைக் கண்டித்து வடக்கில் போராட்டங்கள் ஆரம்பித்ததும் கிழக்கிலும் மாணவர்கள் களத்தில் குதித்து போராட்டங்களை ஆரம்பித்தனர். கடந்த சில நாள்களாக அவர்களின் போராட்டங்கள் தொடர்ந்து நடந்தன. அவை பின்னர் பொது மக்களின் போராட்டங்களாகவும் விரிவு பெற்றன.

அடுத்த கட்டமாக, கிழக்கின் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது. அம்பாறையில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளும் ஏனைய இரு மாவட்டங்களும் முழுமையாக நேற்றுச் செயலிழந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 'நாம் திராவிடர்; தமிழர்களின் போர் வாள்' என்ற அமைப்பு ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. கொலையாளிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தினார்கள். கொலை பக்.24

## தெற்கில் பதற்றம் தேவையில்லை

யாழ். புங்குடுதீவு விவகாரம் தொடர்பில் வடக்கில் எழுந்துள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டமானது நியாயமானதாகும். இதனைக் கண்டு தெற்கு மக்கள் பதற்றப் படத்தேவையில்லை – என்று பிரதான எதிர்க்கட்சியான ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

சட்டம், ஒழுங்கு மீறப்பட்டமையாலேயே பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியது.

கொழும்பில் அமைந்துள்ள ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது:–

புங்குடுதீவு மாணவி கூட்டு பாலியல் வன்புணர்வு பின் கொலை செய்யப்பட்டமையானது கடும் தண்டனைக்குரிய குற்றமாகும். அவருக்கு இழைக்கப்பட்ட தீங்கைக் கண்டித்து வடபகுதி எங்கும் ஆர்ப்பாட்டம் செய்யப்படுவதானது பக்.24



## ரணிலுக்கு எதிராக விரைவில் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

80இற்கும் குறைவான நாடாளுமன்ற உறுப்பினர் களின் ஆதரவை மாத்திரமே கொண்டவராகக் காணப்படுகின்றமை, நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு வழிகோலியுள்ளமை மற் றும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான செயற்பாடுகளை முன்னெடுத்தமை ஆகிய காரணங்களுக்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விரைவில் பக்.24

## என்னையும் கொன்றுவிடுவார்கள் காப்பாற்றுங்கோ – கதறிய சிறுமி

*புங்குடுதீவு மாணவி கொலையால் எழுந்த கிளர்ச்சியால் மற்றொரு பாலியல் முறைகேட்டுச் சம்பவம் அம்பலம்*

*யாழ்ப்பாணம், மே 23*

*புங்குடுதீவில் மாணவி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்குப் பின்னர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து மக்கள் கிளர்ந்தெழுந்து நடத்திவரும் போராட்டம், மற்றொரு பாலியல் முறைகேட்டுச் சம்பவத்தை அம்பலப்படுத்தியுள்ளது.*

*மாணவி வித்தியாவின் கொலையைத் தொடர்ந்து, தனக்கும் அப்படிப்பட்ட நிலை வந்துவிடுமோ என்று பயந்த 14 வயதுப் பெண்பிள்ளை, தன்னைத் தொடர்ந்து பாலியல் முறைகேட்டுக்கு உள்ளாக்கி வந்த நபரை அரச அலுவலர்களிடம் அடையாளம் காட்டியுள்ளார்.*

*"வித்தியா அக்காவுக்கு நடந்தது மாதிரி என்னையும்* பக்.24

## அமைச்சர் சுவாமிநாதன் கண்டனம்

புங்குடுதீவு பள்ளி மாணவியின் கொலையை மீள்குடியேற்ற, புனர்நிர்மாண மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கண்டித்துள்ளார். இது தொடர்பில் அவர் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு நாட்டில் இது போன்ற சம்பவம் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வண்ணம் பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது யாழ்பாணத்தில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பை உறுதி செய்வதுடன் சட்டமும் நீதியும் நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதுவித அரசியல் தலையீடுகளுக்கும் அடிபணியாது சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அமைச்சர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குக் கூறியுள்ளார் என அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

"இந்த விடயத்தில் மக்கள் பொறுமை காத்து வன்முறைகளில் இறங்காது அமைதிகாத்து பாதுகாப்பு தரப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தாக்குதலுக்குள்ளான நீதிமன்றை பார்வையிட்டார் பிரதம நீதியரசர்

## கூடவே வந்திருந்தார் பொலிஸ் மா அதிபரும்



யாழ்ப்பாணம், மே 23

ஆர்ப்பாட்டக்காரர்களால் சேதப்படுத்தப்பட்ட யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியை பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் நேரில் பார்வையிட்டார். இதற்காக அவர் கொழும்பிலிருந்து நேற்றுக் காலை விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவருடன் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோனும் நீதிமன்ற வளாகத்திற்கு வந்து சேதங்களை மதிப்பிட்டார்.

புங்குடுதீவு மாணவியின் கொடூரக் கொலையைக் கண்டித்து கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணக் குடாநாட்டில் முழுமையான ஹர்த்தால் நடந்தது. யாழ். நகரில் ஊர்வலங்களும் கண்டன ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. இதன்போது யாழ். நீதிமன்றத் தொகுதிக்கு முன்பாகக் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர் திடீரென கட்டுமீறி நடந்து கொண்டனர். நீதிமன்றத்தின் மீதும் அங்கிருந்த வாகனங்கள் மீதும் கற்களைக் கொண்டும் கையில் கிடைத்த பொருள்களைக் கொண்டும் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் நீதிமன்றத் தொகுதியின் ஜன்னல் கண்ணாடிகள், கேற், மின்குமிழ் என்பன சேதமடைந்தன. நீதிமன்றின் முன்பாக நடப்பட்டிருந்த மரக்கன்றுகளும் நாசமாக்கப்பட்டன. இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 130 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பிரதம நீதியரசர் நேற்று யாழ்ப்பாணம் வந்தார். சேதங்களை நேரில் பார்வையிட்டார்.

அதன் பின்னர் பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள யாழ். சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி மக்கி, யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் திருமதி கனகா சிவபாதசுந்தரம், யாழ். மாவட்ட நீதிவான் கஜநிதிபாலன், யாழ். நீதிவான் மன்ற நீதிவான் பெசிவகுமார் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன், வடமாகாண சிரேஷ்ட மூத்த பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்க மற்றும் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சாந்தா அபிமன்னசிங்கம், செயலாளர் தவபாலன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (உ-4)

# முன்னாள் ஆயுதக் குழுக்கள் விசாரணையை தடுக்க சூழ்ச்சி

## கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 23

புங்குடுதீவு மாணவியின் கொடூரக் கொலை தொடர்பில் சரியான விசாரணை இடம்பெறாமல் தடுக்க சூழ்ச்சி இடம்பெறுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குற்றஞ்சாட்டினார்.

இந்தச் சூழ்ச்சியின் பின்னணியில், தீவுப் பகுதிகளை முன்னர் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஆயுதக் குழுக்களே – முன்னைய அரசுடன் சேர்ந்து இயங்கியவர்கள் – இருக்கின்றன என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தாம் நேரடியாகச் சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று நேரில் சந்தித்துப் பேசினர். சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலும் அவர்கள் கலந்துரையாடினர்.

இது தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்ததாவது:–

முன்னைய அரசுடன் தொடர்பாகவிருந்த ஆயுதக் குழுக்கள் – கட்சிகள், இந்த அவலச் சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக பாவித்து, எதிர்ப்புப் போராட்டங்களை வன்முறையாக மாற்றுவதற்குச் சதி செய்கின்றன. அது தெளிவு. மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும். இப்படியான படுகொலைகள் நடைபெறும் போது எதிர்ப்புக் காட்ட வேண்டும். அதில் மாறுபட்ட கருத்துக்கிடையாது. மக்களுடன் நாமும் இணைந்து செயற்படுவோம். ஆனால் அதனை வன்முறையாக மாற்றி வழக்கைத் திசை திருப்புகின்ற சூழ்ச்சி நடைபெறுவது தெரிகின்றது. சந்தேக நபர்கள் 4 பேரினது வீடுகளை தீயிட்டு எரித்துள்ளனர். அந்த வீடுகளில் இருந்திருக்கக்கூடிய தடயப் பொருள்கள் இதனூடாக அழிக்கப்பட்டிருக்கும் – எரிக்கப்பட்டிருக்கும். இனி அவற்றை எடுக்க முடியாது. இது ஓர் உதாரணம்.

இவ்வாறு வன்முறையைத் தூண்டி, சரியான விசாரணையை நடத்த விடாமல் தடுப்பதற்கு சில சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின் றது என்பதை, பிரதமருக்கு தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம் என்றார் – சுமந்திரன். (உ-5)

# சேதங்களை உடன் திருத்த பரிந்துரை

## நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் வழங்கினார்

யாழ்ப்பாணம், மே 23

ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலால் யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு ஏற்பட்ட சேதங்களை உடனடியாகத் திருத்தியமைக்குமாறு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு பிரதம நீதியரசர் பரிந்துரைத்துள்ளார்.

ஏற்படுத்தப்பட்ட சேதங்களை உடனடியாகத் திருத்தி சகலரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு யாழ். சட்டத்தரணிகள் சங்கம் பிரதம நீதியரசரிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்தது. நீதிமன்றத் தொகுதிக்கு ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிடுவதற்காக பிரதம நீதியரசர் நேரில் வருகை தந்தபோது இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. சங்கத்தின் கோரிக்கையை உடனடியாகப் பரிசீலனை செய்து சேதங்களைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதம நீதியரசர் உடனடியாகவே நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளருக்குப் பரிந்துரைத்தார்.

இது தொடர்பில் யாழ். சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் பா.தவபாலன் தெரிவித்ததாவது:–

பிரதம நீதியரசருடன் நடந்த கலந்துரையாடலில், புங்குடுதீவு மாணவியின் கொடூரக் கொலைக்கு யாழ். சட்டத்தரணிகள் சங்கம் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்தது. குற்றம் புரிந்தவர் எவராக இருந்தாலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க அனுமதிக்கப்படக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டது. பக்கம் 21

# வடக்கு சட்டத்தரணிகள் நேற்றுப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மே 23

யாழ். நீதிமன்ற வளாகம் மீதான தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து வடமாகாணத்திலுள்ள சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்தனர். அதனால் வழக்கு விசாரணைகள் பிறிதொரு தினத்திற்குத் தவணையிடப்பட்டன.

வடக்கிலுள்ள யாழ்ப்பாணம், மல்லாகம், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள நீதிவான் மன்றங்களிலும் மாவட்ட நீதிமன்றங்களிலும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. சட்டத்தரணிகள் எவரும் நேற்று நீதிமன்றத்துக்கு வருகைதரவில்லை.

பொதுமக்கள் போராட்டத்தின் போது நீதிமன்றம் தாக்கப்பட்டமை தவறான முன்னுதாரணம் என்று தெரிவிக்கும் சட்டத்தரணிகள் அதனை வன்மையாகக் கண்டித்துள்ளனர். அதற்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். திங்கட்கிழமை முதல் சட்டத்தரணிகள் தமது வழக்கமான பணிகளை ஆற்றுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை– யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 130 பேருக்காகவும் தாங்கள் நீதிமன்றங்களில் முற்படப்போவதில்லை என்று எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்று வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்தது. சங்கத்தின் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமான எம்.சிற்றம்பலம் இதனைத் தெரிவித்தார். வவுனியா நீதிமன்ற வளாகத்தில் நேற்று அவர் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசினார். அவர் தெரிவித்ததாவது:–

குடாநாட்டில் மாணவியின் கொடூரப் படுகொலை தொடர்பில் நீதி கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது நீதி வழங்கக் கூடிய ஓர் இடமும் தாக்கப்பட்டுள்ளது. அந்த சம்பவம் நீதிச் சேவையின் அடித்தளத்தை வீழ்த்திய ஒன்றாகவே இருக்கிறது. அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மக்களுக்கு நீதித்துறையிலே நம்பிக்கை இல்லை என்ற தன்மையை அது ஏற்படுத்தியுள்ளது. அதனை நாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இலங்கை நீதி நிர்வாகத் துறையைப் பொறுத்தவரை எந்த வித ஐயமும் இல்லாமல் நீதியை வழக்கக் கூடிய ஓர் அமைப்பாக நீதி நிர்வாகத்துறை இருந்து வருகின்றது. நீதிமன்றத்தை தாக்குவதன் மூலம் நீதியை கோரியவர்கள் எதை அடைய நினைத்தார்களோ எமக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் நிச்சயமாக நீதித்துறையின் மகத்துவத்தை கண்ணியத்தைக் குறைவாக எடைபோட்டுவிட்டார்கள். அதனை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாங்கள் விரும்பியவாறு எல்லாம் நீதி வழங்க வேண்டும் என கோருவது நியாயமில்லை. இலங்கை சட்டத்தின் படி குற்றவாளிகளுக்கு நிச்சயமாக தண்டனை வழங்கப்படும். அவர்களை எம்மிடம் தாருங்கள் நாங்கள் நீதி வழங்குகின்றோம் என மக்கள் கோருவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அது காட்டுமிராண்டித்தனமானது. இலங்கை சட்டத்தின்படி அவர்களுக்குச் சாவுத் தண்டனை விதிக்க முடியும் என்றால் விதிக்கப்படும். ஆயுள் தண்டனைதான் விதிக்க முடியும் என்றால் அதனைத்தான் வழங்க முடியும் – என்றார் அவர்.

"நீதிமன்றைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் மாணவர்களும் அடங்குகிறார்கள். கைதானவர்களில் சிலர் தவறு செய்யாதவர்கள். இவ்வாறான நிலையில் அவர்கள் சார்பாக சட்டத்தரணிகள் நீதிமன்றில் முற்பட மாட்டார்கள் எனக் கூறப்பட்டுள்ளதா?" என அவரிடம் கேட்கப்பட்டது.

"அவர்கள் சார்பாக முன்னிலையாக மாட்டோம் என நாம் தீர்மானம் எடுக்கவில்லை. அது யாழ். மாவட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு. வடமாகாணத்தில் தான் நாங்களும் இருக்கின்றோம். இருப்பினும் நாம் அப்படி எந்த ஒரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை" – என்றார். (உ-402)

# பயங்கரவாதம் மீண்டும் வடக்கில் உருவாகலாம்

## வீரவன்ஸவின் எச்சரிக்கை இது

கொழும்பு, மே 23

பாடசாலை மாணவி வித்தியா மீதான வன்புணர்வு மற்றும் கொலையின் பின்னணியில் வடக்கின் சிவில் வாழ்க்கை மீண்டும் ஒருமுறை பாதிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாத பட்சத்தில் வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தோற்றுவிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கில் இராணுவத்தினர் தங்களது தளங்களில் மாத்திரமே நிலை கொண்டுள்ளனர். இதனால் இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சட்டத்தையும் ஒழுங்கையும் பேண முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது.

இவ்விவகாரத்தின் காரணமாக வடக்கில் கடையடைப்பு முன்னெடுக்கப்பட்டது. இது நாட்டின் சட்டம் ஒழுங்குக்கு அச்சுறுத்தலானதுடன், மிக மோசமான நடவடிக்கையொன்றுக்கும் வழிசமைத்துள்ளது.

இதனால், தமிழ் ஆயுததாரிகள் மீண்டும் தலைதூக்குவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. எனவே சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றார் வீரவன்ஸ. (த)

# சைவ சமய , கலாசாரப் போட்டிகள் சுதுமலை அம்பாள் வி.க ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், மே 23

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் சைவ சமய அறிவுப் போட்டி, கலாசாரப் போட்டிகள் நடை பெறவுள்ளன.

இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கோலப் போட்டி, மாலை கட்டுதல் ஆகியன நடைபெறவுள்ளன. நாளை ஞாயிற்றுக்கிழமை சைவ சமய அறிவுப் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளன. தரம் 4, 5, 8, 9 மாணவர்களுக்கு காலை 9.00 மணிக்கும் தரம் 6,7,10,11 மாணவர்களுக்கு மு.ப 11.00 மணிக்கும் மேற்படி பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, செவ்வாய்க்கிழமை பண்ணிசைப் போட்டி பிரிவு 1,2 நடைபெறவுள்ளதுடன் மறுநாள் புதன்கிழமை பிரிவு 4,5 க்கான போட்டிகள் நடைபெறவுள்ளன. இவை பி.ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளன. தொடர்ந்து பேச்சுப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

போட்டிகள் அனைத்தும் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதுடன் ஒரு போட்டியாளர் சைவசமய அறிவுப் போட்டியிலும், ஏனைய போட்டிகளில் ஏதும் இரு போட்டிகளில் மட்டுமே பங்குபற்ற முடியும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-10)

# பொதுத் தேர்தலை நடத்த இரு மாத கால அவகாசம்

## கேட்கிறார் ஆணையாளர்

பொது தேர்தலொன்றை நடத்துவதற்குக் குறைந்தது இரு மாத காலமாவது அவகாசம் தருமாறு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கோரியுள்ளார்.

நடாளுமன்றம் கலைப்பது தொடர்பில் வெளியாகும் செய்திகளின் உண்மைத் தன்மை குறித்து ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட தினத்திலிருந்து பொதுத் தேர்தலுக்கு இரு மாதங்களாவது அவகாசம் வேண்டும் என அவர் இதன் போது குறிப்பிட்டார்.

இதேவேளை எதிர்வரும் ஜுன் மாதம் 10ஆம் திகதிக்கு முன்பாக நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (த)

# கட்டுநாயக்கவில் நேற்று யாழ். இளைஞன் கைது



கொழும்பு, மே 23

இந்தியப் பெண்ணொருவரின் கடவுச்சீட்டினைப் பயன்படுத்தி இத்தாலி செல்ல முயற்சித்த இளைஞன், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர் 34 வயதுடையவர் எனவும் யாழ்ப்பாணம், சுன்னாகத்தைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர், கடந்த 18 ஆம் திகதி, போலிக் கடவுச்சீட்டை வைத்து சவூதி அரேபியாவுக்குச் சென்று வந்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர், இந்தியப் பெண்ணொருவரின் கடவுச்சீட்டை எடுத்து தனது புகைப்படத்தை ஒட்டிப் பயன்படுத்தியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை நேற்று நீர் கொழும்பு நீதிவானிடம் முன்னிலைப்படுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(த)

# லசந்தவின் கொலை குறித்து மேர்வினிடமும் விசாரணை

கொழும்பு, மே 23

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான வழக்கு நேற்றுக் கல்கிசை நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவரிடம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக நீதிமன்றில் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதன்போதே முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவிடமும் இந்த கொலை தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து நீதிவான் குறித்த கொலை வழக்கை ஜுன் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன், வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு குற்றப் புலனாய்வு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (த-ரி)

# 20 ஆவது திருத்தம் குறித்து இன்னும் இணக்கமில்லை

## சொல்கிறார் நீதியமைச்சர்

கொழும்பு, மே 23

20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவது குறித்து இதுவரை எவ்வித இணக்கத்தையும் ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து கட்சித் தலைவர்கள் மட்டத்திலான பேச்சுக்கள் பலவற்றை நடத்தியுள்ளதாகவும், எனினும், இதுவரை எவ்வித இணக்கப்பாட்டுக்கும் வரமுடியாத நிலையினால், அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் நீதியமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 20 அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருடனும் விரிவான பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# க்லைபொசேட்டுக்கு நேற்று முதல் தடை

கொழும்பு, மே 23

இலங்கையில் 'க்லைபொசேட்' என்ற களை நாசினியை இறக்குமதி செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ நேற்று முதல் முற்றாகத் தடை விதித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் சிறுநீரக நோய் அதிகளவில் ஏற்படுவதற்கான காரணம் புற்கள் மற்றும் களைகளை அழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் க்லைபொசேட் என்ற களைநாசினி என ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை அடுத்து இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் பல வருட காலமாக க்லைபொசேட் என்ற களை நாசினி பயன்பாட்டில் உள்ளதாகவும், கடந்த அரசின் காலத்தில் தான் அதனை சுட்டிக்காட்டியதாகவும், எனினும் கடந்த அரசில் குறித்த அதிகாரிகள் அந்தக் களைநாசினிக்குத் தடை விதிக்க எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்தக் களைநாசினி யாழ்ப்பாணத்திலும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# மத்திய வங்கி மோசடியை அம்பலமாக்கினார் ரணில்

மத்திய வங்கியின் திறைசேரி முறிகளில் 10 மில்லியன் மாத்திரமின்றி சுமார் 2ஆயிரத்து 700 பில்லியன் ரூபா மோசடி இடம்பெற்றுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தகவல் வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுக் காலை இடம்பெற்ற கூட்டத்திலே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கியின் திறைசேரி முறிகளில் 10 மில்லியன் ரூபா மோசடி விவகாரம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஊடாகவே இந்த மோசடி தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

2012, 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் மத்திய வங்கியின் திறைசேரி ஊடாக வெளிப்படையற்ற வகையிலும் தனிப்பட்ட ரீதியிலும் இந்தமோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

அனைத்து மோசடிகளும் மத்திய வங்கிச் சட்டத் திட்டங்களுக்கு மாறாக இடம் பெற்றுள்ளதாகக் குறித்த குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)

# பாரத லக்ஸ்மன் கொலை வழக்கு ஜுன் 11ஆம் திகதி

கொழும்பு, மே 23

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் 10ஆவது நபராகக் குற்றஞ்சாட்டப்பட்ட எஸ்.கே.ஏ. கலபொட முன்னிலையாகாமலேயே வரும் ஜுன் மாதம் 11ஆம் திகதி விசாரணையை மேற்கொள்ளுமாறு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி டீ லீவேரா தென்னக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாருக்கு வழங்கிய முகவரியில் கலபொட இல்லையென்றும், ஆதலால் அவருக்கு அழைப்பாணையை அனுப்ப முடியாதுள்ளதாகவும் விசாரணையின்போது மூத்த அரச வழக்கறிஞர் துசித் முடலிகே குறிப்பிட்டார். (க)

# அகதிக் கோரிக்கை மீளாய்வுக்கு கனடாவில் தமிழருக்கு அனுமதி

மொன்றியல், மே 23

'எம்.வி சண்சீ' கப்பலில் கனடாவுக்குச் சென்ற புகலிடக் கோரிக்கையாளர் ஒருவரின் அகதிக் கோரிக்கையை மீள் பரிசீலனை செய்யக் கனேடிய பிராந்திய நீதிமன்றம் ஒன்று அனுமதி வழங்கியுள்ளது.

2010 ஆம் ஆண்டு கனடாவுக்கு சென்ற பாக்கியகுமார் பத்மநாதன் என்பவருக்கே இந்த அனுமதி கிடைத்துள்ளதாக வான்கூவர் கூரியர் செய்தி தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இவரின் அகதிக்கோரிக்கையை கனடாவின் குடிவரவுச் சபை நிராகரித்திருந்தது. அவர், இலங்கைக்குத் திரும்பினால் உயிருக்கு ஆபத்து இல்லை என்றும் அது குறிப்பிட்டிருந்தது.

விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைப் பேணினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவரின் கோரிக்கையைக் குடிவரவுச் சபை நிராகரித்திருந்தது.

எனினும் விடுதலைப்புலிகளுடன் நேரடித் தொடர்புகளைப் பத்மநாதன் கொண்டிருக்கவில்லை என்று பிராந்திய நீதிமன்றம் கண்டுள்ளது. எனவே அவரின் அகதிக் கோரிக்கையை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சண்சீ கப்பலில் கனடாவுக்கு சென்று பத்மநாதன் உட்பட்ட 500 பேர் அடைக்கலம் கோரினர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)









புங்குடுதீவு மாணவி படுகொலையைக் கண்டித்தும், குற்றவாளிகளுக்கு அதிகபட்சதண்டனை வழங்குமாறும் கோரியும் அனலைதீவு பாடசாலைகளின் மாணவர்கள் நேற்றுமுன்தினம் பாடசாலைகளுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சுலோகங்களைத் தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் அவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் வீதிகள் வழியாக பேரணியாகச் சென்று தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.



மாணவியின் படுகொலைக்கு நீதி வழங்கக் கோரி கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவர்கள் நேற்றுமுன்தினம் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாணவியின் படுகொலை தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் என அவர்கள் பேரணியின் போது வலியுறுத்தப்படுகிறது.









பளைப் பிரதேச பாடசாலைகளின் மாணவர்களும் நேற்று முன்தினம் மாணவியின் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். நேற்றுமுன்தினம் பளைப் பகுதியில் ஏ–9 வீதியில் ஒன்று கூடிய மாணவர்கள் பதாகைகளை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.



மாணவி வித்தியாவின் கொலையை கண்டித்து வவுனியா விவசாயக் கல்லூரி மாண வர்கள், ஆசிரியர்கள் இணைந்து நேற்றுமுன்தினம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கொலையாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்குவதன் மூலம் இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் தடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரினர்.

மாணவியின் கொலைக்கு நீதி வேண்டி உருத்திரபுரம் மகா வித்தியாலய மாணவர்களும் நேற்று முன்தினம் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். பதாகைகளுடன் ஒன்று கூடிய இவர்கள் மாணவியின் கொலைக்கு விரைவில் நீதி கிடைக்க வேண்டும் எனவும், மாணவர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.





# வீடமைப்பில் சிலர் அசமந்தப் போக்கு

## உதவியளிக்கும் நிறுவனங்கள் கடும் விசனம்

தென்மராட்சி, மே.23

வீடமைப்புத் திட்டம் பெற்றவர்களில் ஒரு சிலர் வீடுகளை அமைக்கவும் ஒரு சிலர் அமைத்த வீடுகளில் மீளக் குடியமரவும் தயங்குவதால் வீட்டுத் திட்டங்களை வழங்கிய அமைப்புகள் பிரதேச செயலகங்களுடன் வாதங்களில் ஈடுபடுவதுடன் வருங் காலத்தில் பிரதேசங்களுக்கு வீட்டுத் திட்டங்களை வழங்க மறுத்துவருவது குறித்து வீட்டுத் திட்டம் கிடைக்காத பொது மக்கள் கவலை தெரிவித்தனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்தியா வீடமைப்புத் திட்டம் மற்றும் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனம் ஆகியவை மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரிவுகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகளை அமைக்க நிதி உதவிகளை வழங்கியுள்ளன.அத்துடன் கட்டம் கட்டமாக மேலும் வீட்டுத் திட்டங்களை வழங்கவும் முன்வந்தனர்.

பிரதேச செயலகத்தினால் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஆரம்பக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்குமாறு அறிவித்தனர். தனங்களப்பு, மறவன்புலோ, எழுதுமட்டுவாழ் தெற்கு, ஓட்டுவெளி, கரம்பகம் ஆகிய பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவர்களில் சிலர் முதற்கட்ட நிதி வழங்கி மூன்று வருடங்களாகியும் வேலைகள் ஆரம்பிக்காத நிலையிலும், சிலர் வீடுகளை அமைத்த பின்னர் வீடுகளைப் பூட்டிவிட்டு வேறு இடங்களிலும் வசித்து வருகின்றனர். வேலைகள் தொடர்பாகப் பார்வையிட வரும் நிறுவன அதிகாரிகள் ஒரு சிலரின் அசமந்தப் போக்கினால் திட்டத்தைக் கைவிடும் நிலைக்கான இக்கட்டினை ஒரு சிலர் ஏற்படுத்தியுள் ளனர்.

இந்த நிலையில் வீட்டுத் திட்டம் கிடைக்காத சிலர் பிரதேச செயலகம் மற்றம் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும்போது அவர்களால் பிரிவுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்ட வேலைகளை பூர்த்தியடைந்த பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக ஆலோசிக் கப்படுமென கூறுகின்றனர். வீட்டுத் திட்டங்களுககுத் தெரிவு செய்யப்பட்ட ஒரு சிலரின் அசமந்தப் போக்கினால் ஏனையோருக்கு வீட்டுத் திட்டம் கிடைக்க முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது. பிரதேச செயுலக உயர் அதிகாரிகள், குறித்த வீட் டுத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு இதுவரை வேலைகளை ஆரம்பிக்காத மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளில் குடியமராதவர்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுத்த போதிலும் அவர்களின் நடவடிக்கைகளுக்கு பயனாளிகள் ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரியவில்லை.

இதனால் வீட்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி மீளப் பெறப்பட்டு நிதியினைவேறுபிரதேசத்திற்கு கொண்டு செல்லப்படும் அபாயம் உள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

(த-9)

## கரியாலைநாகபடுவான் மக்களுடன் அமைச்சர் டெனீஸ்வரன் சந்திப்பு



கிளிநொச்சி, மே 23

கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் கிராம மக்களை வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் சந்தித்து கிராமத்தைக் கட்டி எழுப்பும் செயற்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு கடந்த செவ்வாய் மாலை நடைபெற்றது. இதன்போது அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதேச செயலாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

அமைச்சர் குழுவினர் மக்களைச் சந்தித்து அவர்களது தேவைகள் மற்றும் குறைகள் தொடர்பாகவும், அங்குள்ள குளத்தின் நிலை குறித்தும், நன்னீர் மீன்பிடி மீன் குஞ்சுகள் வைப்பிலிடல் தொடர்பாகவும், பண்ணை உருவாக்குவது தொடர்பாகவும் பேசியதுடன் பலவாறான அபிவிருத்திகள் தொடர்பில் விரைவில் திட்டம் தயார் செய்து நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்தனர். (த-10)

## மஹிந்தவின் மோ.சைக்கிளால் பிரதேச செயலாளருக்கு சிக்கல்

### வாங்கியவர் வெளிநாடு சென்றதால்

மஹிந்த ராஜபக்ஷ அரசினால் சலுகை விலையில் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொண்ட வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர், வேலையிலிருந்து விலகி வெளிநாடு சென்றுள்ளார். இருப்பினும், குறித்த உத்தியோகத்தர் மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதியைச் செலுத்தாமல், பணியிலிருந்து விலகிச் சென்றுள்ளார்.

அவ்வாறு பணத்தைச் செலுத்தாமல், குறித்த உத்தியோகத்தரைப் பணியிலிருந்து விலகிச் செல்ல அனுமதித்தமை தொடர்பில், பிரதேச செயலருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றிய பெண் ஊழியர் ஒருவரே இவ்வாறு சென்றுள்ளார்.

மஹிந்தவினால், கடந்த ஆண்டு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மானிய அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது. குறித்த மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொண்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள், 5 ஆண்டுகளுக்கு அதனை உரிமம் மாற்றம் செய்ய முடியாது. அத்துடன் பணியிலிருந்து விலகிச் சென்றாலோ அல்லது வேறு பணிக்குச் சென்றாலோ மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதியை ஒரே தவணையில் செலுத்த வேண்டும். இந்த நிபந்தனையின் அடிப்படையிலேயே, மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் குறித்த உத்தியோகத்தர், மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதியைச் செலுத்தாது பணியிலிருந்து விலகி வெளிநாடு சென்றுள்ளார். அவ்வாறு செல்வதற்குப் பிரதேச செயலாளரும் அனுமதித்துள்ளார். இது தொடர்பில், மாவட்ட கணக்காய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் குறித்த பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, பணியிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தரிடம் பணத்தைச் செலுத்துமாறு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். (த-5-7)



யாழ்.நகரில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிகப் பொலிஸ் காவலரண் கடந்த புதன்கிழமை இனந்தெரியாதவர்களால் அடித்து நொறுக்கப்பட்டது. அது அந்த இடத்திலிருந்து பொலிஸாரால் நேற்று முன் தினம் அகற்றப்பட்டது. (த-4)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் கண்நோய்

தென்மராட்சி மே 23

அண்மையில் பெய்த கடும் மழையை அடுத்து தென்மராட்சிப் பிரதேசத்தில் கண்நோய் வேகமாகப் பரவி வருகிறது.

இந்த நோயினால் பீடிக் கப்படும் பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிறு பிள்ளைகள் தொடக்கம், முதியவர்கள் வரை கண்நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(த-9)

## கூட்டுறவாளர் மண்டபம் ஒட்டுசுட்டானில் திறப்பு



முல்லைத்தீவுமே 23

முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவாளர் மண்டபம் நேற்று ஒட்டுசுட்டான் முத்து ஐயன் கட்டு பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆர். பாலச்சந்திரனால் திறந்து வைக்கப்பட்டது.

முத்தையன்கட்டு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கிளைக் காரியாலயமாக இந்தக் கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த மண்டப திறப்பு விழாவில் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் சர்வானந்தராசா, உபதலைவர் கணபதிப்பிள்ளை, மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர் சிவரூபன், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-21)

## இ.போ.ச. பஸ் மீது கல் வீசித் தாக்குதல் சாரதி காயம்

வவுனியா, மே 23

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கி ஏ-9 வீதியூடாக பயணித்த இலங்கைப் போக்கு வரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் வவுனியா விவசாயப் பண்ணையை அண்மித்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாதவர்களால் கல் வீசித் தாக்கப்பட்டது. இதனால் பஸ் சாரதி காயமடைந்து திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கி ஏ-9 வீதியூடாக பயணித்த இ.போ.ச பஸ் வவுனியா விவசாயப் பண்ணையை அண்மித்தவேளை வவுனியாவில் இருந்து ஓமந்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பஸ்ஸை நோக்கிக் கல்லால் எறிந்து விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் சாரதி காயம் அடைந்ததுடன் பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடியும் உடைந்துள்ளது. காயம் அடைந்த சாரதியின் கண்களில் கண்ணாடித் தூள்கள் பட்டும், கைகளில் காயம் அடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். திசாநாயக்க உதயங்க (வயது -28) என்பவரே காயமடைந்தவராவார். (த-421)

## அறுந்த மின் கம்பிகளை அகற்றாத மின்சார சபை



வவுனியா, மே 23

வவுனியா-யாழ்.வீதியில் சோயோ ஒழுங்கைப் பகுதியில் இரவு நேரம் மின்கம்பி அறுந்து வீடுகளின் முன்னால் வீழ்ந்தமை குறித்து மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டபோதும் அவர்கள் உடனடியாக அதனைச் சீர் செய்யவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளை மின்சாரம் வழங்கப்படும் கம்பிகள் அறுந்து வீடுகளின் முன்னால் வீழந்துள்ளது. சிறுவர்கள் அதிகமாக உள்ள பகுதியாகையால் அப்பகுதி மக்கள் மின்சார சபைக்குச் சம்பவத்தைத் தெரியப்படுத்தி மின்கம்பிகளை மீள இணைத்து விடுமாறு கோரியுள்ளனர்.

எனினும் வவுனியா மின்சார சபையினர் வட மாகாண மின்சார சபைக்கு அறிவித்தலை வழங்குமாறு தெரிவித்துள்ளனர்.

இதன் பிரகாரம் அப்பகுதி மக்கள் வடக்கு மாகாண மின்சார சபைக்கு அறிவித்தலை வழங்கியபோதிலும் சுமார் 4 மணி நேரம் மின்சாரக் கம்பிகள் அகற்றப்படவில்லை. இதன் பின்னர் மீண்டும் அப்பகுதி மக்கள், உயிராபத்துக் கருத்தி விரைவாக மின்சார கம்பிகளை அகற்றுமாறு வடக்கு மாகாண மின்சார சபையிடம் கோரியபோதிலும் சுமார் 9 மணி நேரம் கழித்தும் மின்கம்பிகள் அகற்றப்பவில்லை.

இதேவேளை அப்பகுதி வீடுகளுக்கும் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(த)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப் பார்கள்.

**இடபம்:** இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நம்பிக்கைக்குரியவர்கள் சிலர் உதவுவார்கள்.

**மிதுனம்:** கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பண வி-யத்தில் கறாராக இருங்கள்.

**கடகம்:** கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவது நல்லது. பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனதை வாட்டும். சகோதர வகையில் பிணக்குகள் வரும். யாருக்கும் சாட்சிக் கையொப்பமிட வேண்டாம்.

**சிங்கம்:** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். சொந்தம்-பந்தங்களில் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வீட்டை அழகு படுத்துவீர்கள்.

**கன்னி:** திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் இழுபறியாக இருந்து வந்த சிக்கல்களுக்கு விடிவுக் கிடைக்கும்.

**துலாம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். பழைய உறவினர், நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

**விருச்சிகம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். உறவினர், நண்பர்களால் அன்புத் தொல்லைகள் உண்டு. உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும்.

**தனுசு:** கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்துபோகும். வாகனத்தை சரி செய்வீர்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். யோகா, தியானத்தில் மனம் லயிக்கும்.

**மகரம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். நெடுநாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித்தருவீர்கள். அக்கம் – பக்கம் வீட்டாரின் ஆதரவுப் பெருகும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். பழைய கடன் பிரச்சினையில் ஒன்று தீரும். புதுப் பொருள் சேரும்.

**மீனம்:** நீண்ட நாள்களாக பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும்.

## இதற்கும் வாக்கெடுப்பா?

ஓரினச்சேர்க்கை திருமணம் உலகம் முழுவதும் சர்ச்சைகளை சந்தித்து வந்தாலும், இத்தகைய திருமணத்துக்கு சில நாடுகளில் சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டு உள்ளது. அந்தவகையில் ஓரினச்சேர்க்கை திருமணத்துக்கு அங்கீகாரம் அளிப்பது தொடர்பாக அயர்லாந்தில் வாக்கெடுப்பு நடக்கிறது.

இந்த வாக்கெடுப்புக்காக ஓரினச்சேர்க்கை ஆதரவாளர்களும், எதிர்ப்பாளர்களும் வீடு வீடாக சென்று தங்களுக்கு ஆதரவாக வாக்குகளைச் சேகரித்து வருகிறார்கள். இந்த வாக்கெடுப்பில் ஓரினச்சேர்க்கை ஆதரவாளர்களே வெற்றி பெறுவர் என கருத்துக்கணிப்பு தெரிவிக்கிறது.

இவ்வாறு ஓரினச்சேர்க்கை ஆதரவாளர்கள் வெற்றி பெற்றால், உலகிலேயே வாக்கெடுப்பு மூலம் ஓரினச்சேர்க்கைத் திருமணத்தை சட்டபூர்வ மாக்கிய முதல் நாடு என்ற பெருமையை அயர்லாந்து பெறும். ஆனால் இந்த வாக்கெடுப்புக்கு அங்குள்ள கிறிஸ்தவ அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்று, சொல்லுற பெரியவங்களே உங்ககிட்ட, ஒரே ஒரு குறுக்குக் கேள்வி? நல்ல மாட்டுக்கு எதுக்கு சூடு வைக்கிறீங்க?





## எப்படியும் நடிப்பேன்

பூ, மரியான், உத்தம வில்லன் படங்களில் நடித்திருப்பவர் பார்வதி. அவரிடம், எந்த வகையான படங்களில் நடிக்க விரும்புகிறீர்கள் என்று கேட்டதற்கு, எந்த வகைப் படமாக இருந்தாலும், யாருடன் வேண்டுமானாலும் நான் பணியாற்றத் தயார்.

ஆனால் அவர்கள் ஏமாற்றுப் பேர் வழியாகவோ, பின்னால் குழி பறிப்பவர்களாகவோ இருக்கக்கூடாது. நேர்மையான முறையில் வரும் எந்த வேடமாக இருந்தாலும் ஏற்பேன். இதுதான் எனக்கு நானே வகுத்திருக்கும் வரையறை.

எவ்வளவு சம்பளம் தருகிறார்கள் அல்லது ரசிகர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்ற எண்ணத்தில் எந்தப் படத்தையும் ஏற்பதில்லை. வர்த்தக ரீதியிலான படம், விருதுப் படம் என்றும் பிரித்துப் பார்ப்பதில்லை. என் மனதுக்கு பிடித்த எந்த பாத்திரமாக இருந்தாலும் நடிப்பேன்.

இரட்டைக் கதாநாயகிகள் படங்களில் நடிப்பது பற்றி கேட்கிறார்கள். எத்தனை கதாநாயகிகள் நடித்தாலும் எனக்கு பிடித்த கதாபாத்திரம் வரும் பட்சத்தில் கண்டிப்பாக நடிப்பேன்.



## இது செல்பீ இல்லை எல்பீ

தாய்லாந்தில் யானையுடன் செல்பீ எடுத்துக் கொண்டிருந்தவரின் செல்போனை பிடுங்கி யானையே எடுத்த எல்பீ படம் இன்ஸ்டாகிராமை கலக்கி வருகிறது.

தாய்லாந்தைச் சேர்ந்த கிறிஸ்டியன் பல்கலைக் கழக மாணவர். கடந்த 2 மாதங்களாக இவர் காட்டுப் பகுதியில் தங்கி வருகிறார். அங்கிருக்கும் யானைகளிடம் பாசத்துடன் பழகும் அவர், யானைகளுக்கு வாழைப்பழங்களை ஊட்டி விட்டார். திடீரென வாழைப்பழங்கள் அனைத்தும் தீர்ந்து விட்டன.

உடனடியாக அந்த யானை, கிறிஸ்டியன் கையில் இருந்த செல்போனை பிடுங்கிக் கொண்டது. செல்போன் கமரா டைம்லப்ஸ் மோடில் இயங்கிய நிலையில் அழகான செல்ஃபீ படம் கிளிக்கியது.இப்போது இன்ஸ்டாகிராமில் யானை எடுத்த செல்ஃபீ எல்பீ என்ற பெயரில் பரவி வருகிறது.

## பட்டையைக் கிளப்பவுள்ள மாஸ்

சூர்யாவின் நடிப்பில் வெளிவர இருக்கும் மாஸ் திரைப்பட டீசர் கடந்த மாதம் 24 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அன்று முதல் இதுவரை 30 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் இந்த டீசரைப் பார்த்து ரசித்திருக்கிறார்கள்.

அஜித், விஜய் படங்களுக்கு அடுத்து ரசிகர்கள் அதிகம் பேர் நடிகர் சூர்யாவின் டீசரைப் பார்த்து ரசித்திருப்பதால் அடுத்த மாஸ் ஹீரோ சூர்யா தான் என்று அவரது ரசிகர்கள் ருவிட்டர் சமூக வலைதளங்களில் இதனைக் கொண்டாட ஆரம்பித்து விட்டார்கள்.

ஆதவன் படத்திற்குப் பின் நயன்தாராவுடன் சூர்யா சேர்ந்து நடிப்பதால் சூர்யாவின் ரசிகர்கள் ஆவலுடன் காதல் காட்சிகளை எதிர்பார்த்தனர், ஆனால் இயக்குநர் வெங்கட் பிரபு இருவருக்கும் இடையே நெருக்கமான காட்சிகள் எதுவும் இல்லை என்று கூறி அந்த ஆர்வத்தில் தண்ணீரை ஊற்றி அணைத்து விட்டார்.

இதுவும் பேய்ப் படம்தான். ஆனால் இதுவரை வந்த பேய்ப் படங்களிலேயே இது ஒரு வித்தியாசமான பேய்ப்படம் என்கிறார்கள். எடுக்கிறது பேய்ப்படம், அதில என்ன வித்தியாசம் வேண்டி இருக்கு...?



# சமூக விஞ்ஞானப் போட்டிகளில் முதல் 10 இடம் பெற்ற மாணவர்

தென்மராட்சி,மே 23

கல்வி அமைச்சினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகளில் அகில இலங்கை நிலை மற்றும் தேசிய நிலை ஆகியவற்றில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரங்களும் அதற்கான சான்றிதழ்களும் அந்தந்த கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயத்தில் தேசிய நிலையில் ஒரு மாணவியும் அகில இலங்கை நிலையில் எட்டு மாணவர்களும் முதலிடங்களைப் பெற்ற சாதனை படைத்துள்ளனர். தேசிய நிலையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**மாணவி ( தரம் 9 )**

ரி.தரணிகாவும் அகில இலங்கை நிலையில் பாடசாலை வகை ரீதியாக 200க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளிடையே இடம்பெற்ற போட்டிகளில்

**தரம் 7 இல்**

ரி.சுவர்ணா – மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்

**தரம் 8 இல்**

வை. கோபிசன் – மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்

**தரம் 10 இல்**

எஸ்.கஜானன் – மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்

201 க்கும் 500க்கும் இடைப்பாட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில்

**தரம் 9 இல்** ரி.ஜீவிதா – மிருசுவில் அ.த.க. பாடசாலை

1000 மாணவர்களுக்கு மேற்பட்ட பாட சாலைகளில் **தரம் 9 இல்** ரி.தரணிகா – சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியோரும் அந் தந்தப் பிரிவுகளில் முதலிடங்களைப் பெற்றுள் ளனர். இவர்களுடன் ( 200க்குக் குறைந்த மாணவர் பிரிவில் )

**தரம் 7 பிரிவில்** ரி.துஸானா ( 3 ) மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்

**தரம் 8 பிரிவில்** வீ.பிரியங்கா ( 6 ) மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்

பீ.பவனயா ( 8 ) மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்

**தரம் 9 பிரிவில்** கே.மதுஸன் ( 9 ) கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை

கே.சர்மினி ( 9 ) மந்துவில் ஸ்ரீபாரதிவித்தியாலயம்

**தரம் 10 பிரிவில்** எஸ்.சர்மிலன் ( 6 ) மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்

**தரம் 11 பிரிவில்** பீ.சாருஜா ( 2 ) நாவற்குளி ம.வி., என்.பவித்ரா ( 7 ) மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்

201க்கும் 500க்குமிடைப்பட்ட பாடசாலைகளில்

**தரம் 6 பிரிவில்** எம்.கோசயன் ( 10 ) மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி

**தரம் 10 பிரிவில்** ஏ.பிரியந்தினி ( 8 ) கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. **தரம் 11 பிரிவில்** என்.லிருஜனன் ( 5 ) விடத் தற்பளை கமலாசனி வித்தியாலயம் 501க்கும் 1000க்கும் இடைப்பட்ட மாணவர் களைக் கொண்ட பாடசாலைகளில்

**தரம் 6 பிரிவில்** கே.பிரதாப் ( 4 ) வரணி மத்திய கல்லூரி, வீ.சுவேதா ( 9 ) நாவற்குளி ம.வி.

**தரம் 7 பிரிவில்** எஸ்.துலாஞ்சலி ( 4 ) மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி **தரம் 8 பிரிவில்** கே.கவினா ( 2) மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி **தரம் 10 பிரிவில்** பீ.சங்கீதன் ( 2 ) மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மு.கவிப்பிரியா ( 4 ) மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

**தரம் 12 பிரிவில்** ரி.பிரசாயினி ( 6 ) மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி 1000க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில்

**தரம் 6 பிரிவில்** எஸ்.கஜந்தன் ( 5 ) சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆர்.தவினுபன் (6) சாவகச்சேரி இந்துக் கல்லூரி **தரம் 8 பிரிவில்;** ரி.சுந்தர்பவன் ( 6 ) சாவகச்சேரி இந்துக்கல்லூரி

**தரம் 9 பிரிவில்** எஸ்.டனுஜன் ( 2 ) சாவகச்சேரி இந்துக் கல்லூரி **தரம் 10 பிரிவில்** கே.கம்சிகா ( 4 ) சாவகச்சேரி இந்துக்கல்லூரி

தேசிய நிலையில் எஸ்.டனுஜன் இரண்டாமிடம்) சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (த–9)

## சாவகச்சேரி வணிகர் மன்ற பொதுக் கூட்டம்

தென்மராட்சி மே 23

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 36 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு்ப.10 .00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறும் கூட்டத்திற்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறப்பினர் மாவை சேனாதிராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் , டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் மன்றத்தில் வைப்பிலிடப்பட்டுள்ள கல்வி அபிவிருத்தி நிதியங்களிலிருந்து 110 மாணவர்களுக்கு வருடாந்த, மாதாந்த கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கல், மன்றின் விதவை மற்றும் மாற்றுவலுவுள்ளோர் நிதியங்களிலிருந்து வறுமைக் கோட்டின் கீழ் உள்ள விதவை மற்றம் மாற்றுவலுவுள்ளோருக்கு நிதி வழங்கல், மன்றின் சேமிப்புத் திட்டத்தில் முன்னிலையில் உள்ள மன்ற உறுப்பினர்களை கௌரவித்தல் போன்றவை இடம் பெறுமெனச் செயலாளர் அறிவித்துள்ளார். (த–9)

## திருமண வாழ்த்து

**இன்று 23.05.2015 திருமண பந்தத்தில் இணையும்**

திரு.திருமதி
காராளசிங்கம் நாகேஸ்வரி
தம்பதியரின் செல்வப்புதல்வன்
திருவளர் செல்வன்
**கௌரிசன்**
அவர்களையும்

திரு.திருமதி
கௌரிபாலா றஜ்சினி
தம்பதியரின் செல்வப்புதல்வி
திருவளர் செல்வி
**காயத்திரி**
அவர்களையும்





**மேலும் பல செல்வங்கள் பெற்று**
**பல்லாண்டு காலம்**
**வாழ வாழ்த்துகின்றோம்.**

Wedding Wishes

சுடர்கல்வி நிறுவனம்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.




# மல்லாகம் பெரியதம்பிரான் திருக்கோயில்
# வைகாசிப் பொங்கல் பெருவிழா – 2015.05.24

### பிரதம பூசகரின் பிரார்த்தனை



பழம் பெரும் ஆலயங்களுக்குள் எமது ஆலயமும் ஒன்றாகும். நீண்டகாலமாக எமது முன்னோர்களால் பேணப்பட்டுவரும் சடங்கு முறையிலான வழிபாடுகளை நிறைவேற்றுவதற்கு பெரிய தம்பிரானின் திருவருள் பெருகிவருகிறது.

**சிவபூஜாதுரந்தரர்**
**வை. அப்புத்துரை (பெரியதம்பி)**

### மதுரகவியின் வழிபாட்டம்சம்



யாழ்ப்பாணத்தில் பெரிய தம்பிரான் வழிபாடு நினைத்த மாத்திரத்திலோ செய்யப்படு வதில்லை ஒரு நியதிக்கு அமைவாக சடங்கு முறைகளால் ஒழுங்கு படுத்தப் பட்டனவாகவே அமைகின் றன. பெரிய தம்பிரான் வழிபாட்டாளர்களால் ஒரு பத்ததி முறையினை கடைப் பிடித்து ஆண்டுதோறும் பொங்கல் பெருவிழா நடை பெற்று வருவது சிறப்பம்சமாகும்.

**செந்தமிழ் கலைஞானி**
**வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்.**

இன்று (23.05.2015) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு மல்லாகம் கோயில் வீதி, சாடி மனையிலிருந்து பொங்கல் வழிபாட்டுக்குரிய வளந்து பானை பொங்கல் பண்டங்கள் பெரிய தம்பிரான் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லும் திருப்பவனி இடம்பெறும்.

நாளை (2015.05.24) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக நிகழ்வுகள் ஆரம்பமாகி முற்பகல் 10.00 மணிக்கு பொங்கல் வழிபாடும் முற்பகல் 11.00 மணிக்கு தீமிதிப்பு வைபவமும் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும்.

**ஓம் (T.V) யில் வைகாசிப் பொங்கல் வழிபாடுகள் ஒளிபரப்பாகவுள்ளன**

**ஒளிபரப்பு நேர்முக வர்ணனை நிகழ்த்துபவர்: வர்ணனைக் கலாநிதி. மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வைகாசிப் பொங்கல் விழா சிறப்பாக அமைய வாழ்த்துபவர்**

**நதியா நகைமாடம்**
இல.02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 221 7189, 021 567 0313
அழகிய தங்க நகைகள் என்றதும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**கண்ணகி அம்பாள் மர விற்பனை நிலையம்**
KANNAGI AMBAL TIMBER SALE CENTRE
KADDUDAI, MANIPAY, JAFFNA-
கட்டுடை, மானிப்பாய்,
யாழ்ப்பாணம்.

**யாழ். வைரவி கடைச்சல் தொழிலகம்**
இல.445, கே.கே.எஸ். றோட்,
சிவன்கோயிலடி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர் - V.றூபன்

# மரண அறிவித்தல்



மலர்வு
1937 . 10 . 10

உதிர்வு
2015 . 05 . 17

## செல்வி இந்திராணி தம்பாப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை)

உடுப்பிட்டி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இந்திராணி தம்பாப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை) 17.05.2015 அன்று காலமானார். அன்னார், காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை நாகரத்தினம் தம்பதியினரின் மகளும், கனகராணி, சுதேசராணி ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், சதாசிவம் ஆகியோரின் மைத்துனியும், தனுஜாந்தினி (Canada), கிருஜாந்தினி (Canada), பிரணவரூபன் (U.K), சுகந்தினி (Australia), ஜமுனாதீரன் (Colombo), ஆகியோரின் சிறிய தாயும், சாருமதி (Canada), சாரங்கன் (Colombo) ஆகியோரின் பெரிய தாயுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 24.05.2015 ஞாயிற்றுக்கிழமை, காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பவாளி இந்துமயானதிற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
15ம் கட்டையடி, உடுப்பிட்டி
Tel- 077 0746540

# மரண அறிவித்தல்



மலர்வு
02 . 09 . 1936

உதிர்வு
21 . 05 . 2015

## திருமதி முத்தம்மா செல்லையா (ரீச்சர்)

(இளைப்பாறிய ஆசிரியை பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

கைதடியை பிறப்பிடமாகவும் பலாலி, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை **முத்தம்மா செல்லையா** 21.05.2015 வியாழக்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியர் காசிப்பிள்ளை செல்லையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கமவிதானையார், வல்லிபுரம் சண்முகம் - தில்லைப்பிள்ளை சண்முகம் அவர்களின் மூத்தமகளும், காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற ஆசிரியர் சின்னத்தம்பி காசிப்பிள்ளை-சின்னப்பிள்ளை காசிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், திருமதி.சத்தியகலா சக்திவேல்(அவுஸ்திரேலியா), திருமதி.நித்தியகலா மோகன்(கொமர்ஷல் வங்கி - தலைமைக் காரியாலயம்), திருமதி.சத்தியானந்தி ஜீவகாந்தன்(கனடா), திருமதி. சதேஷ்வரி ஸ்ரீனிவாசன் (ஆசிரியை - யாழ்ப்பாணம்), Dr.செல்லையா செந்தில் குமரன் (Lady Ridgeway Hospital for Children Colombo), செல்வி ரேணுகா செல்லையா (கொழும்பு),திருமதி.சியாமளா இரவீந்திரன் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு அம்மாவும், மகேந்திரன் சக்திவேல் (அவுஸ்திரேலியா), பொன்னுத்துரை மோகன் (சவுதிஅரேபியா), தாமோதரம்பிள்ளை ஜீவகாந்தன்(கனடா), .காசிராசா ஸ்ரீனிவாசன்(யாழ்ப்பாணம்), திருமதி.தயாளினி செந்தில்குமரன் (கொழும்பு), இராமச்சந்திரன் இரவீந்திரன்(டென்மார்க்), ஆகியோரின் அன்பு மாமியும் ஆகாஷ், ஆகீஷன், அஸ்விக்கா, அஞ்சனா, மாதங்கி, சுபாங்கி, ஷாயினி, சேயோன் ஆகியோரின் ஆசை அம்மம்மாவும், ரக்ஷயா, ரக்ஷயன் ஆகியோரின் அருமை அப்பம்மாவும் கைதடியைச் சேர்ந்த சிவபாக்கியம் சின்னத்தம்பி காலஞ்சென்றவர்களான சண்முகம் வீரசிங்கம், சண்முகம் விவேகானந்தன் மற்றும் நாகேஸ்வரி சிவசிதம்பரம், புஸ்பமலர் சிவபாலன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் இன்று (23.05.2015) சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை பார்வைக்கு வைக்கப்படும். நாளை (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பொரளை கனத்தை இந்து பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
43-2/2, பீற்றர்சன் லேன், கொழும்பு-06

தகவல்:
Dr.செல்லையா செந்தில்குமரன் 077 777 7583 (மகன்)
திருமதி நித்தியகலா மோகன் 077 311 3655 (மகள்)

(சி/16136)(9.3.7)

## பெருந் திருவிழா

தென்மராட்சி, மே. 23

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். எதிர்வரும் முதலாம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் பெருந் திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ பாலஉதயகாந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (த-9)

## செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் பங்குப் பணிமனை திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 23

செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய பங்குப்பணி மனையின் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது என தாளையடி செம்பியன் பற்றுப் பங்குத்தந்தை எம். யேசுறட்ணம் அடிகளார் தெரிவித்தார். (த)


## நூல் அறிமுக விழா

தென்மராட்சி, மே 23

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் வே.தபேந்திரன் எழுதிய யாழ்ப்பாண நினைவுகள் நூல் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றம் சுகாதார சுதேச மருத்துத் துறை அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கலந்து கொள்வார். (த-9)

# மரண அறிவித்தல்



## பொன்னையா வேலுப்பிள்ளை

(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரி)

யாழ்ப்பாணம், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் முத்திரைச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா வேலுப்பிள்ளை 21.05.2015 அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், லங்காதேவியின் கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கப்பொன்னு, விசாகப் பெருமாள் மற்றும் செல்லப்பாக்கியம் (India), சிவஞானசுந்தரம் (புலவர்சிவா, திருநெல்வேலி), சிவகெங்கை (Colombo) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கௌரி (Germany) காலஞ்சென்ற கண்ணன் (Canada) மற்றும் வாசுகி (Germany), துளசி (UK), முகுந்தன் (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும், சௌந்தரநாயகம் (Germany), அநுராதா (Canada), தவராஜசிங்கம் (Germany), கணேசநாதன் (UK), ஸ்ரீரஞ்சனி (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயந்தன், சுஜீந்திரன், நிரோஜி, அச்சுதன், யாதவன், காவிகா, பாரதி, சந்தோஷ், ஆகாஷ், ஹரிசன், அனுஷன், ஒஷோ, தானியா ஆகியோரின் பாசமிகு பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை 41/4, செம்மணி வீதி, நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 9.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(60067) (4.3.6)

## கைதடிக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபை தெரிவு

கைதடி, மே. 23

தென்மராட்சி மேற்கு (கைதடி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபைத் தெரிவுக்கான பொதுக்கூட்டம் அண்மையில் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

புதிய இயக்குநர் சபையின் தலைவராக இளையவன் கந்தசாமியும், உப தலைவராக தில்லைநாதன் தங்கவேலும், இயக்குநர் சபை உறுப்பினர்களாக செல்லையா குமாரசாமி, செல்லன் அழகராசா, கோபாலப்பிள்ளை கௌரிதாசன், கந்தையா செல்வராணி, அருளம்பலம் தயாதரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தப் பொதுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சசிதரன் ஆகியோர் கலந்து கொண்டு தெரிவுகளை மேற்கொண்டனர். (த-288)

## சாவகச்சேரி நகரசபைக்கு வாகனம் கையளிப்பு

தென்மராட்சி மே 23

சாவகச்சேரி நகரசபைக்கு உள்ளூராட்சி அமைச்சினால் நேற்று முன்தினம் வாகனம் கையளிக்கப்பட்டது. சபையின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய் பைக்கோ வாகனம் நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையிடம் மத்திய உள்ளூராட்சி அமைச்சினால் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)


### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திருமதி புஸ்பவதி அகிலலோகநாயகம் அவர்களுடைய அன்புத் தாயார்

**திருமதி மகிழம்மா துரையப்பா**

அவர்கள் 06.05.2015 சிவபதமடைந்துள்ளார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/இணுவில் மத்திய கல்லூரி.

(60069) (10.6)


## ஆசிரியர் இல்லை மாணவர் பாதிப்பு

பளை, மே 23

பளை மாசார் அ.த.க.பாடசாலையில் கணித விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதாக பெற்றோர் தெரிவித்தனர். பாடசாலையில் கடமையாற்றிய கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்கள் இடமாற்றல் செய்யப்பட்ட பின்னர் இன்னமும் பதிலீடாக ஆசிரியர் வழங்கப்படாததால் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தனர். (த-9)

## நெல்லியடி முருகமூர்த்தி மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 23

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த மஹோற்சவத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி இரவு 7 மணிக்கு மஞ்சத்திருவிழாவும் 31ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் இரவு 7 மணிக்கு சப்பரத்திருவிழாவும் ஜூன் முதலாம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (த)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 . 12 . 1943

உதிர்வு 03 . 06 . 2014

அமரர்

**செல்லையா சிவப்பிரகாசம்**

எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றிருந்தாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது
என்றும் ஈரவிழிகளுடன் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

மீசாலை வடக்கு,
மீசாலை.

(41141)(3,7,9)

குடும்பத்தினர்.


## சாவகச்சேரி மத்தியஸ்தர் சபைக்கு 41 புதிய உறுப்பினர்கள் நியமனம்

தென்மராட்சி மே 23

சாவகச்சேரி பிரதேச மத்தியஸ்தர் சபைக்கு புதிய மத்தியஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமனக் கடிதங்கள் நீதி அமைச்சின் மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பிரதேச செயலகத்தில் 5 நாள்கள் பயிற்சிகள் வழங்கப்பட்டு பரீட்சை நடத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மே முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் 5 பெண்கள் உட்பட 41 பேர் சாவகச்சேரி மத்தியஸ்தர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள தவிசாளர் உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான நிய மனக் கடிதங்கள் கையளிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பே பற்பார் களெனவும் தெரிவிக்கப்பட்டது இதேவேளை, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மத்தியஸ்தர் சபைக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## பொதுக் கூட்டம்

சுழிபுரம், மே 23

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் பரிபாலனசபை வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மு.ப.9.30 மணிக்கு ஆலய முன் மண்டபத்தில் சபைத் தலைவர் சி.கைலாசநாதன் தலைமையில் நடைபெறும். (த-28)

## வைகாசிப் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், மே 23

மல்லாகம் நீலியம்பனை பெரியதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு விசேட அபிசேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு தீமிதிப்பு வைபவம் இடம்பெறும். (த-14)


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 21 . 12 . 1935

மறைவு 23 . 04 . 2015

திருமதி

**ஞானாம்பிகை விவேகானந்தர்**

கடந்த 23. 04. 2015 சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் ஞானாம்பிகை விவேகானந்தர் அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை இன்று (23.05.2015) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவின் போது நேரில் கலந்தும் மற்றும் பல வழிகளிலும் துயர்பகிர்ந்தோர் யாவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தச்சன் தோட்டம்,
அச்சுவேலி - தெற்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.



### 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 12.10.1986

விண்ணின் மடியில் 23.05.1998

**அமரர் தூ.போல் கஜேந்திரன்**

(முன்னாள் தரம்-07 மாணவன், சென் ஜோன்ஸ் கல்லூரி)

மகனே! அண்ணா! நீங்கள் எம்மை
விட்டுப்பிரிந்து பதினேழு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்கள்
மனதில் நிழலாகவே இருக்கும்

வே.தூயகுமாரன்
(பாதுகாப்பு நிணைக்களம், யாழ். பல்கலைக்கழகம்)

உங்கள் நினைவுகளுடன் வாழும்
அம்மா, அப்பா, சகோதரர்கள்.



### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

**இராமலிங்கம் இராசதுரை (J.P)**

(உறுப்பினர் - வலி.தெற்கு பிரதேசசபை)

தோற்றம் 02.01.1940

மறைவு 24.04.2015

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளின்போது தொலைபேசி மூலமும், நேரில் வந்தும், கண்ணீர்அஞ்சலி வெளியிட்டும்,அஞ்சலியுரைகள் ஆற்றியும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில், கிழக்கு, சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்
## சுப்பிரமணியம் தர்மராஜா

(பெற்றா அண்ணை)



தோற்றம்
24
.
12
.
1952

மறைவு
04
.
06
.
2014

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு
இனியவனாய் வாழ்ந்து
எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும்
நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நீங்கா நினைவுகளுடன்*
**குடும்பத்தினர்.**


'ஸ்ரீரங்கம்,'
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

# உதயனின் மாபெரும் கலை இலக்கியத் தேர்வின் பரிசில் நாள்
















உதயன் நாளிதழால் நடத்தப்பட்ட மாபெரும் கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந் துக் கல் லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள், ஓவியப் போட்டி பிரிவு 'சி' யில் வெற்றி பெற்ற மற்றும் சான்றிதழ் பெற்ற மாணவர் களுக்கு பரிசில்கள் வழங்குவதை இங்கு காணலாம்.

இந்தப் பரிசுக் கொண்டாட்டத்தின் ஏனைய நிகழ்வுகள் நாளைய உதயனில் வெளிவரும். விழாவில் பரிசு பெற்ற மாணவர்களுக்கான ஒளிப் படங்கள் தேவைப்படின் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0718626380.

# முதல்வராக 'ஜெ' இன்று பதவியேற்பு

## பதவி விலகினார் பன்னீர்செல்வம்

சென்னை, மே 23

தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியுள்ளார். இதற்கான பதவி விலகல் கடிதத்தை ஆளுநர் ரோசையாவிடம் நேற்றுக் காலை கையளித்தார். இதனையடுத்து ஜெயலலிதா தமிழகத்தின் ஐந்தாவது முதலமைச்சர் ஆகிறார்.

அ.தி.மு.க.சட்டமன்றக் கட்சித் தலைவராக ஜெயலலிதாவை முன்மொழிந்துள்ளார் ஓ.பன்னீர்செல்வம். இதை ஏற்றுக்கொண்ட ஆளுநர் ரோசையா, புதிய அமைச்சரவை பதவியேற்கும்வரை பதவியில் தொடரும்படி பன்னீர்செல்வத்தைக் கேட்டுகொண்டார். அதற்குப் பிறகு, தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்கும்படி, அ.தி.மு.க. பொதுச் செயலாளருக்கு ஆளுநர் அழைப்பு விடுத்தார். புதிய அமைச்சர்களின் பட்டியலை அளிக்கும்படியும் அவர் கோரியுள்ளார்.



அ.இ.அ.தி.மு.கவின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்றுக் காலை 7 மணிக்கு கட்சியின் அவைத் தலைவர் மதுசூதனன் தலைமையில் நடைபெற்றது .தமிழகத்தின் ஆளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றக் கட்சித் தலைவராக அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா நேற்றுக் காலையில் ஒரு மனதாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இந்தக் கூட்டத்தில் அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். தே.மு.தி.கவின் அதிருப்தி எம்.எல்.ஏக்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டம் பத்து நிமிடங்களில் முடிவடைந்தது. இந்தக் கூட்டத்தில், கட்சியின் பொதுச் செயலாளர் ஜெ.ஜெயலலிதாவை சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்வுசெய்வதாக ஓ.பன்னீர்செல்வம் முன்மொழிய, அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் அதனை வழிமொழிந்தார்.

இந்த நிலையில் ஐந்தாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பதவியேற்கவிருக்கிறார் ஜெ.ஜெயலலிதா இதையடுத்து, சட்டமன் றக் கட்சித்தலைவராக ஜெயலலிதா ஒருமனதாகத் தேர்வுசெய்யப்பட்ட தாக அறிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டம் முடிவடைந்த பிறகு, ஜெயலலிதாவைச் சந்தித்த முதலமைச்சர் பன்னீர்செல்வம் பின்னர் ஆளுநர் ரோசையாவைச் சந்தித்து சட்ட மன்றக் கட்சித் தலைவராக ஜெயலலிதா தேர்வு செய்யப்பட்டிருப்பதைத் தெரிவித்தார். தனது பதவிவிலகல் கடிதத்தையும் கையளித்தார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடக சிறப்பு நீதிமன்றத்தால் ஜெயலலிதா தண்டிக்கப்பட்ட பிறகு, முதல்வர் பதவியிலிருந்து அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதையடுத்து, தமிழகத்தின் முதல்வராக செப்ரெம்பர் 29ஆம் திகதி பன்னீர்செல்வம் பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது.

(த-10)

# நெடுஞ்சாலையில் தரையிறங்கிய மிராஜ் 2000 ரக போர் விமானம்



புதுடெல்லி, மே 23

டெல்லி யமுனா எக்ஸ்பிரஸ்வே தேசிய நெடுஞ்சாலையில் விமானப் படை விமானம் தரையிறக்க சோதனை வெற்றி பெற்றுள்ளது. இந்திய விமானப் படைக்கு சொந்தமான மிராஜ் 2000 ரக விமானம், டெல்லியில் உள்ள யமுனா எக்ஸ்பிரஸ்வே என்று அழைக்கப்படும் தேசிய நெடுஞ்சாலையில் நேற்று வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது.

அவசரகாலத்தில் விமானத்தை தேசிய நெடுஞ்சாலையில் தரையிறக்கம் செய்யும் வகையில் இந்த முயற்சி பரிசோதனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும், இந்தச் சோதனை வெற்றிகரமாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-10)

# பெண்ணுக்கு 17 மாப்பிள்ளைக்கு 57

## ரஷ்யாவில் கட்டாயத் திருமணம்



மொஸ்கோ, மே 23

ரஷ்யாவில் 57 வயது பொலிஸ் அதிகாரி ஒருவர், 17 வயது இளம் பெண்ணை கட்டாயப்படுத்தித் திருமணம் செய்து கொண்ட சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. செச்சினியாவை சேர்ந்த பொலிஸ் அதிகாரி நாசூத் குச்சிகோவ் என்பவர் லூசியா கோய்லாபிய்யேவா என்ற இளம் பெண்ணை ஆடம்பரமாகத் திருமணம் செய்துகொண்டார்.

இந்தத் திருமணம் கட்டாயத் திருமணம் என்றும், நாசூத்துக்கு ஏற்கனவே திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர் எனவும், அவரது உண்மையான வயது 57 ஆகும் என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நபரை திருமணம் செய்து கொள்ளுமாறு அந்த இளம் பெண்ணை அவளது பெற்றோர் வற்புறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து லூசியாவின் தோழி கூறியதாவது:-

நாசூத்தின் குழந்தைகளை விட லூசியா இளையவர். அவளுக்கு காதலன் இருக்கிறான். அவன் தற்போது உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறான் என லூசியா கூறினாள். இந்த திருமணத்தில் செச்சினியத் தலைவர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது, நாசூத்தின் வாழ்க்கையில் ஊடகங்கள் தேவையில்லாமல் தலையிடுகின்றன என்றும் அவ்வாறு அவர்கள் மேல் தவறு இருந்தால் அவர்கள் அதனை நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்வார்கள் எனவும் கூறியுள்ளார்.

இந்தத் திருமணம் குறித்து தேவையில்லாத வதந்திகள் பரப்பப்படுகின்றன என்று கூறியுள்ளார். இந்தத் திருமணம் ரஷ்யா மற்றும் செச்சினியாவில் நன்னடத்தை தொடர்பான பிரச்சினைகளை எழுப்பியுள்ளது.

(த-10)

# குடியேற்றவாசிகளை மீட்க மலேசியப் பிரதமர் உத்தரவு

கோலாலம்பூர், மே 23

மியன்மாரிலிருந்து படகுகளில் வரும் ரோஹிங்யா இனத்தவர்கள் உள்ளடங்கலான குடியேற்றவாசிகளை அந்தமான் கடல் பிராந்தியத்தில் தேடிக் கண்டுபிடித்து மீட்க மலேசியப் பிரதமர் நஜிப் ரஷாக் உத்தரவிட்டுள்ளார்.



மேற்படி படகுகளில் வரும் அகதிகளுக்கான மனிதாபிமான உதவிகள் தரையாலும் கடலாலும் வழங்கப்பட வுள்ளதாக அவர் கூறினார்.

மலேசியாவை நோக்கிப் பெரும் எண்ணிக்கையில் வந்த குடியேற்றவாசிகளின் படகுகளை ஏற்க மறுத்து அவற்றை மலேசிய அதிகாரிகள் தமது நாட்டின் கடல் பரப்பிற்கு வெளியே திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையிலேயே நஜிப் ரஷாக் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அகதிகள் நெருக்கடி குறித்து மலேசிய வெளிநாட்டு அமைச்சர் அனிபஹ் அமானும் இந்தோனேசிய வெளிநாட்டு அமைச்சர் ரெட்னோ மர்சுதியும் மியன்மாரின் தலைநகரில் அந்நாட்டு வெளிநாட்டு அமைச்சர் யு வுன்னா மயுங் லவினுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் அந்தோனி பிளிங்கனும் மியன்மார் அதிகாரிகளைச் சந்தித்து இந்த அகதிகள் விவகாரம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். மேற்படி நாடுகளின் பிராந்திய கடல் பரப்பில் 7000 க்கு மேற்பட்ட குடியேற்றவாசிகள் படகுகளில் ஸ்தம்பிதமடைந்த நிலையில் உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மியன்மாரிலான பாரபட்சமான நடவடிக்கைகள் காரணமாக அங்கிருந்து படகுகளில் வெளியேறி வரும் ரோஹிங்யா இனத்தவர்களுடன் பங்களாதேஷை சேர்ந்த மக்களும் வறுமை காரணமாக தமது சொந்த நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இந்தக் குடியேற்றவாசிகளுக்கு தற்காலிக தங்குமிட வசதிகளை ஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்துள்ள மலேசியாவும் இந்தோனேசியாவும் அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கு சர்வதேச சமூகத்தின் உதவி தேவையாகவுள்ளதாக தெரிவித்துள்ளன.

படகுகளில் வரும் பசியால் வாடும் மற்றும் நோயுற்ற அகதிகளுக்கான அடிப்படை மனிதாபிமான நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக மலேசிய பிரதமர் தனது டுவிட்டர் இணையத்தளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அந்தக் குடியேற்றவாசிகள் உயிரிழப்பதைத் தடுக்க நாட்டின் கடற்படையினரும் ஏனைய அதிகாரிகளும் அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து மீட்க வேண்டிய தேவைப்பாடு உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(த-10)

## சீனாவில் பெரு மழை

சீனாவின் தெற்கு மற்றும் மத்திய பிரதேசங்களில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாக அங்குள்ள மாகாணங்கள் பலவற்றில் வீசி வரும் கடும் புயல் காரணமாக பத்து லட்சத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சீன அரச ஊடகமொன்று தெரிவித்துள்ளது. ஜியாங்சி மற்றும் புஜியன் உட்பட கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மாகாணங்களில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கான மின்சார சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அங்கு விமான சேவைகளும் தடைப்பட்டுள்ளன.

(த-10)

# ஈராக் கிளர்ச்சியுடன் தொடர்பு குற்றவாளியான கார் ஓட்டுநர்



லண்டன், மே 23

ஈராக்கில் வீதியோரக் குண்டு வெடிப்பு மூலம் அமெரிக்க இராணுவச் சிப்பாயைக் கொலை செய்தார் எனும் குற்றச்சாட்டில் லண்டன் வாடகைக் கார் ஓட்டுநர் அனிஸ் அஹமத் சர்தார் குற்றவாளி என்று கண்டறியப்பட்டுள்ளார்.

லண்டன் நீதிமன்றத்தால் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ள அனிஸ் அஹமத் சர்தார் ஈராக்கில் நடைபெற்ற கிளர்ச்சியில் பங்கேற்றதற்காகக் குற்றவாளி என்று பிரிட்டிஷ் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள முதல் நபர் ஆவார். அவரது கைரேகை இரண்டு குண்டுகளில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதில் ஒன்று கடந்த 2007 ஆம் ஆண்டு பாக்தாத் நகருக்கு அருகே வெடிக்க, அமெரிக்கக் கவச வாகனம் ஒன்றைத் தாக்கி அழித்தது.

ஈராக்கில் நடைபெறும் மோதல்களில் தொடர்ச்சியாக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. ஈராக்கில் ஷியா ஆயுதக் குழுக்களிடமிருந்து உள்ளூர் சுன்னிப் பிரிவு மக்களைக் காப்பாற்றும் நோக்கிலேயே இந்தக் குண்டுகளை தான் உருவாக்கியதாக சர்தார் நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டார். கடந்த 2012 ஆம் ஆண்டு அவரது வீட்டைச் சோதனையிட்ட காவல்துறை அதிகாரிகள் அங்கு குண்டுகளைத் தயார் செய்வது குறித்து அரபு மொழியில் ஒரு கையேடு இருந்ததை கண்டு பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-10)

## இந்தியரை கொலை செய்த பெண்ணுக்கு 24 வருடச் சிறை

அமெரிக்காவில் இந்தியரை ரயிலுக்குள் தள்ளிக் கொன்ற பெண்ணுக்கு 24 ஆண்டு சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது நியூயார்க் நீதிமன்றம்.

அமெரிக்காவில் குயின்ஸ் நகரில் வசித்து வந்தவர் 46 வயதான சுனந்தோசென். இவர் ஒரு இந்தியர். சொந்தமாகக் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் அருகில் அச்சகம் நடத்தி வந்தார். இவர் கடந்த 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி இரவு குயின்ஸ் நகரில் உள்ள ரயில் நிலையத்தில் ரயிலுக்காகக் காத்திருந்தார். அப்போது அங்கே வந்த எரிகா மெனண்டஸ் என்ற 33 வயது அமெரிக்க பெண் சுனந்தோசென்னை ரயில் வரும் போது திடீரென தள்ளிவிட்டார்.

ரயிலில் அடிபட்ட சுனந்தோசென் சம்பவ இடத்திலேயே இறந்தார். இதனையடுத்து எரிகாவை பொலிஸார் கைது செய்தனர். அப்போது அவர் அமெரிக்காவில் உள்ள சிறுபான்மையினர் மீது கொண்ட வெறுப்புக் காரணமாக சுனந்தோசென்னைக் கொன்றதாக வாக்குமூலம் அளித்தார்.

இந்த இனவெறித் தாக்குதல் வழக்கு நியூயோர்க் குயின்ஸ் உயர் நீதிமன்றில் கடந்த மார்ச் மாதம் விசாரணைக்கு வந்தது. அப்போது எரிகா தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இந்த நிலையில் மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது இந்தியரை ரயிலில் தள்ளிக் கொன்ற எரிகாவுக்கு 24 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். (த-10)

# பறிபோனது சிரியாவின் பால்மெய்ரா




டமஸ்கஸ், மே 23

சிரியாவில் பாலைவன நகரான பால்மெய்ராவை கைப்பற்றியதை அடுத்து, இஸ்லாமிய அரசு அங்கு நாட்டின் அரைவாசிக்கும் அதிகமான பிராந்தியத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக சிரியாவின் செயற்பாட்டாளர்கள் குழு தெரிவித்துள்ளது.

அரச ஆதரவுப் படைகளிடம் இருந்து தற்போதுதான் அவர்கள் மக்கள் செறிந்துவாழும் ஒரு நகரை நேரடியாக கைப்பற்றியுள்ளனர். தொல் பொருள்கள் நிறைந்த இடத்துக்கு பெயர் போனதுதான் இந்த நகரம். ஆகவே அவை இஸ்லாமிய அரசு தீவிரவாதிகளால் அழிக்கப்படலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

அந்த தொல் பொருள் பகுதிக்குள் தீவிரவாதிகள் நுழைந்துள்ள நிலையில் அவர்கள் அதனை இதுவரை அழிக்கத் தொடங்கியதாக எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை என்று சிரியாவின் மனித உரிமைகளுக்கான கண்காணிப்பகம் கூறியுள்ளது. (த-10)

## ஹிட்லரின் குதிரைச் சிலைகள் மீட்பு



பேர்லின், மே 23

பல ஆண்டுகளுக்கு முன்னர் கொள்ளையடிக்கப்பட்ட ஹிட்லரின் குதிரைச் சிலைகளை ஜேர்மன் பொலிஸார் மீட்டுள்ளனர். ஜேர்மனி சர்வாதிகாரியான ஹிட்லரின் அலுவலக மாளிகையில், ஹிட்லருக்குப் பிரியமான இரண்டு வெண்கலக் குதிரை சிலைகள் அதிபரின் மாளிகைக்கு வெளியே வைக்கப்பட்டிருந்தன. இந்தச் சிலைகள் ஜேர்மனி நாட்டு போர் வீரர்களின் வீரத்தை பறை சாற்றுவதாக அமைந்திருந்தன.

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது சோவியத் ரஷ்யாவின் ராணுவத்தால் இந்த அதிபர் மாளிகை சேதமடைந்ததைத் தொடர்ந்து, அதிபர் கட்டடத்தை இடிக்க உத்தரவிட்டனர். இதனைத் தொடர்ந்து 1989ஆம் ஆண்டில் பொக்கிஷமாக கருதப்பட்ட ஹிட்லரின் வெண்கலக் குதிரைச் சிலைகள் நகரில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தபோது கொள்ளையடிக்கப்பட்டன.

குதிரைச் சிலைகள் குறித்து பல ஆண்டுகளாக நடத்திய விசாரணையில் அண்மையில் பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதனை தொடர்ந்து கடந்த புதன் கிழமை அதிரடியாக திடீர் சோதனையில் பொலிஸார் இறங்கினர். 5 நகரங்களில் 10 சோதனைகளை மேற்கொண்ட பொலிஸார் கொள்ளை போன குதிரைச் சிலைகளை மீட்டனர். மேலும், இந்த திடீர்ச் சோதனையில் 64 முதல் 79 வயதுடைய 8 ஜேர்மனியர்களுக்கு இந்தக் கொள்ளையில் தொடர்பு உள்ளதால் அவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில் கொள்ளையடிக்கப்பட்ட குதிரைச் சிலைகளை 4 மில்லியன் யூரோக்களுக்கு விலை பேசி விற்பனை செய்ய இருந்தது தெரியவந்துள்ளது. பொலிஸார் நடத்திய சோதனையின்போது குதிரைச் சிலைகளை தவிர்த்து பல முக்கிய சிலைகளையும் கைப்பற்றியுள்ளதால் அவற்றின் வரலாறு மற்றும் உரிமையாளர்கள் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (த-10)

# அமெரிக்க கடலில் எண்ணெய்க் கசிவு

### கலிபோர்னியாவில் அவசர நிலை பிரகடனம்

கலிபோர்னியா, மே 23



தெற்கு கலிபோர்னியாவில் உள்ள ரெபிகியோ கடல் வழியாகச் சென்ற எண்ணெய்க் குழாயில் ஏற்பட்ட கசிவை அடுத்து அப்பகுதியில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.


பிளைன் ஆல் அமெரிக்கன் பைப் லைன் நிறுவனம் குழாய் மூலம் அமெரிக்காவின் முக்கிய நகரங்களுக்கு எண்ணெய் வழங்கி வருகிறது.

தெற்கு கலிபோர்னியாவில் உள்ள ரெபுகியோ கடற்கரை பகுதியான லாஸ் பிளோர்ஸில் இருந்து கவியோடா செல்லும் இந்த நிறுவனத்திற்கு சொந்தமான குழாயில் கடந்த செவ்வாயன்று கசிவு ஏற்பட்டது. இதனால் ரெபுகியோ மாநில கடற்கரை முழுவதும் கச்சா எண்ணெயில் மிதந்தது. சுமார் 94 ஆயிரம் லீற்றர் கச்சா எண்ணெய் கடலில் கலந்திருப்பதால் 9 மைல் தூரத்திற்கு கடல், கச்சா எண்ணெயாக காட்சியளிக்கிறது.

இந்த விபத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட சாண்டா பார்பரா கடற்கரைப் பகுதியில் ஆளுநர் அவசரகால நிலையை அறிவித்துள்ளார். இதன் மூலம் மிக விரைவாக அக்கடல் பகுதியில் கலந்துள்ள எண்ணெய்க் கழிவுகளை அகற்ற முடியும் என ஆளுநர் எட்மண்ட் பிரவுன் தெரிவித்துள்ளார். (த-10)

## பிரான்ஸ் மக்களுக்கு நற்செய்தி

பரிஸ், மே 23



பிரான்ஸ் நாட்டு மக்கள் இனி குறைந்த விலைப் பொருள் வாங்கினால் கூட அதைத் தங்கள் கிரெடிட் மற்றும் டெபிட் அட்டைகள் மூலம் வாங்கிக்கொள்ளும் புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாக அந்த நாட்டு நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாடு முழுவதும் 15 யூரோக்கள் விலைக்கு குறைவான பொருளை மக்கள் வாங்க வேண்டுமென்றால் கிரெடிட் அல்லது டெபிட் காட்களைப் பயன்படுத்த முடியாமல் பணம் மட்டுமே செலுத்தப்பட்டு வருகிறது. இது மக்களிடேயே பெரும் எரிச்சலையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. 15 யூரோக்களுக்கு கீழேயும் உள்ள பொருள்களை கார்டுகள் மூலம் வாங்கும் முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாளாக இருந்து வந்துள்ளது.

இது குறித்து நேற்றுச் செய்தி வெளியிட்ட பிரான்ஸ் நாட்டு நிதி அமைச்சரான மைக்கல் ஸப்பின் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கிரெடிட் மற்றும் டெபிட் கார்ட்களை பயன்படுத்துவதற்குரிய கட்டுப்பாடுகளைத் தளர்த்த உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

புதிதாக அறிமுகப்படுத்தவுள்ள சட்டத்தில் கிரெடிட் மற்றும் டெபிட் கார்டுகள் மூலம் 15 யூரோக்கள் விலையுள்ள பொருளை வாங்கவும் மற்றும் 15 யூரோக்கள் குறைவான சேவையை பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் கார்டுகள் மூலம் மக்கள் பொருள்களை வாங்கும்போது உருவாகும் தடைகளை நீக்கவே இந்த புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இன்னும் ஒரு வாரத்தில் நடைமுறைப்படுத்த உள்ள இந்தப் புதிய சட்டத்தின் மூலம் இனி தேநீர் கூட பணம் செலுத்தாமல் கிரெடிட் அல்லது டெபிட் கார்ட்கள் மூலம் பெற முடியும். இதனால் இந்தத் திட்டம் பிரான்ஸ் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது. (த-10)

## குட்டைப் பாவாடைக்கு விசேட தள்ளுபடியாம்

பீஜிங், மே 23



சீன உணவகம் ஒன்று சிறிய ஆடை அணிந்து வரும் பெண்களுக்கு அதிக தள்ளுபடி வழங்கும் கவர்ச்சிகரமான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

குறித்த உணவகத்திற்குச் செல்லும் பெண்களின் பாவாடையை ஊழியர்கள் அளவிடுகிறார்கள். முழங்காலில் இருந்து 12 அங்குலம் மேலாகப் பாவாடை அணிந்திருக்கும் பெண்களுக்கு 90 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது. அதுவே 3 அங்குலம் இருந்தால் வெறும் 20 சதவீதம்தான் தள்ளுபடி.

இதுபற்றிக் கடையின் செய்தி தொடர்பாளர் கூறுகையில்: 'இளம் பெண்கள் தங்களின் அழகான கால்களைக் காட்டுவதில் விருப்பம் உள்ளவர்கள். அதை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளவே இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம்' என்றார்.

இந்தக் கவர்ச்சிகரமான திட்டத்தால் கடைக்குக் கூட்டம் குவிந்தாலும், சிலர் இது கடையின் மரியாதையைப் பாதிக்கும் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சீனாவில் இந்த கவர்ச்சிகரமான திட்டம் இதற்கு முன்னரே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உணவகம் ஒன்று கடைக்கு வரும் பெண்களில் யார் மிக அழகானவர் என்பதை தெரிவு செய்து இலவசமாக உணவினை வழங்கியது குறிப்பிடத்தக்கது. (த-10)

## ஐ.எஸ். இயக்கத்தில் இணைய முற்பட்ட 10 இளைஞர்கள் கைது

ஐ.எஸ் இயக்கத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் இணைந்து வருகிறார்கள். இவர்களை தடுக்கும் நடவடிக்கையில் பல்வேறு நாடுகள் ஈடுபட்டு உள்ளன.

இந்தநிலையில் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைவதற்காக கனடாவில் உள்ள மான்டிரையல்ஸ் டுருடியு சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ... சிரியாவிற்கு செல்ல முயன்ற 10 வாலிபர்களை கனடா பொலிஸார் கைது செய்துள்ளனர். இது குறித்து ரோயல் கனடா மவுண்டேட் பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கைது செய்யப்பட்ட வாலிபர்களிடம் இருந்த கடவுச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டு உள்ளன. தொடர்ந்து அவர்களிடம் விசாரணை நடந்து வருகிறது என்று தெரிவித்தனர். (த-10)

# மாணவி கொலையாளிகளுக்கு வேண்டும் தகுந்த தண்டனை

## வடமாகாண சபை உறுப்பினர் குணசீலன் வலியுறுத்தல்

மன்னார், மே 23

புங்குடுதீவு பாடசாலை உயர்தர மாணவியான சிவலோகநாதன் வித்தியா மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிருகத்தனத்துக்கும் மேலான இந்தச் செயற்பாட்டை வன்மையாக கண்டிப்பதாகவும், இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் வடமாகாண சபை உறுப்பினர் வைத்தி யர் ஜீ.குணசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தமிழர்களின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் பேணிப் பாதுகாப்பதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கும் எமது தமிழ்ப் பிரதேசத்தில் அரங்கேறியிருக்கும் குறித்த சம்பவம் தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் செயலானது மிரு கத்தனத்தை விட கேவல மானது.பொதுவாக மிரு கங்கள் கூட இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவ தில்லை.மனிதர்கள் ஒரு படி மேலே போய் அதை யும் தாண்டி கேவலமான செயற்பாட்டில் ஈடுபட்டுள் ளனர்.

இந்தச் செயல் தொடர்பாக வழமை போல் பொலிஸ் விசாரணை,நீதிமன்ற விசா ரணை என கடந்த காலங்களில் நடைபெற்ற மிக கொடூர செயல்கள் மூடி மறைக்கப்பட்டது போன்று வித்தியாவின் கொலை மறைக்கப்படாது. பொலிஸ் விசாரணை, நீதிமன்ற விசாரணைகள் நீதியான முறையில் இடம் பெற வேண்டும்.

இவர்களுக்கான தண்டனைகள் உடனடியாக வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாத வகையில் பாதுகாக்க முடியும்– என்றார். (த–56)

# குறுநாவல் நூல் வெளியீடு நாளை

தென்மராட்சி ,மே 23

அரியாலையூர் செல்வி மிசாந்தி செல்வராஜா எழுதிய மூன்றாம் முத்தம் குறுநாவல் நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.. 3.00 மணிக்கு யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் நீங்களும் எழுதலாம் சஞ்சிகையின் ஆசிரியர் எஸ். ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜய கலா மகேஸ்வரன் கலந்து கொள்வார்.

ஆசியுரையினை யாழ்பல்கலைக்கழக விரிவுரை யாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கமும், வரவேற்புரையினை வட மாகாண கல்வி அமைச்சின் அபிவிருத்தி அலுவலர் செல்வி து.த. சோனியாவும், நூல் அறிமுக உரையினை புலோலியூர் வேல் நந்தகுமாரும்; வெளியீட்டுரையினை நல்லூர் பிரதேச செயலக கலா சார அலுவலர் திருமதி ர.குமாரசிங்க மும், நயப்புரையினை ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப் பாளர் திருமதி மீரா அருள்நேசனும் நிகழ்த்துவர். சிறப்புரையினை வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரனும், மதிப்பீட்டுரையினை இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஓய்வு நிலைப் பணிப் பாளர் ஏ.தர்ம குலசிங்கமும் நிகழ்த்துவர். (த–9)


### மணமகள்கள் தேவை

* 84 ஆம் ஆண்டு 1 இல் செவ்வாய் பாவம் 73 சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு இஞ்சினியர் அல்லது பட்டதாரி மணமகள் தேவை.
* 81ஆம் ஆண்டு 12 இல் சூரியன் செவ்வாய் 24 பாவமுடைய அவுஸ்ரேலியா பிரஜா உரிமைபெற்ற சிவில் இஞ்சினியர் சைவ போசன மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை.
* 79 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 41 பாவமுடைய சொந்தமாக நிறுவனம் வைத்திருக்கும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)
* 86 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 12 ¾ பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 83இல் பிறந்த4இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 80இல்பிறந்த4இல்செவ்வாய்22பாவமுடையசொந்த நிறுவனம் வைத்திருக்கும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)
* 84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9 பாவமுடைய PHD விரிவுரையாளருக்கு டாக்டர், இஞ்சினியர் மணமகள் தேவை.
* 78 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 10½ பாவமுடைய உதவி பரீட்சை ஆணையாளருக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமண சேவை
இல62, இராமலிங்கம் வீதி
பூங்கனிச்சோலையடி, மடமாவடி
TP :- 077 607 0862
(60101)(3.5.7)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### வீடு வாடகைக்கு உண்டு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு. (80032)(3.5.7)

தொடர்பு: 021 222 8640, 076 655 0231

### முகாமையாளர் தேவை

பரந்தனில் உள்ள அரிசி ஆலைக்கு மில் அனுபவம் உள்ள அல்லது இளைப்பாறிய உத்தியோகத்தர் தேவை. தபால்மூலம் தங்களது CV ஐ கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

K.S பொன்னம்பலம்
எரிபொருள் நிரப்பு நிலையம் கைதடி.
021 320 7042

IELTS UK KU Education
MBA(London) Qualified Trainer Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
021-3208342 (A.G&L)IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம் IELTS Life Skills-A2-B1
K.U Education,No 626 1/1,First Floor,K.K.S Rd,Jaffna.

### காணிவிற்பனைக்கு

சாவகச்சேரி தபால் கந்தோர் வீதியில் 5¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சந்தை, புகையிரத நிலையம், பாடசாலை, நீதிமன்றம் என்பனவற் றுக்கு மிக அருகில் உள்ளது. பார்வையிடுவதற்கும் மேலதிக தொடர்புகளுக்கும்.

தொடர்பு:
077 81 87 963, 077 06 39 711

### இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்த்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடம்

வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரிக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படிப் பலவாறான தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம். கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம். இல. 175, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்விருந்தினர் விடுதி, G.G.Hotel, யாழ்ப்பாணம். தொடர்பு: 077 595 0463

### தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் தெல்லிப்பழை

### பொதுக்கூட்டமும் புதியநிர்வாகத் தெரிவும்

**தலைமை:** Dr.மு. உமாசங்கர் அவர்கள்
**காலம்:** 07-06-2015 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30
**இடம்:**
புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு கூட்ட மண்டபம்
பிரேரனைகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் 01.06.2015 திங்கட்கிழமைக்கு முன்னர் வைத்திய சாலையில் சமர்ப்பிக்கலாம் .
புதிதாகஇணையவிரும்புஅங்கத்தவர்கள் வைத்திய சாலையில் பொருளாளரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து 01-06-2015 திங்கட் கிழமைக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.
லயன் சி.ஹரிகரன்
செயலாளர். 077 900 5856
(60062)(3.5.7)

### அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம்: 07
ஆதன இலக்கம் : 1B
வட்டுக்கோட்டை வீதி

வட்டாரம் 07 வட்டுக்கோட்டை வீதி, ஆதன இலக்கம் 1B இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோயில்பற்று ஆனைக்கோட்டை இறை "புளியங்கண்டடி வளவும் அரங்கசன் தோட்டம்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 04 குளி 12.83 கொண்ட இவ்வாதனமானது ஜனந்தனன் பெண் கலையரசி ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சிவலிங்கம் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திருமதி லிங்கா துரைராஜா முகதாவில் நிறைவேறிய 8844 ஆம் இலக்க 01.10.2012 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "புளியங்கண்டடி வளவும் அரங்கசன் தோட்டம்" நிலப்பரப்பு 04 குளி12.83 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் சுந்தரலிங்கம் சிவலிங்கம் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய். (சி/18135)(4.3.7)

### விற்பனைக்கு

* சுண்டுக்குளி பிளைச்சர் வீதி, மகளிர் கல்லூரிக்கு மிக அருகில் பழைய சர்வோதயம் அலுவலகத்திற்கு பின் உள்ள 3½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
* மானிப்பாய் - காரைநகர் பிரதான வீதியில் தொல்புரம் மேற்கு பாணாவெட்டி சந்திக்கு அருகில் 9¼ பரப்புக் காணியுடன் கூடிய 2000 சதுர அடி கொண்ட 75 ஆம் ஆண்டு கட்டப்பட்ட வீடு விற்பனைக்குண்டு.
* சுழிபுரம் காளுவன் வைரவர் கோயில் பின்புறமாக 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
* பொன்னாலை- வட்டுக்கோட்டை வீதியில் தண்ணீர்த் தொட்டி ஒழுங்கை சந்தியில் குளக்கட்டிற்கு அருகில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தரகர்கள் தேவையில்லை
077 304 0162

## STUDY IN INDIA / இந்தியாவில் உயர்கல்வி




இந்தியாவில் தமிழ் நாட்டிலுள்ள பிரபல பொறியியல் கல்லூரியான EXCEL ENGINEERING COLLEGE யில் சேர்ந்து உலகலாவியரீதியில் புகழ்பெற்ற ANNA UNIVERSITY யின் ENGINEER ஆகுவதற்கான அரிய வாய்ப்பு.

* Aeronautical Engineering
* Civil Engineering
* Computer Science Engineering
* Electronics & Communication Eng.
* Mechanical Engineering
* B.Tech - Information Technology

முதல் 5 விண்ணப்பதாரிகளுக்கும்
50% SCHOLARSHIP

தேவையான தகமை
• GCE A/L Pass in Maths, Chemistry and
• Psychics + GCE O/L Credit Pass in English.

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் ஒரு வருட FOUNDATION COURSE ஐ முடித்து, பின் ENGINEERING DEGREE ஐ தொடரமுடியும் (A/L தேவையில்லை).

மேற்கூறிய ANNA UNIVERSITY ENGINEERING DEGREE இலங்கை UGC இனால் அங்கிகரிக்கப்பட்டதுடன் ENGINEERING DEGREE யை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு எதிர் காலத்தில் CANADA, AUSTRALIA, NEW ZEALAND, UK ஆகிய நாடுகளில் PERMANENT RESIDENCE (PR) பெற வாய்ப்புள்ளது.

Excel Engineering College
NH 47, Salem Main Rd, Komarapalayam - 637 303
Namakkal Dt, Tamil Nadu, INDIA
www.excelinstitutions.com
Call : (தமிழில்) 0777 - 767 818
scholinfo@yahoo.com

யூலை 23இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்



Now prepare for your Accademic / General
The World speaks IELTS
IELTS
BRITISH COUNCIL IELTS Students Registration center

**Speciality of our course**

* Special attention to Advanced Grammar
* 12 Practice tests with explanation
* Unlimited hours for listening practice
* Speaking practice

Spouse (Family) விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு UK அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி

IELTS LIFE SKILLS A1

City & Guild, KET, PET(A1&B1) போன்றவற்றிற்கு பதிலிடாக UK Home office னால் ஏற்றுக் கொள்ளப்படும் புதிய தகைமை

COURSE SCHEDULE

| | Saturday & Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Week | 10 Week |
| Time | 8.00 - 11.00 | 8.30 - 10.30, 5.00 -7.00 |

வகுப்புகள் இப்பொழுது நடைபெறுகின்றன.

IELTS
BRITISH COLLEGE OF ENGLISH
No 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 தொ.பே : 0778803887

## வைத்தியசாலை இருந்தும் வருத்தத்தால் வாடுவோர்

வவுனியாவிலிருந்து மன்னார் வீதியில் பூவரசங்குளத்திலிருந்து வடக்குப் பக்கமாகச் செல்லும் வீதியில் இரணை இலுப்பைக் குளம் கிராமத்தில் வைத்தியசாலை ஒன்று இருக்கிறது. இது கடந்த கால இடர்களின் பின்பு தற்போது புனரமைக்கப்பட்டு புதிய தோற்றத்துடன் காணப்படுகிறது. எனினும் இந்த வைத்தியசாலையில் சிற்றூழியர் சிலரைத் தவிர வைத்தியர் எவரும் இல்லாமையைக் காணக் கூடியதாக இருக்கிறது. இந்த வைத்தியசாலையானது இரணை இலுப்பைக்குளம், காக்கையன் குளம், புதுக்குளம், மண்கிண்டி, பரசங்குளம், விளாத்திக்குளம், வலைஞன் கட்டு, கல்மடு, பூம்புகார் , பூசாரிகுளம், கங்காணிகுளம், முள்ளிக்குளம், கோவில் புளியங்குளம், கோவில்மோட்டை, செங்கற்படை, கருங்காலிக்குளம், வேலங்குளம், மடுக்குளம் ஆகிய கிராம மக்களுக்கான பொது வைத்தியசாலையாக இருக்கிறது. இந்தக் கிராம மக்கள் மிகவும் ஏழ்மையான மக்களே தவிர வசதியானவர்கள் அல்லர். இவர்கள் தங்களது சுகயீனத்துக்கு இந்த வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாத காரணத்தால் தங்களது நேரத்தை வீணாக விரயமாக்கி பூவரசங்குளம் அல்லது வவுனியா வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர். பிரத்தியேகமாக தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைபெறக்கூடிய பொருளாதார பண வசதியற்றவர்களே இந்த மக்கள். இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்களைக் கேட்டால் நாங்கள் என்ன செய்வது வைத்தியர் வருவதாகக் கூறுகிறார்கள் வரவில்லை என்பது அவர்களது பதிலாக இருக்கிறது. தற்போது சீரற்றகாலநிலையான மழை காரணமாக பொதுமக்கள் மிகவும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். இது சம்பந்தமாக சுகாதரத் திணைக்களமோ பிரதேச சபையோ வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் ஐயாவோ எதுவித கவனமும் எடுக்காதது மிகவும் வேதனைக்குரியது . அத்துடன் இவ்விடத்துக்குரிய வீதியானது மிகவும் மோசமான நிலையிலுள்ளதால் வைத்திய சிகிச்சைக்குச் செல்லும் பொது மக்கள் பஸ்ஸில் ஊஞ்சலாடித்தான் செல்கிறார்கள். இங்குள்ள பொது ஸ்தாபனங்கள் இது பற்றி மௌனம் காப்பது மிகவும் வருந்தத் தக்கது. இந்தப் பகுதி பொதுமக்கள் எதற்கும் தலையாட்டும் பொம்மைகளாக இல்லாது இதனைக் கருத்தில் கொண்டு இந்த வைத்தியசாலைக்கு விரைவில் வைத்தியர் ஒருவரை நியமிப்பதற்கான கோரிக்கை விட வேண்டும்.

எனவே சம்பந்தப்பட்ட எமது இந்தப் பகுதிக்கு தற்காலிகமாக கிழமையில் இரண்டோ மூன்று நாள்களுக்கு ஒரு வைத் தியர் வந்து சிகிச்சையளிக்கக் கூடிய நடைமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் இவற்றை எந்த நிர்வாகம் செயற்படுத்தப் போகின்றது என எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்பார்ப் போமாக.

***வைத்திய வசதியற்று வாழும் மக்களில் ஒருவன்.***




## தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுத்து ஆவன செய்வது யார்?

நீதிமன்றில் எந்தவித குற்றமும் புரியாதவர்கள் எனத் தீர்மானிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களும் பெரும்பான்மை இன இளைஞர்களும் மீண்டும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, சிறையில் வாடும் கைதிகளின் இருண்ட வாழ்வு எவ்வித துயரம் நிறைந்ததென மனிதநேயம் மிக்க அனைவரும் சிந்திக்க வேண்டும்.


தலையிடியும் காய்ச்சலும்தனக்கு வந்தால்தான் தெரியுமாம்" ஆம் 10,18 வருடங்கள் புரியாத குற்றத்துக்காக சிறையில் வாடுதல் எவ்வளவு வேதனை மிகுந்தது என்பதை எண்ணிப் பார்ப்போம். பலமுறை தங்களை விடுதலை செய்யும்படி விண்ணப்பித்தார்கள். உண்ணாவிரதம் இருந்து நீதிக்காகப் போராடினார்கள் பயனேதும் இல்லை.

சிறையில் வாடும் தங்கள் குடும்பத் தலைவர்களுக்கு விடுதலை கிடைக்குமா? என்று எண்ணிக் கண்ணீர் வடிக்கும் உறவுகளை யார் தேற்றுவது. தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று தந்தை செல்வா கூறிய வார்த்தைகளைத்தான் நினைவுகூர வேண்டியுள்ளது.

சீரழியும் சிறைக் கைதிகளின் வாழ்வை நேரிற்சென்று பார்த்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடமும் வட மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனிடமும் கைதிகள் அனைவருக்கும் விடுதலை பெற்றுத் தருமாறு உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர். இவர்களின் விடியலுக்காக குரல் கொடுத்து ஆவன செய்வது யார்?

***வின்சென்ட் டலிமா,***
***ஒழுவில் வீதி, ஊர்காவற்றுறை.***

### கேலிச் சித்திரம்




# அவல் கிடைத்தால் விடுவார்களா ?

தமிழீழ விடுதலைப் புலிகளும் இப்படித்தான் ஆரம்பித்தார்கள் என்று, முன்னை நாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புலம்பத் தொடங்கியுள்ளார். அவர் புலம்பத் தொடங்குவதற்கு முன்னதாகவே, ஹெல உறுமய 'வடக்கிலுள்ள சிங்களவர்களை அச்சுறுத்துகின்றனர்' என்று சொல்லியிருந்தது. ஒன்றன் பின் ஒன்றாக கடும் போக்குச் சிங்களவாதிகள், வடக்குச் சம்பவங்களை தங்களுக்கு ஏற்றால் போல், அரசியல் வாக்கு வேட்டையாக மாற்றத் தொடங்கியிருக்கின்றார்கள்.

புங்குடுதீவு பள்ளி மாணவியின் படுகொலைக்கு நீதி வேண்டி வடக்கு – கிழக்கில் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தப் போராட்டங்களின் நோக்கம், குற்றவாளிகளுக்கு விரைவில் உச்சபட்ச தண்டனையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதுதான்.

ஆனால் போராட்டங்களின் நோக்கங்களைத் திசை திருப்பும் வகையில் பல்வேறு செயற்பாடுகளும் முன்னெடுக்கப் படுகின்றன. கிட்டத்தட்ட பத்து வருடங்களின் பின்னர், சுதந்திரமான போராட்டங்கள் நடக்கத் தொடங்கியுள்ளன. மஹிந்த ஆட்சிக் காலத்தில், இவ்வாறான சம்பவங்களுக்காக ஒட்டுமொத்த வடக்கு – கிழக்கும் கிளர்ந்தெழவில்லை. கிளர்ந்தெழுவதற்கும் அப்போதைய ஆட்சியாளர்கள் அனுமதிக்கவில்லை. புலனாய்வாளர்கள் ஊடாக, ஏற்பாட்டாளர்களுக்கு அழுத்தம் கொடுத்து போராட்டங்களை முடக்கச் செய்தனர்.

ஆனால் தற்போது, ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள், அழுத்தங்கள் இன்றி நடைபெறத் தொடங்கியுள்ளன. பத்து வருடங்களுக்கு முன்னர் இதே போன்று போராட்டங்கள் நடக்கின்ற போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் இருந்தது. அவர்கள் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களில் பொதுச் சொத்துக்களுக்கு சேதப்படுத்தும்–குறிப்பாக நீதிமன்றங்களைத் தாக்கும் எந்தச் செயற்பாட்டையும் அனுமதிக்கவில்லை. இதனால் அப்போதைய ஜனநாயகப் போராட்டங்கள் சீரியதாக நடைபெற்றது.

ஆனால் இப்போதைய போராட்டங்களில், போராட்டக்காரர்களுக்கு தலைமை தாங்குவது யார் ? அவ்வாறு தலைமை தாங்குபவருக்கு கட்டுப்பட்டு போராட்டத்தில் பங்கெடுத்த அனைவரும் செயற்படுவார்களா ? என்ற கேள்விகள் எழுப்ப வேண்டியது அவசியமாக இருக்கின்றது. நீதிமன்றத்தின் மீதான தாக்குதல் இந்தக் கேள்வியை எழுப்புகின்றது.

போராட்டக்காரர்கள் ஒரு போதும் நீதிமன்றத்தை தாக்குவதற்கு முயற்சிக்கவில்லை. ஆனால் அதில் புல்லுருவிகளாக இணைந்து கொண்ட சக்திகள், இதனை வன்முறை ரீதியிலானதாக மாற்றின. நீதிமன்றத்தின் மீது கல்லெறிந்தது தொடக்கம் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தது வரையில் அவர்களே அனைத்தையும் செய்து முடித்தார்கள்.

அவ்வாறு செய்தவர்களில் பலர், முன்னைய ஆட்சியில் இருந்தவர்களுக்கு விசுவாசமாகச் செயற்பட்டவர்கள். அத்துடன், முன்னைய ஆட்சியில் புலனாய்வாளர்களுடன் இணைந்து செயற்பட்டவர்கள்.

நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம், இனிமேல் வடக்கில் எந்த ஜனநாயகப் போராட்டம் முன்னெடுப்பதைத் தடுத்தல். அதாவது பொலிஸார் இந்தத் தாக்குதல் சம்பவத்தை முன்வைத்தே நீதிமன்றத்தில் தடை உத்தரவு வழங்குவார்கள். அடுத்தது, சுதந்திரமான ஜனநாயகப் போராட்டமாக நடந்து முடிந்தால் தொடர்ந்து வடக்கில் இவ்வாறான பல போராட்டங்கள் தடையின்றி தொடர்ந்து நடக்கும். அத்துடன் மக்களின் அணி திரள்வும் அதிகமாக இருக்கும். அதனைத் தடுக்க வேண்டும். போராட்டங்கள் கலவரமாக மாறும் என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் உருவாக்கி மக்களை பங்கெடுக்க விடாமல் செய்தல் என்று பல காரணங்களைச் சொல்ல முடியும்.

அத்துடன், மைத்திரி ஆட்சியில் வடக்கில் தமிழர்கள் மீண்டும் அணி திரளத் தொடங்கி விட்டார்கள் என்று மஹிந்த உள்ளிட்ட சிங்கள அரசியல்வாதிகள், தங்கள் இனவாத அரசியலை முன்னெடுப்பதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தலும், இந்த வன்முறைகளின் பின்னணிகளாக இருக்கலாம்.

அதனால்தான் என்னவோ, போராட்டம் வன்முறையாக மாறிய உடனேயே, கடும் போக்கு சிங்களத் தலைவர்கள் அறிக்கைகளை சீறிக் கொண்டு விடுத்தார்கள். மஹிந்த ராஜபக்ஷ மட்டும் இதற்கு விதிவிலக்கா ? தமிழீழ விடுதலைப் புலிகளும் இப்படித்தான் போராட்டங்களை ஆரம்பித்தார்கள். இந்தத் தாக்குதலின் பின்னால் ஒரு குழு இருக்கின்றது என்று தனது புலிவாத அரசியலை தொடங்கி விட்டார். வெறும் வாயை மெல்பவர்களுக்கு அவல் கிடைத்தால் சும்மா இருப்பார்களா ?

**பத்தி எழுத்து!**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் மனங்களை வெல்ல முன்னுரிமை முக்கியம்......

தற்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் தொடர்பான விவரங்கள் எதுவும் தம்மிடம் இல்லை என்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தகவல் வெளியிட்டுள்ளார்.

ஊடக நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்களுடன், தாம் நடத்திய சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்துலகத் தரப்புக்கள் பலவும், தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தொடர்பான பட்டியல் தம்மிடம் உள்ளதாகக் கூறிப் பல அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. அவை தொடர்பில் ஜனாதிபதியிடம் வினவிய வேளையிலேயே, அவை எவையும் தம்மிடம் இல்லை என்று அவர் கூறினார், கைவிரித்தார்.

அதேவேளை, போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து, விசாரணை நடத்துவதற்கான, உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றின் செயற்பாடுகள், அடுத்த மாதத்தில் (ஜூனில்) நடைமுறைக்கு வரும் என்று ஜனாதிபதி தெரியப்படுத்தி உள்ளார்.

இங்கே, எவரிடமும் இயல்பாகவே எழக்கூடிய வினா ஒன்று மேலுயர்ந்து நிற்கிறது.

அதாவது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாவனையில் இருந்த வாகனங்களின் கணக்கெடுப்பில் உண்டான தில்லுமுல்லுகள் தொடர்பில், குறிப்பிட்ட ஒரு பிரிவின் அதிகாரி கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்பது செய்தி.

மனிதர்களின்- இந்த நாட்டின் பிரஜைகளின் - இராணுவத்திடம் சரண் அடைந்த மக்களின் நிலை குறித்து, அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? தொலைக்கப்பட்டு விட்டார்களா? என்ற உண்மை நிலையை, ஒளித்து மறைக்காமல்--

வெளியிட வேண்டிய , மனிதாபிமானம் சார்ந்த தட்டிக் கழிக்க முடியாத பெரும் பொறுப்பு அரசுக்கு -- குறிப்பாக இந்த அரசின் தலைவருக்கு -- இயல்பாகவே இருக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதியின் வாகனங்கள் தொடர்பான கணக்கெடுப்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இனங்கண்டு, கடும் விசாரணை நடத்தி, கணக்கெடுப்பு பட்டியல் சீர் செய்யப்பட வேண்டியது அவசியமே.

சரண் அடைந்த பொதுமக்களின் பிரச்சினைகள் குறித்து சிறுபிள்ளைத் தனமாக, ஏனோ தானோ என்ற மனநிலை நின்று விட்டேத்தியாக பதில் அளிக்கக் கூடாது.

நாட்டின் தலைவர், ஆட்சித் தலைவர் என்ற நிலை நின்று, பொறுப்பான, ஆக்கபூர்வமான, காத்திரமான, விதிமுறைகளை, செயல் வடிங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரச உயர்பீடம் ஓர்மத்துடன் செயற்பட வேண்டும். அதுவே அரசின் வெளிப்படைத் தன்மையைப் பிரதிபலிக்கும். உண்மையான, நேர்மையான நல்லாட்சிக்கு வேண்டற்பாலதும் அதுவே.

முந்தைய ஜனாதிபதியின் ஆட்சி, மக்கள் நலன்களை விட, தம்மையும் தம்மைச் சார்ந்தோரையும் பல வகைகளிலும், பல வழிகளிலும் உயர்த்தி ஜனநாயக ஆட்சிக்கு வேட்டு வைத்ததை மனதில் கொண்டே, புதியவருக்குப் பேராதரவு நல்கி அரியணைக்கு உயர்த்தினர் நாட்டு மக்கள்.

"நன்றும் தீதும் பிறந்தர வாரா" என்ற தமிழ் புலவரின்- கனியன் பூங்குன்றனாரின்- அர்த்தமுள்ள வரி ஏனையோரை விடவும் ஆட்சியாளர்களுக்கே அச்சொட்டாகப் பொருந்தும்

எனவே, எமது நாட்டின் இப்போதயை ஜனாதிபதி நேர்வழி- நல்வழி- நடக்க, -செயற்படுவதற்கு மனம் கொள்ளட்டும்!

# கிடப்பில் போடப்பட்டுள்ள இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை

வந்தியத்தேவர்

இலங்கை இந்திய மீனவர்கள் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு எதிர்காலத்தில் எவ்வித அக்கறையும் காண்பிக்கத் தயாரில்லை என்பது தெரியவந்துள்ளது. எல்லை தாண்டிய மீன்பிடியைத் தொடரும் தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு இந்திய மத்திய அரசு பொறுப்பேற்காது என இந்திய வெளியுறவுத்துறைஅமைச்சர் சுஷ்மா கூறியுள்ளார். அவரது இந்தக் கருத்து இலங்கைக் கடற்படையினரின் எவ்வாறான தாக்குதல் குறித்தும் இந்திய மத்திய அரசு கண்டுகொள்ளாது என்பதை உறுதிப்படப் புலப்படுத்துகின்றது. மோடி பிரதமராகிறார், இனி இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்வு காணப்பட்டுவிடும் என நம்பிய தமிழக மீனவர்களுக்கு விழுந்த சாட்டை அடியாக சுஷ்மாவின் கருத்து அமைந்துள்ளது. தேர்தல் வெற்றிக்காகத் தமிழக அரசியல்வாதிகள் சிலர் நடத்தும் போலி ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களுக்கும் கூட இது ஒரு பலத்த அடியாக விழுந்துவிட்டது.

இலங்கை இந்திய மீனவர்கள் பிரச்சினை நீண்ட காலமாகத் தொடர்கின்றது. இதனால் இரு நாட்டு மீனவர்களுமே பெரும் கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதாக இந்திய மீனவர்களும், இந்தியர்கள் தமது தொழிற் சாதனங்களைச் சேதப்படுத்துவதுடன் பெறுமதிக்க உபகரணங்களையும் எடுத்துச் சென்று விடுகின்றனர் என இலங்கை மீனவர்களும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு வாழ்வாதாரப் பிரச்சினை என்பதால் தாங்கள் இலங்கைக்கடற்பரப்புக்குள் வரவேண்டிய கட்டாய நிலை உள்ளதாகக் குறிப்பிடும் இந்திய மீனவர்கள், வடபகுதித் தமிழ் மீனவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டும் என்ற நோக்கம் தமக்குக் கிடையாது என்கிறார்கள்.

மீனவர் பிரச்சினை இருநாட்டு உறவுகளிலும் தாக்கங்களை உண்டு பண்ணக் கூடியது என்பதால் இரு நாட்டு அரசுகளும், மீனவர் அமைப்புக்களும் கலந்து பேசி மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதே பரவலான கருத்தாகும். எனினும் இருநாட்டு அரசுகளும் இந்தப் பிரச்சினை குறித்து பெரிய அளவில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. பதவியில் இருக்கும் தமிழ்நாடு அரசு, மீனவர் பிரச்சினையைத் தீர்க்கக்கோரி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவதுடன் தனது பொறுப்பு முடிவடைந்து விட்டதாகக் கருதுகின்றது. தமிழக மீனவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க மத்திய அரசு தயங்கினால் தமிழகத்தில் போராட்டங்கள் வெடிக்கும் என தமிழக அரசியல் கட்சிகள் காலத்துக்குக் காலம் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. இந்திய மத்திய அரசு, விரைவில் உயர்மட்ட பேச்சுக்கள் இடம்பெறும் எனக் கூறிக் கொண்டு தனது பூகோள நலன்குறித்த சிந்தனையுடன் மௌனம் காத்துக் கொண்டிருக் கிறது. இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்படுவது வடபகுதி மீனவர்களே என்பதால் சிங்கள அரசு இது பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளாத நிலையில் பிரதமர் ரணில் எல்லை தாண்டும் மீனவர்கள் சுடப்படுவர் என்றும் கூறியுள்ளார். பிரதமரின் கூற்றை மீண்டும் ஞாபகப்படுத்தி இந்திய அரசை அச்சுறுத்தும் வகையில் இந்தியாவுக்குச் சென்றிருந்த மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் இலங்கை கடற்பகுதியில் நுழையும் எவராக இருந்தாலும் சுடப்படுவர் எனச் சட்டத்தில் இடமுண்டு எனக் கூறியுள்ளார்.

சூரிய ஒளி அதிகமாக ஊடுருவும் அளவுக்கு இந்தப் பகுதியில் உள்ள கண்டமேடைப் பகுதிகள் ஆழம் குறைந்தவை என்பதால் கடல்தாவரங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் கண்டமேடைப் பகுதியின் அடித்தளச் சேற்றில் இறால், நண்டு போன்றவை அதிகம் காணப்படுகின்றன. கச்சதீவு மற்றும் நெடுந்தீவு கடற்பரப்புகள் மீன்வளம் மிக்க பகுதிகளாக உள்ளன. இந்தப் பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய இழுவைப் படகுகளால் அனைத்து வளங்களும் அள்ளிச் செல்லப்படுகின்றன. மீன்வளம் முற்றாக அழியும் சாத்தியமும் காணப்படுகின்றது. ஆயிரக் கணக்கான மீனவர்கள் இழுவைப் படகுகளுடன் வந்து தொழில் செய்வதால் மீன்வளம் சூறையாடப்படுகின்றது. குஞ்சுகுருமான் என கடலில் கிடக்கும் அனைத்தையுமே இழுவைப் படகுகள் தமதாக்கிக் கொள்கின்றன. இந்த நடவடிக்கையை வடபகுதி மீனவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. கடந்த ஆண்டு ஜனவரியில் இருந்து இந்த ஆண்டு பெப்ரவரி வரை 36ஆயிரத்து 865 படகுகள் எல்லை தாண்டித் தொழிலில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எல்லை தாண்டித் தொழில் செய்வதை நிறுத்துமாறு இந்திய மீனவர்களுக்கு அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டபோதிலும் வேறு வழியில்லை என்பதால் தொடர்ந்தும் இலங்கைக் கடற்பரப்பில் அவர்கள் நுழைகிறார்கள். நெடுந்தீவுக் கரையில் நின்று பார்த்தால் இந்திய இழுவைப் படகுகள் கூட்டம் கூட்டமாகக் கடலில் ஒரு நகரம் போன்று நங்கூரமிட்டுத் தொழில் செய்வதைக் காணலாம். எமது நாட்டில் இழுவைப் படகுத் தொழில் தடைசெய்யப்பட்ட நிலையில் சிறு தொழில்களைக் கூட ஒழுங்காக முன்னெடுக்க முடியாது. வடபகுதி மீனவர்கள் மிகவும் கஷ்டமுறும் நிலையில் இன்னொரு நாட்டு மீனவர்கள் வந்து உள்ள வளங்களை அள்ளியும் அழித்தும் வருவதை ஏற்க முடியாது. எமது கடற்படையினரால் இதுவரை நூற்றுக் கணக்கான தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். கொல்லப்படுவது தமிழக மீனவர்கள் என்பதால் மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசோ, பா.ஜ.க அரசோ இந்த விடயங்களைப் பெரிதுபடுத்துவதில்லை. அதற்கு ஏற்றாற்போன்று தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தரராஜனும் பிரச்சினைக்கு மீனவர்களே தீர்வு காண முன்வரவேண்டும் என்று பக்கப் பாட்டுப் பாடுகின்றார்.

பிரதமர் மோடி ஜனாதிபதி மைத்திரி ஆகியோர் பேசி ஒரு நல்ல முடிவெடுப்பார்கள் என்று முன்னர் செய்திகள் கூறின. கண்துடைப்புக்கு இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு விரைவில் சுமுகமான முடிவு எட்டப்படும், மீனவர்களுடனான சந்திப்பு இடம்பெறும் என்ற உப்புச் சப்பற்ற அறிக்கையுடன் மீனவர் விவகாரத்துக்கு முற்றுப் புள்ளியிடப்பட்டு விடும் என்பதும், பெரும் ஆரவாரத்துடன் கடந்த ஆண்டு கச்சதீவில் கூட பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தும் பேச்சுகள் இடம்பெறும் என்று கூறப்பட்டது. ஓடியோடிப் பேசுகிறார்கள் இதுவரை ஒரு துரும்பைக் கூட நகர்த்தியதாக இல்லை. இலங்கைக்கடற்படை பாக்கு நீரிணையில் உள்ள தீவுகளில் ராடர்களை நிறுவியுள்ளதாகவும் மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகளை ஒளிப்பதிவு செய்து இந்திய பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்துள்ளதாகவும் இதை ஆதாரமாகக் கொண்டு இந்திய கடலோரக் காவற்படை தமிழக மீனவர்களே அத்து மீறி நுழைகிறார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளதாகவும் தகவல்கள் உண்டு.

இது ஒரு முக்கிய பிரச்சினை என்பதால் இரு நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தக் கூடியதான, இருசாராரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு தேவை. இதற்கு முன்னோடியாக முதலில் இந்திய இழுவைப் படகுகள் தடைசெய்யப்பட்டவலைகளைக் கொண்டுவந்து தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை முற்றாக நிறுத்துவதுடன், இதில் நேர்மையான அதிகாரிகளின் கண்காணிப்பும் இடம்பெறவேண்டும். தடை செய்யப்பட்ட தொழிற்சாதனங்களை சட்ட விரோதமாக எடுத்து வரும் மீனவர்களுக்கான அனுமதிப் பத்திரங்களை ரத்துச் செய்வதுடன் சாதாரண வலைகளைப் பயன்படுத்தி இரு நாட்டு மீனவர்களும் தொழில் நடவடிக்கைகளைக் கொள்வதுடன் மீனவர் அமைப்புக்கள் முதலில் ஒரு தற்காலிக தீர்மானத்தை முன்னெடுத்து கணிசமான வரை பிரச்சினைகள் ஏற்படதாவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் இரு நாட்டு அரசுகளும் கலந்துரையாடி ஒரு சுமுகமான முடிவை எட்ட முயற்சிக்கவேண்டும். வட பகுதி மீனவர்களாயினும் சரி தமிழக மீனவர் களாயினும் சரி, வெத்து வேட்டுக்களான பீரங்கிப் பிரசார அரசியல் வாதிகள் எப்படியும் தமக்கு நல்ல ஒரு தீர்வைத் தருவார்கள் என்று காத்திருந்தால் அவர்களது வாழ்வாதாரம் இடர்கள் நிறைந்ததாகிவிடும் என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

# மக்கள் போராட்டம் மூலமே தமிழினம் உண்மையான விடுதலையை அடையும்

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.உரை



“மக்கள் மயப்படுத் தப்பட்டபோராட்டங்கள் மூலமே தமிழினம் உண்மையான விடுதலையை அடையும்” – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவரது உரையின் முழு வடிவம் வருமாறு:–

“மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அஞ்சலி வழமைக்கு மாறாக உணர்வுபூர்வமான நிகழ்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்த வரலாற்று நிகழ்விலேயே நாம் அனைவரும் ஒன்றுகூடியிருக்கின்றோம். 2009ஆம் ஆண்டு எங்களுடைய உறவுகள், நண்பர்கள், போராளிகள், குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், பெரியோர்கள், பொதுமக்கள் மரணித்த பேரவலம் நிகழ்ந்தது. மரத்தடி நிழல்களே மருத்துவமனைகளாக இருந்த அவலம். அங்கு சிகிச்சைபெற்றுக்கொண்டிருந்த மக்களும் தாக்குதல்களுக்கு இரையாகினர். காயப்பட்டவர்கள், அவர்களைச்சுமந்து வந்த உறவினர்கள், நண்பர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழிகளில் மடிந்தனர்.

புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அரசு யுத்தத்தில் இறந்த உறவுகளை நினைவுகூருவதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனப் பகிரங்கமாக அறிவித்தது. மறுபுறம் பொலிஸார் மூலம் நீதிமன்றத் தடை உத்தரவு பெற்று உயிர்நீத்த உறவுகளின் ஆத்மசாந்தி பிரார்த்தனைகள் – அஞ்சலி நிகழ்ச்சிகள் சுதந்திரமாக நடைபெறுவதற்கு இடமளிக்காத பல செயற்பாடுகள் தமிழர் தாயகங்களான வடக்கு, கிழக்கின் பல பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

உயிர்நீத்த எம் உறவுகளை நினைவுகூரும் நிகழ்ச்சிகளில் மக்கள் பெருந்திரளாகக் கலந்துகொள்ளக்கூடாது; பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தமது நெஞ்சத்தில் பொதிந்திருக்கும் கவலைகளைப் பகிர்ந்துகொள்ளக்கூடாது; ஊடகங்கள் இவற்றைக்காட்சிப்படுத்தி சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லக்கூடாது; சர்வதேசம் தமக்கு எந்தவிதமான அழுத்தங்கள், நெருக்கடிகளையும் தந்துவிடக்கூடாது. பெரும்பான்மையினத்தின் வாக்கு வங்கி குறைந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பதாலேயே பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டிவிடுவதைப்போன்ற இரட்டைமுகச் செயற்பாட்டை அரசு முன்னெடுக்கின்றது.

கடந்த ஐந்து வருடங்களாக வவுனியா மாவட்டப் பிரஜைகள் குழு நடத்தும் மே 18 ஆத்மசாந்தி அஞ்சலிக் கூட்டங்களில் நேரடியாக நானும் பங்களிப்புகளை வழங்கியுள்ளேன். 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக அப்போதைய அரசால் அறிவிக்கப்பட்டதன் பின்னர், போரில் உயிர்நீத்த எமது உறவுகளுக்கான ஆத்மசாந்தி பிரார்த்தனை அஞ்சலிக் கூட்டங்களை முதல் தடவையாக 2010ஆம் ஆண்டு நாங்கள் வவுனியாவில் நடத்தினோம். சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தை அஞ்சலிக் கூட்டத்துக்காக நாங்கள் முற்பதிவு செய்திருந்தபோது, இராணுவப் புலனாய்வாளர்கள் மண்டப உரிமையாளர்களை மிரட்டியதால் மண்டப அனுமதி மறுக்கப்பட்டது.

பல்வேறு தடைகள் அச்சுறுத் தல்களுக்கு மத்தியில் நாங்கள் விரைந்து மாற்று இட ஏற்பாடுகளை மேற்கொண்டு வவுனியா நகர சபை மண்டபத்தில் அஞ்சலிக் கூட்டத்தை நடத்தியிருந்தோம். அப்படியிருந் தும் நிகழ்ச்சிக்காக அச்சடிக்கப்பட்டிருந்த பதாகைகளைப் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் கிழித்தெடுத்துக்கொண்டு சென்றிருந்தனர்.

அன்றிலிருந்து இன்றுவரை போரில் உயிர்நீத்த எமது உறவு களுக்கான அஞ்சலிக் கூட்டங் களை கடந்த ஐந்து வருடங்களாக பல்வேறுபட்ட அச்சுறுத்தல்கள், சவால்கள், ஆபத்துகள் என்பவற்றுக்கு மத்தியில் வவுனியா பிரஜைகள் குழுவுடன் இணைந்து தொடர்ச்சியாக நடத்தி வந்திருக்கிறோம்.

குறிப்பாக, வவுனியா பிரஜை கள் குழுவின் தலைவர் உட்படப் பல உறுப்பினர்கள் அச்சுறுத்தப் பட்டுள்ளார்கள். குழுவின் தலைவர் கி.தேவராசாவை நெடுங்கேணி பகுதியில் வைத்து இரும்புக்கம்பிகளால் இனந்தெரியாதவர்கள் தாக்கினர். படுகாயப்படுத்தியவரை இறந்துவிட்டதாக எண்ணி தூர்க்கி வயலுக்குள் வீசிவிட்டுச் சென்றிருந்தனர். அதுமட்டுமன்றி, அக்குழுவின் உறுப்பினர்களின் நெற்றியில் கைத்துப்பாக்கியை வைத்த இராணுவப் புலனாய்வாளர்கள் சிவில் சமூக மனித உரிமை செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இறந்தவர்களுக்கான தேசிய துக்க நிகழ்ச்சிகளை நடத்தக்கூடாது. அரசு மற்றும் பாதுகாப்புப் படையி னருக்கு எதிரான நடவடிக் கை களை நிறுத்திக்கொள்ள வேண்டும் என அச்சுறுத்தல் விடுத்தனர். அந்த நிலையிலும் இம்முறையும் ஆறாவது தடவையாக நினைவேந்தல் எழுச்சி நிகழ்ச்சியை நடத்தும் பிரஜைகள் குழுவின் அர்ப்பணிப்பு மற்றும் நாங்கள் இயக்கத்தின் இளைஞர்களின் துணிவு இவ் விடத்தில் மெச்சப்படவேண்டிய தொன்று.

அதேநேரம் இங்கே வருகை தந்திருக்கும் மக்கள் பிரதிநிதிகள் இத்தகைய எழுச்சி நிகழ்ச்சிகள், மக்கள் போராட்டங்களின் போதெல்லாம் தமது பங்களிப்புகள், பொறுப்புகள் என்ன என்பதைதமது மனச்சாட்சியிடம் கேள்வி எழுப்ப வேண்டும்; சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இறுதி யுத்தத்துக்குப்பின்னர் தமிழர் புலங்களான வடக்கிலும் கிழக்கிலும் உயிர் ஆபத்தான காலங்களில் பல்வேறுபட்ட ஜனநாயகப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற்போனவர்களைக் கண்டறிதல், காணி அபகரிப்புகள், வாழ்வாதாரப் பிரச்சினைகள் என எம்மக்கள் அன்றாடம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு நிவாரணம் வேண்டி பல போராட்டங்கள் நடத்தப்பட்டன.

அரசு தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் நோக்கத்தில் ‘மண்ணின் மகிமை’ என்ற புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்திய போது அதற்கு எதிராகவும் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினோம். போரின் பின்னர் வடக்கு, கிழக்கு இராணுவ ஒடுக்கு முறைக்குள் நலிவுற்றதருணத்தில் எவ்வாறு 2010ஆம் ஆண்டு முதல் தடவையாக முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சியை வவுனியாவில் நடத்தினோமோ அதே போன்றே காணி அபகரிப்புக்கு எதிரான முதலாவது ஜனநாயகப் போராட்டமும் வவுனியாவிலேயே நடத்தப்பட்டது.

இதன்போதெல்லாம் மக்கள் போராட்டங்கள் நிகழ்வுகளில் கலந்துகொள்வதில் பலதரப்பட்ட உயிர் அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள், பாதுகாப்புப் பிரச்சினைகள் காணப்பட்டன. அக்காலங்களில் ஊடகவியலாளர்களை விடவும் இராணுவப் புலனாய்வாளர்களே புகைப்படக்கருவிகளுடன் வருகை தந்து ஒவ்வொரு நிகழ்வையும் பதிவுசெய்தார்கள். இதன்போதெல்லாம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஏன் தலைமறைவாகியிருந்தார்கள்? ஏன் மக்களோடு மக்களாக நிற்கவில்லை? என்ற கேள்விகள் இன்றும் காணப்படுகின்றன.

சில மாதங்களுக்கு முன்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் அரசுக்கு எதிரான போராட்டங்கள், மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் கலந்தாலோசித்து வேலைத்திட்டங்களை முன்கொண்டு செல்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு கட்சிகளினதும் பிரதிநிதிகள் ஒரு மாவட்ட குழுவையாவது கட்டமைக்க வேண்டும் என பேச்சுகள் நடத்தியிருந்தோம். பங்காளிக் கட்சி தலைமைகளுக்குள் முரண்பாடுகள் பல இருந்தாலும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்கள் மாவட்ட மட்டத்திலாவது ஒரு குழுவைக் கட்டமைத்து மக்கள் நலன் சார்ந்த வேலைத் திட்டங்களை நன்கு திட்டமிட்டு செயற்படுத்துவோம் என்பது தொடர்பாகவும் ஆராய்ந்திருந்தோம்.

ஆனால், தற்போது வரையில் அதற்கான முனைப்புகள் எவையுமே நடைபெறவில்லை. அவ்வாறு நிகழ்ந்திருந்தால் இவ்வாறான நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து காத்திரமாக செய்திருக்க முடியும். இன்று நிகழ்ச்சிகளுக்கு மக்கள் குறைந்த அளவில் பங்குபற்றுகின்றார்களெனில், மாவட்ட அளவிலாவது நாம் இணைந்து செயற்படத் தயாராக இல்லை என்பதாலேயே இந்த நிலைமை என்பதில் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில்கொள்வது சாலச்சிறந்தது.

இன்றைய நினைவேந்தலுக்குப் பல்வேறு கெடிபிடிகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வந்துள்ள இம்மக்கள் பெறுமதியானவர்கள். ஆயினும், எல்லா மக்களும் நடைபெற்றுள்ள போர் விளைவுகளோ, போரின் இழப்புகளோடும் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ளனர் என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஒவ்வொரு வருடமும் கெடுபிடிகளுக்கு மத்தியில் விளக்கேற்றி அஞ்சலித்துவிட்டு போவதோடு மட்டும் எமது கடமைகள் நிறைவுபெற்றுவிட்டதாக நாம் கருதிவிடமுடியாது.

அரசு மற்றும் பாதுகாப்புப் படையி னருக்கு எதிரான நடவடிக் கை களை நிறுத்திக்கொள்ள வேண்டும் என அச்சுறுத்தல் விடுத்தனர். அந் நிலையிலும் இம்முறையும் ஆறாவது தடவையாக நினைவேந்தல் எழுச்சி நிகழ்ச்சியை நடத்தும் பிரஜைகள் குழுவின் அர்ப்பணிப்பு மற்றும் நாங்கள் இயக்கத்தின் இளைஞர்களின் துணிவு இவ் விடத்தில் மெச்சப்பட வேண்டிய தொன்று.

போரால் கடுமையாகக் காயமுற்றுள்ளவர்களுக்கு – பெண்களைத் தலைமைத்துவமாக கொண்டுள்ள குடும்பங்களுக்கு – தடுப்பிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு, காணாமல்போனவர்களின் உறவுகள் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கு என்ன செய்யப்போகிறோம்? நாம் எவ்வகையில் அவர்களுக்கு உதவி செய்யப்போகின்றோம் என்ற மனத்தாகமே எங்களிடம் இருக்க வேண்டும்.

எமது கண் முன்பாகவே பல ஆயிரம் போராளிகள், குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், பொதுமக்களை இழந்த பின்பும்கூட கூட்டமைப்புக்குள் உள்ள கட்சிகள் ஐக்கியப்படாமல் நீ பெரிதா, நான் பெரிதா என்ற நிலைப்பாட்டில் இருப்பது இறந்த எமது உறவுகளின் இலட்சிய நோக்கத்தைக் களங்கப்படுத்தும் செயலாகும். எனவே, கூட்டமைப்பை ஒரு பலமான அரசியல் இயக்கமாக உருவாக்குவதே நாம் எமது உறவுகளுக்குச் செய்யும் பிரதியுபகாரமாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகார நீதியையும், வாழ்க்கைத்தர மேம்பாட்டையும் ஏற்படுத்த வேண்டும் என்ற உண்மையான நோக்கமும், விருப்பமும் இருக்குமாகவிருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவுசெய்யப்பட்டு ஒரு யாப்பின்கீழ் பலம் பொருந்திய ஒரு சக்தியாக உருவெடுக்க அனைத்துத் தரப்பினரும் உழைக்க வேண்டும். எனவே, வாழ்க்கையில் சொல்லமுடியாத இழப்புகளையும், வலிகளையும் சந்தித்து நொந்துபோயுள்ள மக்களின் அரசியல் அபிலாஷைகளோடு விளையாடாமல் நாங்கள் உண்மையாக இருப்போம்; மக்களின் விடுதலைக்காக விசுவாசமாக உழைப்போம்.

புதிய அரசும் எங்களை பகடைக் காயாகப் பயன்படுத்த முயல்கிறது. எமது உறவுகளான தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யுமாறு கூறினால், சிங்கள மக்கள் கோபித்துக்கொள்வார்கள். எமது மக்களின் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவிக்குமாறு கூறினால் சிங்கள மக்கள் எதிராக வாக்களித்து விடுவார்கள். இவ்வாறான மாயைகளைக் கட்டியெழுப்பும் இந்தப் புதிய அரசுக்குப் பாதகம் வராமல் எமது மக்களின் உரிமைகளை விட்டுக்கொடுத்தே நாங்கள் அரசியல் நடத்த வேண்டும் என்பது பலருடைய எதிர்பார்ப்பாக உள்ளது. ஆனால், இனியும் சிங்கள மக்களின் நலனுக்காக அரசியல் செய்யமுடியாது. எமது மக்களின் உரிமைப் பிரச்சினைகளுக்காக – வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்காக தீர்வுகோரி தீவிர ஜனநாயகப் போராட்டங்களை நடத்துவதற்கு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து கூட்டாக வீதியில் இறங்கவேண்டும். தொய்வுறாத போராட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும்.

எனவே, அதற்காக எங்களுடைய தனிப்பட்ட நலன்களைக் களைந்து, சிவில் சமூக அமைப்புகளைப் பலப்படுத்தி அவற்றுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களை ஒன்றுபட்டு நடத்துவதன் ஊடாக உண்மையான விடுதலையை வென்றெடுக்க முடியும்” – என்றார்.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 60 | 60 | 60 | 60–80 | 30 |
| கத்தரி | 90 | 40–80 | 80 | 80 | 100 | 50 | 60–80 | 45 |
| கரட் | 120 | 120 | 80–140 | 120 | 140 | 240 | 200–220 | 150 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 50 | 50 | 60 | 60 –80 | 40 |
| பயிற்றை | 160 | 140 | 160–200 | 140 | 140–160 | 120 | 120 –160 | 60 |
| பாகல் | 180 | 160 | 180 | 140 | 160 | 120 | 120 –140 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 100 | 80 –90 | 100 | 140 | 140 | 75 |
| பெ.வெங்காயம் | 130 | 120 | 120 | 120 | 120 | 120 | 130 –140 | 90 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 50–100 | 100 | 110 | 100 | 120 | 85 |
| பூசணி | 40 | 100 | 40 | 40 | 30 | 40 | 50 | 15 |
| தக்காளி | 80 | 80 | 80 | 140 | 80 | 80 | 70 –80 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 40 | 40 | 50 | 25–30 |
| கீரை | 40 | 70 | 30–50 | 10–20 | 40–50 | 50 | 35 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 40 | 50 | 50 | 80 | 60 | 60 | 80 | 20 |
| புடோல் | 80 | 80 | 100 | 60 | 80 –100 | 80 | 80 | 80–60 |
| கோவா | 100 | 80 | 70–100 | 80 | 80 | 100 | 80 | 40 |
| வெண்டி | 120 | 80 | 80–100 | 80 | 120–130 | 60 | 80 | 40 |
| போஞ்சி | 140 | 160 | 160 | 140 | 140–160 | 340 | 200 | 120 |
| லீக்ஸ் | 180 | 180 | 160 | 180 | 180–200 | 240 | 220 | 170 |
| தேங்காய் | 60 | 30–40 | 50 | 50–60 | 40–60 | 50 – 60 | 35–50 | 45–50 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 110 | 100 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 200 | 140 | 200 | 160 | 140 | 120 | 120 –140 | 140 |
| வல்லாரை | 25 | 80 | 10 | 10 | 40 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 80 | 120 | 50 | 140 | 80 | 120 | 150 | 80 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 120 | 120 | 140 | 180 | – |
| முருங்கைக்காய் | 500 | 300 | 350–500 | 200 | 300 | 400 | – | 200 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 5 | 9 | 4 | 8 | 3 | 1 | 6 |
| 9 | 1 | 4 | 7 | 6 | 3 | 2 | 8 | 5 |
| 3 | 6 | 8 | 1 | 2 | 5 | 4 | 7 | 9 |
| 6 | 3 | 7 | 2 | 1 | 9 | 5 | 4 | 8 |
| 8 | 9 | 2 | 4 | 5 | 6 | 1 | 3 | 7 |
| 4 | 5 | 1 | 8 | 3 | 7 | 6 | 9 | 2 |
| 2 | 7 | 6 | 3 | 9 | 4 | 8 | 5 | 1 |
| 5 | 8 | 3 | 6 | 7 | 1 | 9 | 2 | 4 |
| 1 | 4 | 9 | 5 | 8 | 2 | 7 | 6 | 3 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | | 9 | 3 | | |
| 3 | | 7 | 5 | 1 | | | | |
| | | | 3 | | | 6 | 4 | 7 |
| | | 3 | 9 | | 1 | 7 | | 8 |
| | 1 | | 2 | | 7 | | 9 | |
| 7 | | 4 | 8 | | 6 | 5 | | |
| 2 | 3 | 6 | | | 5 | | | |
| | | | | 2 | 3 | 9 | | 6 |
| | | 5 | 4 | | | | 3 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 500 | 600 | 700 | 700 | 600 |
| நண்டு | 200 | 500 | 300 | 300 | 200 | 350 |
| கணவாய் | 300 | 500 | 500 | 500 | 600 | 450 |
| பாரை | 500 | 500 | 500 | 600 | 600 | 390 |
| சுறா | 500 | 500 | 500 | 700 | 500 | – |
| சீலா | 250 | 400 | 400 | 350 | 250 | – |
| விளை | 500 | 400 | 400 | 400 | 400 | 300 |
| மூரல் | 250 | 400 | 350 | 300 | 300 | 250 |
| கும்பிளா | 300 | 350 | 350 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 600 | 700 | 350 | 400 | 200 | – |
| ஒரா | 300 | 300 | 350 | 300 | 250 | – |
| திரளி | 150 | 250 | 250 | 160 | 100 | – |
| நகரை | 150 | 300 | – | 300 | – | 250 |
| சூடை | 150 | 250 | 300 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 150 | 250 | 250 | 200 | 250 | – |
| நிருக்கை | 150 | 300 | 300 | 300 | – | 120 |
| பாலை | 350 | 300 | 250 | 250 | – | – |
| வாழை | 100 | 200 | – | 100 | – | – |
| கொய் | 100 | 200 | 60 | 400 | 50 | – |
| மதனம் | 150 | 300 | 220 | 250 | 250 | 250 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### அறிவும் ஆற்றலும்

எதிர்வாதம் எதுவுமின்றிக் குருவிற்குக் கீழ்ப்படிதலும், பிரம்மச்சரியத்தைக் கண்டிப்பாகப் பின் பற்றுதலும் வெற்றி பெறுதற்குரிய ரகசியங்களாகும். பெரியவர்கள் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள், அதன் விளைவாக வரும் தன்மைகளை மனிதகுலம் பெற்று அனுபவிக்கிறது. தெய்வீகத்தன்மை இல்லாமல் பெறுகிற மிதமிஞ்சிய அறிவும் ஆற்றலும் மனிதர்களைச் சாத்தான்களாக்கி விடுகின்றன.

## நாளை

**வைகாசி-10**

**ஞாயிற்றுக்கிழமை 24.05.2015**

திதி: ஷஷ்டி: மு.ப. 10.01வரை

நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ.4.26 வரை

சுபநேரம்: 08.52-10.22 வரை

இராகுகாலம்: 04.22-05.52 வரை

# பாகற்காயின் பல்வேறு மருத்துவ குணங்கள்

பாகற்காயின் கசப்புச் சுவைக்கு பயந்தே பலர் பாகற்காயை சாப்பிடுவது இல்லை. கொடி வகையைச் சேர்ந்த இந்த காய், கொம்பு பாகற்காய், மிதி பாகற்காய் என இரண்டு வகைப்படும். இதன் சுவை என்னவோ கசப்பாக இருந்தாலும், எண்ணற்ற மருத்துவக் குணங்கள் இந்த காயில் அடங்கியுள்ளன. பாகற்காயின் மருத்துவக் குணங்களைப் பற்றி இப்போது பார்ப்போம்.

- பாகற்காய் உணவுப் பையிலுள்ள பூச்சியைக் கொல்லும். பசியைத் தூண்டும், பித்தத்தைத் தணிக்கும். பெண்களுக்கு தாய்ப்பால் சுரக்க உதவும். இதனுடன் புளி சேர்த்துக் கொண்டால் நல்லது.
- இதை அவ்வப்போது உணவில் சேர்த்துக் கொண்டால், சுரம், இருமல், இரைப்பு, மூலம், வயிற்றுப் புழு இவை நீங்கும்.
- இந்தபாகற்காய்நீரிழிவுநோயாளிகளுக்கு நல்ல மருந்தாகும்.
- பாகல் இலையை அரைத்து உடம்பெல்லாம் தட்வி ஒரு மணி நேரம் ஊறிய பின் குளிக்க வேண்டும். இவ்வண்ணம் மூன்று நாள்கள் செய்து வந்தால் போதும், நாய்க்கடியின் விஷம் உடம்பில் ஏறாது.
- ஒரு பிடி கொடுப்பாகல் இலையுடன் ஐந்தாறு மிளகைச் சேர்த்து ஈரமற்ற அம்மியில் அரைத்து கண்களைச் சுற்றிப் பற்றுப் போட்டு வர மாலைக்கண் நோய் குணமாகும்.
- மூன்று நாள்களுக்கு ஒருமுறை பாகற்காய் ஜூஸ் குடித்து வந்தால் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் கட்டுப்பாட்டில் வைக்கலாம்.
- பாகல் இலைச் சாற்றை நிறையக் குடித்து வாந்தி எடுத்தால் அத்துடன் பாம்பு (கண்ணாடி விரியன்) கடித்த விஷம் நீங்கும்.
- பாகல் இலைச் சாற்றை ஓர் அவுன்ஸ் எடுத்து அதில் அரை அவுன்ஸ் நல்லெண்ணெயைக் கலந்து உட்கொண்டால் உடனே கொலரா நீங்கும்.
- உடலில் கட்டி, புண்கள் இருந்தால் ஒரு கப் பாகற்காய் சூப் எடுத்து அதில் ஒரு டீஸ்பூன் எலுமிச்சைச் சாறு கலந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட மூன்று மாதங்களுக்குள் ரத்தம் சுத்தமாகி தோல் பளபளப்பாகி விடுமாம்.
- சீரான முறையில் பாகற்காய் ஜூஸ் குடித்து வந்தால், செரிமான அமிலம் சுரப்பது மேம்படும். எனவே பசியும் அதிகரிக்கும்.
- கணைய புற்றுநோய் அணுக்களை அழிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.
- தினமும் காலையில் வெறும் வயிற்றில், ஒரு கப் பாகற்காய் ஜூஸ் உடன் ஒரு ஸ்பூன் எலுமிச்சை ஜூஸை கலந்து குடித்து வரவும்.
- இதனை தொடர்ந்து 3–6 மாதங்கள் வரை செய்து வரும் போது, தோல் அழற்சி தொடர்பான பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.
- பாகற்காயில் பீட்டா-கரோட்டின் மற்றும் வைட்டமின் ஏ உள்ளதால், கண் சம்பந்தமான நோய்களுக்கு தீர்வாக உள்ளது.



# யா/ இணுவில் இந்துக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா

**23,24,25 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு,திங்கள்) கல்லூரி வளாகத்தில் கொண்டாடப் படுகின்றது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் வரையப்படு கின்றது.**

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இணுவில் திருவூரில் 150 வருடங்களைப் பூர்த்தி செய்து பழம் பெருங் கல்லூரியாக இணுவில் இந்துக் கல்லூரி விளங்கி வருகின்றது. திண்ணைப் பள்ளிக் கூடமாக ஆரம்பிக்கப்பட்டு பின் சைவப்பிரகாச வித்தியாசாலையாக வளர்ந்து இன்று இந்துக்கல்லூரியாக மிளிர்ந்து நிற்கின்றது. அறியாமையை அகற்றி அறிவொளி பரப்பும் இந்துக் கல்லூரி மாணவர்கள் ஒழுக்கம், கடமை தவறாமை, கட்டுப்பாடுகளுக்கு இசைந்து ஒழுகுதல் முதலிய நற்பண்புகளைப் பெறவும் வழிகாட்டி வருகின்றது. 'உழைப்போம் உயர்வோம்' என்ற மகுட வாசகத்தைக் கொண்ட இந்தக் கல்லூரி இலங்கைத் தீவில் விளங்கும் சைவத் தமிழ்ப்பாடசாலைகளில் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு அடுத்த மூத்த பாடசாலையாகப் பதிவு பெற்ற வரலாற்றைக் கொண்டதாகும்.

ஆறுமுகநாவலர் சைவமும் தமிழும் தழைக்க என 1848இல் வண்ணார் பண்ணையிலும் 1864இல் சிதம்பரத்திலும் பாடசாலைகளை நிறுவினார். இணுவில், கோப்பாய், கந்தர்மடம், மாதகல், புலோலி முதலிய ஊர்களில் தமது சிஷ்யர்களுக்கு கட்டளை இட்டு சைவத் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவச் செய்தார். ஊர்கள் தோறும் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவவேண்டும் என்ற நாவலர் பெருமானின் பேராவல் பூர்த்தியாக அவரது மாணவர்களும் சக பாடிகளுமாக பலர் தமது கிராமங்களில் திண்ணைப் பள்ளிகளைத் தொடங்கி சமய நூல்களையும் கருவி நூல்களையும் இலவசமாகக் கற்பித்து வந்தார்கள். இவ்வாறு இணுவிலிலும் நாவலரது மாணவர்களாகிய இணுவிலைச் சேர்ந்த சித்தானந்த பானு, நடராசா ஐயர், நாவலரின் நண்பர் மு.வெங்கடாசலஐயர், சுப்பிரமணியர், சரவணச் சட்டம்பியார், சின்னத்தம்பிச் சட்டம்பியார் ஆகியோரால் திண்ணைப்பள்ளிகள் தொடக்கப்பட்டு நடத்தப்பட்டுவந்தன.

இந்த வகையில் 1860களில் இணுவிலில் திண்ணைப் பாடசாலை ஒன்றை அமைத்து வெங்கடாசல ஐயர் நடத்தி வந்தார். சிறிது காலத்தின் பின்னர் ஐயர் உறவினர்களைச் சந்திப்பதற்காகவும் தல யாத்திரையின் பொருட்டும் இந்தியா பயணமானார். இதன் காரணமாக இந்தத் திண்ணைப் பாடசாலையைப் பொறுப்பேற்ற இணுவையூர் அம்பிகைபாகரின் செயல்திறமையால் இந்தப் பாடசாலை வித்தியாசாலை என வளர்ச்சி கண்டது. இந்தப் பாடசாலையின் சிறப்பைக் கண்ணுற்ற பலரும் இதனை அம்பிகைபாகர் பள்ளிக் கூடம் என அழைக்கலாயினர்.




1903 இல் அம்பிகைபாகர் இறக்க இளையதம்பி என வழங்கிய இணுவில் சந்திரசேகரம் என்பவர் தலைமை ஆசிரியரானார். இவர்1927 இல் இளைப்பாற அம்பிகைபாகரின் மகன் வைத்திலிங்கம் தலைமை ஆசிரியரானார். 1941 இல் இந்தப் பாடசாலை இந்து போர்ட்டிடம் கையளிக்கப்பட்டது. முகாமையாளராக எஸ்.அட்சலிங்கமும், தலைமை ஆசிரியராக நீர்வேலிப் பண்டிதர் தம்பையாவும் நியமிக்கப்பட்டனர். தம்மையா பண்டிதருக்குப்பின் குப்பிளான் இராமலிங்கம், இணுவில் சி.கனகசுந்தரம், நீர்வேலி பு.சின்னத்துரை, திருநெல்வேலி கனகரத்தினம், புங்குடுதீவு நல்லதம்பி, இணுவில் திருமதி வே.ஆயிலியம் , வண்ணார் பண்ணை அரியநாயகம், இணுவில் பண்டிதர் இ.இராசலிங்கம், சுதுமலை திருமதி ச.ஆறுமுகராசா ஆகியோர் பாடசாலையின் முதல்வர்களாகக் கடமையாற்றினார்.

இந்தப் பாடசாலையில் உயர் தர வகுப்புக்கள் ஆரம்பமாக வேண்டும் என்ற ஆவலினால் பலரது முயற்சியாலும் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் செய்த பரிந்துரையினாலும் இந்தப் பாடசாலை 1978 இல் மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டது. 1985 முதல் எஸ்.எம்.மூர்த்தி அதிபராகக் கடமையாற்றினார். இவரைத் தொடர்ந்து 1987 முதல்1991 வரை ஆ.கமலநாதன் அதிபராகக் கடமைப் பொறுப்பேற்றார். 1991 இல் சு.தம்பித்துரை அதிபராகப் பதவி ஏற்றார்.

இந்தக் கலூரியின் பழைய மாணவனும் பிரதேச கல்விப் பணிப்பாளருமாக விளங்கிய இரா.சுந்தரலிங்கத்தின் பெரு முயற்சியால் 1993ஆம் ஆண்டு ஏப்ரல் 5ஆம் திகதி தொடக்கம் இந்தப் பாடசாலை. இணுவில் இந்துக் கல்லூரி எனக் கல்லூரி அந்தஸ்துப் பெற்றது. சு.தம்பித்துரையைத் தொடர்ந்து க.கனகராசா 1998இல் அதிபராகக் கடமை ஏற்றார். தொடர்ந்து 2002 இல் செ.குபேரநாதன் அதிபர் பொறுப்பேற்று2003 இல் உதவிக் கல்விப் பணிப்பாளர் நியமனம் பெற்றுச் சென்றார். 2003இல் அதிபராகக் கடமையேற்ற வி.சச்சிதானந்தன் 2008 வரை பணியாற்றினார். 2009 இல் சி.கிருபாகரனும் அவரைத் தொடர்ந்து சு.சண்முககுலகுமாரனும் அதிபர் பதவி வகித்தனர். 2012 ஒக்ரோபரில் தற்போதைய அதிபர் மு.செல்வஸ்தான் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இன்றைய அதிபர் தலைமையில் கல்வித்துறையிலும், விளையாட்டு, நாவன்மை, சித்திரம், கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி எனப் பல துறைகளில் வெற்றி நடைபோடுகின்ற ஒரு கல்லூரியாக இணுவில் இந்துக் கல்லூரி மிளிர்ந்து வருகின்றது. பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து பணியாற்றுகின்ற இவரது சிறப்பால் பல சாதனைகள் புரியப்பட்டு வருகின்றன. அவைகளுக்கு மகுடம் வைத்தாற்போல் பாடசாலை ஆரம்பித்து 150 ஆவது நிறைவைக் கொண்டாடும் இந்த வேளையில் நினைவு மண்டபமாக இருமாடிக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இணுவில் இந்துக் கல்லூரி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் மூலம் கல்லூரியில் பற்றுக் கொண்ட பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், நண்பர்கள், வெளிநாட்டில் உள்ள கல்லூரியின் உறவுகள் யாவரும் சேர்ந்து இந்தக் கட்டட்தை அமைப்பதற்கு உதவி புரிந்துள்ளனர். 2007 ஆம் ஆண்டு வி.சச்சிதானந்தன் அதிபராக இருந்த காலத்தில் சைவப்பிரகாசம் என்ற நூல் 143ஆவது அகவை நிறைவு மலராக வெளியிடப்பட்டது. இந்த ஆண்டு அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் 150 ஆவது அகவை நிறைவு மலராக இணுவில் இந்து எனும் நூல் வெளியிடப்படுகின்றது. இந்த வெளியீடுகள் கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகளாக அமைகின்றன.

கல்லூரியின் தலைமைப் பொறுப்பேற்றிருந்த ஒவ்வொரு அதிபர்களின் காலத்திலும் கல்லூரி பௌதிக வளரீதியாகவும் மாணவரின் பெறுபேறுகள் மற்றும் அடைவு மட்டம் ரீதியாகவும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

பழம்பெருமையுடன் புகழ்பூத்து விளங்கும் கல்லூரி, மாணவர்களது செயற்பாட்டுக்குக் களமாக விளங்குகிறது. கல்வி, விளையாட்டு மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் கோட்ட, வலய, மாவட்ட மட்டங் களில் பல சாதனைகளை கடந்த காலங்களில் நிகழ்த்தியுள்ளது. இந்தக் கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்து வருகின்றனர்.

இணுவில் கிராமத்தின் கண்ணாக விளங்கும் இந்தக் கல்லூரி நீண்டதொரு கல்விப் பாரம்பரியத்தினூடாக ஆயிரமாயிரம் நல் மாணாக்கர்களை உருவாக்கி வருகின்ற கலாபவனமாக விளங்குகின்றது.

சமூகக் கட்டுமானத்தின் பல்பரிமாண அம்சங்களை ஒன்றிணைத்து கால ஓட்டத்தில் ஏற்படுகின்ற சிந்தனை மாற்றங்களை அனுசரித்து வாழ்வியலுக்குப் பொருத்தப்பாடுடைய அறிவியல் விற்பனர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கல்லூரியானது மாணவர்கள் தம் வாழ்வில் எதிர்நோக்கும் சவால்களை சத்திய வழிநின்று முகங்கொடுத்து வெற்றிகொள்ளும் தேர்ச்சி மிக்கவர்களாக ஆக்குவதை தனது தொலைநோக்காகக் கொண்டிருக்கிறது.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
(ஆசிரியர்)

# கொஞ்சம் பொறுங்கள்...

## காதலிக்கும் முன்...

காதல் திருமணங்கள் அதிகமாகிவிட்ட காலகட்டம் இது. இருந்தபோதும், சாத்திரமும், சாதி, சமூக, பொருளாதார அம்சங்களும்தான் திருமணப் பொருத்தத்தின் மிகப் பெரிய அம்சமாக தற்போது உள்ளது. உங்களுக்கான துணைவரைத் தேடுவதின் முதல் அம்சம் அவருடன் பேசு[illegible]துதான். இதுவே பரஸ்பர புரிதலுக்கான [illegible]தற்படி. பேசுவது மட்டுமின்றி சற்றுப் [illegible]ழகினால் மேலும் நல்லது. தெளிவாகவும் திறந்த மனத்துடனும் பேசுங்கள். பேசுவதற்கு மேலாக அவரையோ நன்கு கவனியுங்கள். மகிழ்ச்சியானவரா,சிடுமூஞ்சியா, சந்தேகப் பேர்வழியா, சகஜமாகப் பழகக் கூடியவரா. தெளிவாகத் தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்பவரா ஆராயுங்கள்.



✠ அந்தக்குணாதசியங்கள் உங்களது குணாதிசியங்களுடன் ஒத்துப்போகக் கூடியதா என்பதை அனுமானித்துக் கொள்ளுங்கள். கலந்து பேசக் கூடியவராக இருப்பது அவசியம். உங்கள் இருவரிடையோ அல்லது குடும்பத்திற்குப் பொதுவானதாகவோ ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டால் அது பற்றிக் கலந்துரையாடி முடிவு எடுக்கக் கூடியவராக இருப்பது அவசியம்.

✠ ஒற்றைப் போக்கில் தானே திடீர் முடிவுகள் எடுப்பராயின் பின்னர் பல பிரச்சனைகள் தோன்றலாம். அதே போல உங்களுக்கு ஏதாவது தனிப்பட்ட பிரச்சனை சஞ்சலம் போன்றவை ஏற்படுமாயின் அவற்றிக்குக் காது கொடுத்துக் கேட்பராக இருக்க வேண்டும். துயர் மேவி கண்ணீர் சிந்தும்போது தோள் கொடுத்து ஆதரவு அளிப்பவாராக இருப்பவராக இருக்க வேண்டும்.

✠ மனதில் அன்பும் ஆதரவும் நிறைந்தவரா என்பதைக் கண்டறிய முயலுங்கள். அவரது குடும்பச் சூழல் எவ்வாறானது. பெற்றோர் மற்றும் சகோதரங்களுடன் சுமுகமான உறவு இருக்கிறதா, விட்டுக் கொடுப்புடன் பழகக் கூடிய தன்மையுள்ள குடும்பச் சூழலிலிருந்து வந்தவரா போன்றவற்றை தெரிந்து கொள்ளுங்கள்.

✠ உங்கள் இருவரிடையேயும் சிற்சில வேறுபாடுகளும் இருப்பதும் வாழ்வைச் சுவாரஸ்யமாக்கலாம். உணவு, உடை, நிறம் போன்ற பல சாதாரண விடயங்களில் விருப்பு வேறுபாடுகள் இருப்பதானது விட்டுக் கொடுப்பு மனப்பான்மையை வளர்க்க உதவும். அத்தோடு தினமும் விடிந்தால், பொழுதுபட்டால் வாழ்க்கை ஒரே விதமாக அமைந்து சலிப்பு அடையாமல் இருப்பதற்கும் உதவும்.

✠ நகைச்சுவை உணர்வு உள்ளவர் விரும்பத்தக்கது. தான் மட்டும் சிரிக்காமல் உங்களையும் சிரிக்க வைக்கக் கூடியவராயின் வாழ்க்கை ஓடம் சிலிர்ப்புடன் மிதந்தோடும். புகைப்பவரை அறவே ஒதுக்குங்கள். புகைப்பவராயின் வாழ்க்கைப் பயணத்தில் அரை வழியில் உங்களை விட்டுவிட்டு நோயோடும் மரணத்தோடும் போராடி அவர் விடைபெற நேரலாம் என்பதை மறவாதீர்கள்.

✠ புதிய ஒருவரைப் புரிந்து கொள்வதற்கு ஓரிரு சந்திப்புகள் போதாது. ஒரு சில மாதங்களாவது பழகிய பின்னர் தான் அவர் எப்படிப்பட்டவர் என்று கணிக்க முடியும். அதன் பின்னரே அந்த நட்பு திருமணம் மட்டும் போகலாமா எனத் தீர்மானிக்க முடியும். ஆனால் எமது சமூகச் சூழல் இன்னமும் அந்தளவு பரந்த மனப்பான்மையுடன் இல்லை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

✠ ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தாலே முடிச்சுப் போட்டுப் பேசுவார்கள். தரகர்களும் தாய் தந்தையரும் மட்டுமே பேசி முடிவெடுக்கும் நிலைமைதான் பெரும்பாலும் இருக்கிறது. எவ்வாறாயினும் யாராவது உடனடியாக திருமணத்தை முடிக்க வேண்டும் என்று சொன்னால் சற்று பொறுமையாக இருங்கள்.

✠ சற்றுக் கால அவகாசம் கேட்டு பின் முடிவிற்கு வருவதே நல்லது. மருத்துவ ரீதியாக மிக நெருங்கிய சொந்தத்தில் மணம் முடிப்பது நல்லதல்ல. பரம்பரை நோய்கள் வருவதற்கான சாத்தியங்கள் அதிகமாகும்.


# மிருகக்காட்சி சாலை



அம்மா அப்பா அழைத்துச் சென்றனர்
அங்கே ஓரிடம்
அங்கிருந்த குயிலும் மயிலும்
ஆடத் தொடங்கின
பொல்லா நரியும் புனுகுப் பூனையும்
எல்லாம் இருந்தன
குட்டி மான்கள் ஒட்டகச் சிவிங்கி
கூட நின்றன
குரங்கு என்னைப் பார்த்துப் பார்த்து
குர் குர் என்றது
யானை ஒன்று காதைக் காதை
ஆட்டி நின்றது
முதலை தலையைத் தூக்கிப் பார்த்து
மூச்சு விட்டது
கரடி கூட உறுமிக் கொண்டே
காலைத் தூக்கிற்று
சிங்கம் புலி எல்லாம் கண்டேன்
கண்டும் பயமில்லை
சூரனைப் போல் நின்றிருந்தேன்
சிறிதும் அஞ்சவில்லை
சென்று வந்த இடம் உனக்குத்
தெரியவில்லையா?
மிருகக் காட்சி சாலைதானே வேறு
ஒன்றுமில்லை!

# வர்ணம் தீட்டலாம் வாங்க







# அறுபதிலும் அசத்தும் அமெரிக்க பறவை

காடு மற்றும் கடல் பகுதிகளில் வசிக்கும் பறவையினங்களில் ஒன்றான அல்பெடராஸ், உலகிலேயே மிகவும் வயதான தாய்ப்பறவை என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த அமெரிக்க பறவை 60 வயதிலும் முட்டை போடுகிறதாம். அமெரிக்காவின் கடல் மற்றும் வனத்துறை ஆராய்ச்சியாளர்கள், ஹானலுலுவின் வடமேற்கு பகுதியில் இருந்து சுமார் 2000 கி.மீ. தொலைவில் உள்ள அடர்ந்த வனப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது அல்பெட்ராஸ் என்ற பறவையின் முட்டை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில், அந்த முட்டையை இட்ட தாய்ப்பறவை 60 வயது நிறைந்தது என தெரியவந்துள்ளது. விஸ்டம் என்று பெயரிடப்பட்ட இந்த அல்பட்ராஸ், 1956ஆம் ஆண்டு 5 வயதில் முதல் முட்டை இட்டது என்று அமெரிக்க ஜியலாஜிக்கல் கணக்கெடுப்பு ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# உழைப்பு மட்டும் போதுமா?

விவசாயம் செய்வதற்குத் தண்ணீர் வேண்டும் என்பதால், கிணறு தோண்ட ஆரம்பித்தார் வரதன்.


முதல் கிணறு தோண்டினார், தண்ணீர் இல்லை. இரண்டாவது கிணறு தோண்டினார்.. அதிலும் தண்ணீர் இல்லை, இப்படிப் பத்துக் கிணறுகள் தோண்டிவிட்டார். ஆனாலும் தண்ணீர் கிடைக்கவே இல்லை. வருத்தத்தில் உட்கார்ந்திருந்தார் வரதன்.

அங்கே வந்த வரதனின் நண்பர், வரதனிடம் விஷயத்தைக் கேட்டறிந்தார்.

இங்கே பாருப்பா, நம்ம ஊருக்கு ஒரு மகான் வந்திருக்காரு. அவரைப் போய்ப் பாரு, ஏதாவது நல்லது நடக்கும் என்று வரதனுக்கு ஆறுதல் கூறினார் நண்பர்.

உடனே மகானிடம் சென்றார் வரதன். தான் கிணறு தோண்டிய கதையைச் சொன்னார்.

பத்து அடிக்கு பத்து கிணறுகளைத் தோண்டியிருக்கே, அதுக்குப் பதிலா ஒரே கிணத்துல 100 அடி தோண்டியிருந்தால் தண்ணீர் கிடைச்சிருக்கும். எந்த விஷயத்துக்கும் வெறும் உழைப்பு மட்டுமே போதாது, உழைப்போட புத்திசாலித் தனமும் வேணும். அப்பதான் அந்தக் காரியம் நினைச்ச மாதிரி நடக்கும் என்றார் மகான்.



வரதனுக்குத் தன் தவறு புரிந்தது. மகானுக்கு நன்றி கூறிவிட்டு வீடு திரும்பினார். மகான் சொன்னபடியே நடந்தது. ஒரே கிணற்றில் 50 அடிகளைத் தோண்டும் போதே தண்ணீர் வந்துவிட்டது! மகிழ்ச்சியோடு விவசாயம் செய்து, நிம்மதியாக வாழ்ந்தார் வரதன்.

# மாற்றத்துக்கு நீங்கள் அடிமையானவர்களா?



இன்றைய கால கட்டத்தில் மாற்றங்கள் என்பது எப்படி புகை பிடித்தலுக்கும்,மது போதைக்கும் அடிமையாவது போல மாற்றங்களுக்கும் அடிமையாகிவிட்டார்கள் என்றே சொல்லலாம். அதையே பெருமையாகவும் பீற்றிக்கொண்டு மற்றவர்களை உசுப்பேற்றி அவர்களையும் அடிமையாக்கும் நிலைமைக்கு தள்ளிக்கொண்டு இருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் மறைமுகமாக நஷ்டமடைந்து தங்களுடைய வாழ்க்கை தரம் குறைந்துகொண்டே போவதை உணரத் தவறுகின்றனர். மாற்றத்தை பலர் தவறாக புரிந்துகொண்டு அதை ஒரு சமுதாய அந்தஸ்து என்று கருதி தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டும், ஏமாந்து கொண்டும் வருகின்றனர். அரச வங்கிகளும் மற்றும் பல தனியார் வங்கி, நிதி நிறுவனங்கள் போட்டிபோட்டுக்கொண்டு மக்களுக்கு பொருள்களை வாங்குவதற்கு கடன் வழங்கி ஊக்கப்படுத்தியதன் மூலம் அவர்களை தங்களுடைய நிரந்தர அடிமையாக்கிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய மாற்றங்கள் குடும்பத்தில் போட்டி, பொறாமையை வளர்த்து குடும்ப உறவுகளை, நட்புகளை சின்னா பின்னமாக்கிக் கொண்டிருக்கின்றது. கடைசியாக மாற்றம் என்பது உனது வாழ்க்கை தரத்தையும் அந்தஸ்தையும் உயர்த்துவதாக இருக்க வேண்டும். அது கட்டாயம் ஆரோக்கியமானதாகவும், எவருக்கும் கெடுதல் செய்யாமல் நமது உறவுகளை நீடித் திருக்கும் பாலமாக விளங்கவேண்டும்.

# தொலைக்காட்சி நடிப்புக் குறித்து பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம், மே 23

தொலைக்காட்சி நாடகத்தில் நடிப்பது தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகத்தின் ஒழுங்குபடுத்தலுடன் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் வவுனியா பிரதேச செயலகத்தின் மண்டபத்தில் காலை 8.30.மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம் பெறவுள்ளது.

வவுனியா பிரதேச செயலாளர் க.உதயராசா தலைமையில் இடம் பெறும் இந்த பயிற்சிப் பட்டறைக்கு எழுத்தாளர் தமிழ்மணி அகளங்கன் மற்றும் ஊடகவியலாளரும் தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளருமான அருணா செல்லத்துரை ஆகியோர் கலந்துகொண்டு கருத்துகளை வழங்கவுள்ளனர். (த–421)

# வதிரிபீட விநாயகர் கொடியேற்றம் நாளை

யாழ்ப்பாணம், மே 23

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் முதலாம் ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். 3 ஆம் திகதி புதன்கிழமை காலை பிராயச்சித்த அபிஷேகமும் மாலை 6 மணிக்கு பூங்காவனத் திரு விழாவும் இடம்பெறும். (ஓ–17)

# கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை

வவுனியா, மே 23

வவுனியா தமிழ்ச்சங்கமும் ஒட்டுசுட்டான் செந்தணல் வெளியீட்டகமும் இணைந்து நடத்தும் செல்வி எஸ்.வேதிகாவின் "கண்ணாடிப் பூக்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கனகராயன் குளம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடை பெறும் இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக படைப்பாளிகள் உலகம் அமைப்பின் தலைவர் த.ஜங்கரனும், தமிழ் எவ்.எம் வானொலி அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தனும் கலந்து கொள்வர். வரவேற்புரையை நெடுங்கேணி பிரதேச செயலாளர் க.பரந்தாமனும், வாழ்த்துரையை வவுனியா தமிழ்ச்சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி.நாதனும் நிகழ்த்துவர். தலைமையுரையைத் தொடர்ந்து தொடக்கவுரையை வவுனியா கல்வியியல் கல்லூரியின் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஆர்.பார்த்தீபனும், சிறப்புரையை ஈழத்தில் பெண் எழுத்தாளர்கள் எனும் பொருளில் மூத்த எழுத்தாளர் தமிழ்மணி க.க.அருந்தவராஜா (மேழிக்குமரன்)வும், அறிமுகவுரையினையும் வெளியீட்டுரையையும் செந்தணல் வெளியீட்டக நிறுவுநர் வன்னியூர் செந்தூரனும் வழங்குவர். நூல் விமர்சன உரையை குரும்பையூர் த.ஜங்கரன் நிகழ்த்துவார். (த–421)

# சேதங்களை

யாழ்ப்பாண நீதிமன்ற வரலாற்றில் இவ்வாறு தாக்குதல் இடம்பெறுவது இதுவே முதல் சம்பவம். இது அதிர்ச்சியளிக்கிறது. நீதிமன்று தாக்கப்பட்டதற்கு போராட்டங்களை ஒழுங்கமைத்திருந்தவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தனர். அது வரவேற்கத்தக்கது.

புங்குடுதீவு மாணவியின் சம்பவம் ஊர்காவற்றுறை நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றது. ஊர்காவற்றுறை நீதிமன்றிலேயே அது தொடர்பான விசாரணை நடக்கும் என்பது தெரிந்ததே. அப்படியிருக்க யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்த வேண்டிய அவசியமில்லை. காரணமில்லாது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சேதமடைந்த பகுதிகள் உடனடியாகத் திருத்தம் செய்யப்பட வேண்டும். ஆவிர சகலருக்கும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் – என்றார். (உ–4)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# வடக்கு அதிவேக நெடுஞ்சாலை அமைப்பு புதிய ஒப்பந்தகாரரிடம்

வடக்கு மாகாண அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகளை புதிய ஒப்பந்தகாரர்களிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற இளைஞர் சந்திப்பின் போது பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நெடுஞ் சாலைகள் நிர்மாணிப்பின்போது பெற்றுக் கொண்ட தரகுப் பணம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர் ஒப்பந்தகாரர்களின் கொடுப்பனவு தொடர்பில் முடிவு எட்டப்படவுள்ளது.

ஜப்பான் அரசின் நிதி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுடன் வடக்கு மாகாண அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ள நிலையில் அவற்றைப் புதிய ஒப்பந்தகாரர்களிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## சரசாலை சிதம்பர விநாயகர் ஆலய மகோற்சவம்

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி அதிகாலை 04.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி காலை 08.30 மணிக்கு இரதோற்சவ திருவிழாவும், இரண்டாம் திகதி காலை 08.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (த)

48ஆம் நாள் மண்டலாபிஷேக பூர்த்தி விழா



புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்யம்பதி அருள்மிகு மீனாட்சி அம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரர் திருக்கோயில் (சிவன்கோயில்)

மகாகும்பாபிஷேகம் 08.04.2015 இல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது. 24.05.2015 ஞாயிற்றுக்கிழமை பகல் மண்டலாபிஷேகப் பூர்த்தி வைபவமும், சங்காபிஷேகமும் நடைபெற்று, இரவு திருக்கல்யாண வைபவமும் அதனைத் தொடர்ந்து அழகிய முத்துச் சப்பறத்தில் எம்பெருமானும் எம்பெருமாட்டியும் வீதியுலா வரும் கண்கொள்ளாக் காட்சியும் நடைபெற விருப்பதால் அடியார்கள் அனைவரும் வருகைதந்து சிவன் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு: பகல் அன்னதானமும் நடைபெறும்.

சிவன் தேவஸ்தானம், புங்குடுதீவு-03. (60088)(10.6) மகாசபையினரும், நிர்வாக சபையினரும்



கம்பர்மலை வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள பத்தினி அம்மன் கோயில்

கும்பாபிஷேக தின விழா

இன்று (23.05.2015) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 1008 சங்காபிஷேகத்துடன் பூஜைகள் நடைபெறவுள்ளன.

இவ்விழா சிறப்புடன் நடைபெற பிரார்த்திப்பதுடன் பத்தினி அம்மாளின் திருவருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்கவும், அருள் பாலிக்கவும் எல்லாம்வல்ல அம்பாளை வேண்டுகின்றோம்.



பரந்தாமன்
சிற்றுண்டி தயாரிப்பாளர்
பத்தினி அம்மன் வீதி,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

**வாகனம் தேவை**

படி ரக வாகனம் (அலுமினியம் பொடி) மாதாந்த வாடகை அடிப்படையில் சாரதியுடன் தேவை.
(60084)(10.6) தொடர்பு: 077 3041 447

**பணிப்பெண் தேவை**

வயோதிபப் பெண்ணை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்கக் கூடிய பெண் தேவை.
(60081)(10.6) தொடர்பு: 077 6741 213

**விற்பனைக்கு**

Scooty pep+, TVS Victor, 21-ஆட்டோ, சைக்கிள் (ஆண்,பெண்) லிஸ்ரர் 5KV ஜெனரேற்றர், அரிசி ஆலைக்குரிய 9 அடி எலிவேற்றர், வீட்டுத் தளபாடங்கள்.
(60085)(10.6) தொடர்பு: 077 9678 733

**Room நாள் வாடகைக்கு**

600/=, 800/=, 1200/=, 2500/=,3950/=, A/C.TV இணைந்த குளியலறையுடன் Hotel Villa, 422, Galle Road, Wellawatte. 072 255 2222 (இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்)

**வேலைவாய்ப்பு**

மஞ்சி, மலிபன், நெஸ்லே, ரிஸ்பரி, ஏமாஸ் தொழிற்சாலைக்கு ஆண்/பெண் தேவை 18 - 35, 35000/= உயர் சம்பளம்.
இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்: 077 292 6468 (60072)(9.3.6)

**காணிகள் விற்பனைக்குண்டு**

சரசாலை மத்தியில் உள்ள 10பரப்பு காணியும், பண்டிசுட்டான்காடு கண்டா வளையில் 10 ஏக்ரர் வயலும், நீர்வேலி வடக்கில் 5பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 077 6231 (60073)(9.3.6)

**விற்பனைக்கு**

ஸ்கூட்டிபெப் (Scooty Pep), கொம்பியூட்டர் மேசை, சுழல் கதிரைகள், பிறீத்திகிறைண்டர் (புதிது) ரைஸ்குக்கர், (National), சொனிசெற் (ரேடியோ DVD பிளேயர்) 1100W, கலர்பிறின்டர்கள், பித்தளை கிடாரங்கள் நெல் அவிக்கும் பெரிய காசாண்டிகள், ரெசிங்ரேபிள் (கண்ணாடி மேசை) என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: 071 588 6692 (60074)(4.3.6)

கோடை கால ஸ்பெஷல்

0777351954



**Majestic Cineplex Jaffna**
கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15





ப்றொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

# இறுதியாட்டத்தில் சென்னை




அஸ்வின், மொகித் சர்மா, நெக்ராவின் கட்டுக்கோப்பான பந்துவீச்சும் ஹசியின் அரைச்சதமும் டோனியின் நிதானமும் கைகொடுக்க முடிவில் 3 இலக்குகளால் பெங்களூரை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதியானது சென்னை.

சென்னை எதிர் பெங்களூர் அணிகளுக்கிடையிலான ஆட்டம். வெற்றி பெறும் அணி மும்பையுடன் இறுதியாட்டத்தில் மோதும். ஆதலால் வாழ்வா? சாவா? போராட்டத்தின் பதற்றம் ஆட்டத்தில் பற்றிக்கொண்டது. மற்றொரு விதமாகவும் இந்த ஆட்டம் மிகமுக்கியமான ஆட்டமாக அமைந்திருந்தது. அதாவது டோனியா? ஹோக்லியா? என்ற இருபெரும் தலைவர்களுக்கிடையிலான போர். இதைவிட டோனியின் சொந்த ஊரான ராஞ்சியில் ஆட்டம் அமைந்திருந்ததால் நாணயச்சுழற்றியிலேயே டோனியின் மக்கள் டோனியின் பெயரை பாடலாக உச்சரிக்கத் தொடங்கியிருந்தார்கள்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னைகளத்தடுப்பைத்தீர்மானிக்க களத்தில் கெயிலுடன் ஹோக்லி. முதல்பந்துப்பரிமாற்றத்தில் முதல் பந்தையே சிக்சராக மாற்றினார் கெயில். ஆனால் எவ்வித பயனும் இல்லை மீதமிருந்த ஐந்து பந்தையும் அப்படியே வீணடித்தார். நெக்ராவின் பந்தில் கெயிலைப்போல் அடித்துக்காட்டினார் ஹோக்லி ஆட்டமிழக்கவும் செய்தார். அதே பந்துப் பரிமாற்றத்தில் வில்லியர்ஸையும் வெளியேற்றினார் நெக்ரா. இதுவே ஆட்டத்தின் திரும்புமுனை என்றும் சொல்லலாம். இரு மிக முக்கிய இலக்குகள் ஒரே பந்துப்பரி மாற்றத்தில் வீழ்த்தப்பட ஆமைவேகத்தில் ஆட ஆரம்பித்தார் கெயில். கெயிலுக்கு உற்சாகத்தை வரவழைக்கும் நோக்கத்தில் அடித்தாட முற்பட்ட டினேஸ் கார்த்திக்கை பவிலியனுக்கு பத்திரமாக அனுப்பினார் நெக்ரா. கெயிலைப் பயமுறுத்தினார் அஸ்வின். அஸ்வின் சுழலில் அங்கும் இங்குமாக திக்குமுக்காடினார் கெயில். கெயிலின் சரிவுகளை சமன்செய்யும் கருவியாக ரெய்னா மாறினார். ஒரே பந்துப்பரிமாற்றத்தில் அடுத்தடுத்து இரண்டு இமாலய சிக்சர்கள் கெயிலின் துடுப்பில் இருந்து பறந்தன. மூன்றாவது பந்தில் தானே பந்துவீசி தானே பிடியெடுத்து கெயிலை வழியனுப்பினார் ரெய்னா. 17வயதுப் பையன் சர்பிராஸ்கானின் ஆட்டத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார் டோனி. இறுதிக்கட்ட அதிரடியால் பெங்களூருக்கு ஆறுதல் கொடுக்கத் தவறவில்லை முடிவில் பெங்களூர் 139-8.

120 பந்துகளில் 140 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. ஐ.பி.எல்லைப் பொறுத்த மட்டில் எட்டக்கூடிய இலக்குதான் என்றாலும் ஸரார்க், வீஸ் போன்ற பந்துவீச்சாளர்களுக்கு முன்னால் இந்த இலக்கை எட்டுவது என்பது பெரும் போராட்டத்துக்குரிய விடயம். இறுதியாட்டக்கனவுடன் களத்தில் சிமித் மற்றும் மிஸ்டர் கிரிக்கட் என்றழைக்கப்படும் ஆஸ்திரேலியாவின் ஹசி. பயிற்றுவிப்பாளர் பிளெமிங் தெரிவித்தது போன்று அதிரடியில் ஆரம்பித்தார் சிமித். ஆனால் விடவில்லை அரவிந். 17 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் சிமித் அதற்குள்ளும் மூன்று பவுண்டரிகள். ஹசியுடன் இணைந்து வெற்றிக்கான இணைப்பாட்டத்தை அமைத்தார் பிளாஸிஸ். ஆனால் ஆட்டத்தில் அதிரடியில்லை. நீடிக்கவும் முடியவில்லை. பிளாஸிஸ் ஆட்டமிழந்ததும் அதே பந்துப் பரிமாற்றத்தில் சகாலின் சுழலில் சிக்கி டக்குடன் வெளியேறினார் ரெய்னா. சென்னையின் தடுமாற்றம் ஆரம்பமானது. இலக்குச்சரிவை தடுக்கும் நோக்கில் தீவிரம் காட்டினார் டோனி. டோனியுடன் நிதானித்தார் ஹசி. நீண்டநேரம் களத்தில் நின்று ஒவ்வொரு பந்துவீச்சாளர்களின் பந்துக்கும் பழக்கப்பட்டதனால் ஹசியை அடித்தாடுமாறு உத்தரவிட்டார் கப்டன் கூல். கேட்கத்தானே வேண்டும் ஒரு பந்துப்பரிமாற்றத்தில் இரண்டு சிக்சர்கள் ஹசியின் துடுப்பில் இருந்து துல்லியமாகப் பாய்ந்தன. தொடர்ந்து அதிரடிக்கு முயன்ற மிஸ்டர் கிரிக்கெட் ஆட்டமிழந்தார் 56 ஓட்டங்களுடன். இறுதி 3 பந்துப்பரிமாற்றங்களில் 27 ஓட்டங்களை எட்டவேண்டும் என்ற நிலைமை. நேகி வந்த வேகத்தில் இமாலய சிக்சர் ஒன்றை விளாசினார். ஒரு பக்கத்தால் இலக்குகள் சரிந்தாலும் மறுமுனையில் டோனி இறுதிவரை நம்பிக்கை கொடுத்தார் முடிவில் சென்னை 2 இலக்குகளால் போராடி வென்று இறுதியாட்டத்துக்கு முன்னெறியது. (ரி)

# தேடிவந்து வாங்கிக்கட்டியது சிம்பாப்வே



பலத்த சோதனையின் பின் மைதானத்துக்குள் அனுமதிக்கப்படும் பாகிஸ்தான் ரசிகர்கள்




ஆறு வருடங்களுக்குப் பின் பாகிஸ்தானில் கிரிக்கெட்டை வரவேற்கும் ரசிகர்கள்



சிம்பாப்வே வீரர்களுக்கு நேரில் சென்று வாழ்த்தும் நன்றியும் தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர்

மலிக், அலி ஆகியோரின் கட்டுக்கோப்பான பந்துவீச்சும் அஹமட், செ-ஜுட் ஆகியோரின் ஆரம்ப இணைப்பாட்டமும் கைகொடுக்க 5 இலக்குகளால் சிம்பாப்வேயிற்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தை வெற்றிபெற்றது பாகிஸ்தான்.

ஆறு ஆண்டுகளுக்குப்பின்னர் பாகிஸ்தானில் நடைபெறும் சர்வதேச ஆட்டம். காணாததைக் காண்பதைப் போல அலைமோதியது ரசிகர் வெள்ளம். அதுவும் ரி-20 ஆட்டம் என்பதனால் கொண்டாட்டங்களுக்குபஞ்சம்இருக்கவில்லை. ஆனாலும் சிம்பாப்வேயின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக இடையிடையே ஹெலிஹொப்டர்கள் வானில் வட்டமிடவே செய்தன.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் மசகட்சாவுடன் சிபெண்டா. சிம்பாப்வேயின் துடுப்பாட்டம் ரி-20 ஆட்டங்களில் இந்தளவுக்கு வளர்ந்துள்ளதே பெரிய விடயம். ஆரம்ப இணைப்பாட்டம் ஐம்பதை எட்டியது. அதிலும் மசகட்சா ஐ.பி.எல். ஆட்டத்தில் வெளிப்படும் சிறந்த இன்னிங்ஸிற்கு சற்றும் குறையாமல் செயற்பட்டார். 58 ஓட்டங்களில் சிபெண்டா ஆட்டமிழக்க அடுத்த பந்திலேயே வெளியேறினார் மசகட்சா. கோவென்றி இருநூறு என்ற சராசரியில் வந்த வேகத்தில் வெளுத்து வாங்கினார். ஆனாலும் மூன்று பவுண்டரிகளுக்கு அப்பால் அவராலும் முடியவில்லை. சிம்பாப்வேயின் அணித்தலைவரும் மத்தியவரிசை நம்பிக் கையுமான சிக்கும்புரா நேற்றைய ஆட்டத்திலும் அணியைக் கரைசேர்க்கத் தவறவில்லை. 12ஆவது பந்துப்பரிமாற்றத்தில் சிம்பாப்வே 100 ஓட்டங்களை எட்டியது. ஒருமுனையில் ரி-20 ஆட்டத்துக்கு போதும் என்ற பங்களிப்பை வழங்கி வீரர்கள் வெளியேறிக் கொண்டிருந்தாலும் மறுமுனையில் நிலைத்துநின்று பிரித்துமேய்ந்து கொண்டிருந்த சிக் கும்புரா சிக்சருடன் அரைச் சதமும் கடந்தார். இறுதிக்கட்ட அதிரடிகளும் கைகொடுக்க முடிவில் சிம் பாப்வே 172-6.



இந்தியாவுக்கு எப்படி சொந்த மண் பலமோ அதேபோல் பாகிஸ்தானுக்கும் சொந்த மண் பலம் அதிகம். எனவே எட்டக்கூடிய இலக்கை நோக்கி களத்தில் அஹமட் மற்றம் சொஜுட். ஆஹமட் தனது பாணியில் அதிரடியைக் காட்டிக்கொண்டிருந்தார் சொஜுட் தனது பாணியில் அஹமட் அடித்து நொருக்க வாய்ப்புகளை வழங்கிக்கொண்டிருந்தார். சிம்பாப்வேயின் தொடக்கத்தைவிட மிக வேகமான சிறப்பான தொடக்கம். நூன்கே பந்துப் பரிமாற்றங்களில் பாகிஸ்தாக் ஐம்பது ஓட்டங்களை எட்டிவிட்டது இலக்குகள் மட்டும் விழுந்தபாடில்லை. 26 பந்துகளில் அரைச் சதம் கடந்தார் அஹமட். சுஞ்ரீம்பாப்வேயின் வெற்றிவாய்ப்பு படிப்படியாக கேள்விக்குறியாகி ஒருகட்டத்தில் இல்லாமலே போனது. இணைப்பாட்டம் நூறினை எட்டிவிட்டது இலக்குகள் சரிக்கப்படவில்லை. 60 பந்துகளில் 64 ஓட்டங்கள் பெற வேண்டும் என்ற நிலைமை அதிரடி தொடரப்பட 5 இலக்குகளால் வெற்றியீட்டியது பாகிஸ்தான். (ரி)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் பூ.சிவதர்சினி

அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி பூ.சந்திரபூரணி

அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (சி.16139)

நலன்புரிசங்கம் (45.6)

வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

## பதினைந்தாம் ஆண்டு நினைவில்....



சின்னத்துரை கனகசபை

(ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி)

திதி 23 . 05 . 2015



சிதம்பரப்பிள்ளை விசாலாட்சி

பதினைந்தாண்டுகள் பறந்தோடிவிட்டாலும் - உம்
பாச நினைவுகள் என்றும் - எம்
மனதில் பதிந்திருக்கும்...

'ஈஸ்வரி இல்லம்', மட்டுவில் தெற்கு.

பாசமிகு (மனைவி) க.பரமேஸ்வரி, பிள்ளைகள்,
(மகன்) க. பரமேஸ்வரன், பிள்ளைகள்,

(6007061186)

# நியாயமான விசாரணைக்கு நீதியமைச்சர் உறுதியளிப்பு

## புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில்

யாழ்ப்பாணம், மே 23

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், நல்லாட்சியை தொடர்ந்து பேணுவதிலும் அரசு உறுதியான நிலையைப் பேணி வருகிறது. வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவி விடயத்தில் நியாயமான முறையில் விசாரணை நடைபெறும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதியமைச்சர் கலாநிதி விஜேயதாஸ ராஜபக்ஷ.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு-கிழக்கு என அனைத்து பாகங்களிலும் எந்தவித இடையூறுகளுமின்றி நீதியை நிலைநாட்டி சட்ட ஒழுங்கைப் பேண நாம் உறுதியாகவுள்ளோம். புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட 18 வயதான பாடசாலை மாணவி விடயத்திலும் நீதி நிலைநாட்டப்படும்.

இந்த மாணவிக்கு இடம்பெற்ற கொடுமையைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளுக்கு பின்னால் அரசியல் காரணங்கள் உண்டு எனக் கூறப்படுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது.

சிலர் இதனை வைத்து அரசியலில் ஆதாயம் தேட முற்படுகின்றனர். அவர்களின் செயல்களால் நல்லிணக்கத்தினைக் குழப்ப முற்படுகின்றனர். இனங்களுக்கிடையில் முறுகல்களை ஏற்படுத்துவதன் ஊடாக நாட்டில் பிரச்சினையை தோற்றுவிக்க சிலர் முற்படுகின்றனர். இவையனைத்தும் நல்லாட்சியை குழப்புவதற்காக தோற்றுவிக்கப்படுகின்ற விடயங்கள்.

பெண்ணை தனது சகோதரியாக, தாயாக மதிக்கும் மனசாட்சியுள்ள, யாராலும் இத்தகைய படுபாதக செயலை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களது கோபம் நியாயமானது. அவர்கள் படும் வேதனையை வார்த்தையால் கூறமுடியாது. அதனால்தான் அப்பிரதேச மக்கள் ஆக்ரோஷமடைந்தனர். இது சூழ்நிலையால் ஏற்பட்ட விடயம்.

இந்தப் போராட்டங்களின்போது யாழ். நீதிமன்றம் தாக்கப்பட்டமை – பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டமை என்பன அத்துமீறிய செயல்கள். அதற்காகத்தான் 130 ஆர்ப்பாட்டக்காரர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த விடயத்தில் பொலிஸார் நடுநிலைமை வகித்து தமது கடமையைச் செய்துள்ளனர். மாணவி கொலை வழக்கிலும் சந்தேகநபர்களாகக் கருதப்படும் 9 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் – என்றார். (உ-4)

# நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 23

வடஅல்வை குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் 26ஆம் திகதி மாம்பழத்திருவிழாவும் 29ஆம் திகதி திருவிளக்குப் பூஜையும் 31ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் நடைபெற்று ஜூன் மாதம் முதலாம் திகதி தேர்த்திருவிழா, 2ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறை வடையவுள்ளது. அடியார்கள் அனைவரையும் பூஜைகளில் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (10)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### அரியரட்ணம் அரியதவசிங்கம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட அரியரட்ணம் அரியதவசிங்கம் 17.05.2015 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியரட்ணம்- நாகேஸ்வரி தம்பதியரின் தவப்புதல்வனும், தாவடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- தங்கம்மா தம்பதியரின் மருமகனும், பரிமளகாந்தியின் (கிளி) அன்புக் கணவரும் நகுலேஸ்வரி (கொழும்பு), அரியேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வாரணியின் (சுவிஸ்) அன்புத் தந்தையும், துஸ்யந்தனின் (சுவிஸ்) அன்பு மாமனும், மிரோனின் (சுவிஸ்) அன்புப் பேரனும், ஜெயராஜா (கொழும்பு), விஜயலக்சுமி (கனடா), காலஞ்சென்ற தியாகராசா மற்றும் தர்மலக்சுமி-புண்ணியலிங்கம் (கனடா), கிருபானந்தன்-புவிமதி (கனடா), கமலாதேவி-வசந்தகுமார் (அமெரிக்கா), அருளானந்தம்-தர்சினி (சுவிஸ்), நடேசானந்தன்-நந்தினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், அபிராமி, செந்தூரன், கேசவன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (27.05.2015) புதன்கிழமை சுவிஸில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி- 0041622960733 (சுவிஸ்)
ஜெயராஜா 0112501555 (கொழும்பு)

தகவல்:
மகிழினி கிரிதரன்
(பெறாமகள்-தாவடி)
021 222 9840

(60083) (10.6)

### திருமதி மங்களகௌரி தயாளநேசன்

(அதிபர்- யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை)



நயினாதீவு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.15/7, முதலாம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களகௌரி தயாளநேசன் 20.05.2015 புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரையா-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை தயாளநேசனின் அன்பு மனைவியும், இரவீந்திரனின் (பொறுப்பதிகாரி- பிரதேசசபை - நயினாதீவு) அன்புச் சகோதரியும், தர்ஷிகா (வைத்தியர்), தக்ஷனா (ஆசிரியை), சஞ்சனா, நிரோஷன், விஸ்ணவி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தகுமாரதாஸ் ஜெயரூபனின் (பொறியியலாளர், நியூசிலாந்து) அன்பு மாமியும், லஷாங்கியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.15/7, முதலாம் ஒழுங்கை,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(60039)(4.3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி தம்பையா

(வளர்மதிஅம்மா)



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற்சுவாமி வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி தம்பையா 21.05.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், ஆறுமுகம் தம்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, கனகசபாபதி, பரமசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வளர்மதி, கமலேஸ்வரி, யோகேஸ்வரி, கலைவாணி, பூமகள் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராஜகோபால், வீரசிங்கம், செல்வராசா, கதாதரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 8.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


24, கடையிற்சுவாமி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்: மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(60077) (10.6)

## மரண அறிவித்தல்

### முருகேசு சபாரத்தினம்



யாழ்ப்பாணம் அரசடியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சபாரத்தினம் (சோடா சபா) நேற்று (22.05.2015) வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு -இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சபாபதி-மாரிமுத்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் சகோதரனும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரி, லிங்கேஸ்வரி, விக்னேஸ்வரன், சீவரட்ணேஸ்வரி (ஆசிரியர், யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை), கேதீஸ்வரன் காலஞ்சென்ற மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசிவகுருநாதன், மதிமுகன், தமிழ்ச்செல்வி, மாதுமை ஆகியோரின் மாமனும், மயூரன், சுதன், தர்மினி, தனுஜா, நிரோஜன், வினுஜா, கோபிகா, தர்மிகா, கோபிசரண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
T.P: 077 48 19 679

தகவல்:
பிள்ளைகள்.

(60070) (10.6)

## மரண அறிவித்தல்

மலர்வு 01 04 1933



உதிர்வு 20 05 2015

### இராசையா தர்மரட்ணம்

( ஓய்வு பெற்ற அரச லிகிதர் )

யாழ்ப்பாணம் சங்கானையை பிறப்பிடமாகவும்,சுன்னாகத்தை வசிப்பிடமாகவும், தற்போது தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட இராசையா தர்மரட்ணம் 20.05.2015 புதன்கிழமை காலமானார்.

சங்கானையை பிறப்பிடமாக கொண்ட இராசையா நல்லம்மா அவர்களின் புதல்வரும், சுன்னாகத்தை சேர்ந்த பிரபல வர்த்தகர் ஐயாதுரை தியாகராஜா, விசாலாட்சி அம்மா அவர்களின் அன்பு மருமகனும்,புஸ்பராணியின் பாசமிகு கணவரும்,சுரேஸ்குமார் (கனடா) ,ரமேஸ்குமார் (லண்டன்), பரிஸ்குமார் (லண்டன்), ரேணுகா (சுவிஸ்), தனேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்மிளா (கனடா), ஜெயநந்தினி (லண்டன்), சசிரேகா (லண்டன்), சத்தியசீலன் (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும், எழிலன், அபூர்வா, கரிகேஷன், கைலி, கிருஷாந், கிருஷிகா, சாகித்தியா, சாகித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும்,காலஞ்சென்ற சீவரட்ணம்,விமலாதேவி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சண்முகராஜாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2015) ஞாயிற்றுக் கிழமையன்று காலை 9.00 மணிக்கு பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 12.00 மணியளவில் கிரியைகள் ஆரப்பிக்கப்பட்டு பி.ப 3.00 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.13,Fairline road,
Dehiwala.
Tel : 0776014009

தகவல் :
மனைவி,பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கந்தையா பரமலிங்கம்

(முன்னாள் உறுப்பினர்- வெள்ளைமாவடி பிள்ளையார் கோயில், மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்ல உபதலைவர்)



தென்மராட்சி வெள்ளை மாவடிப்பிள்ளையார் கோயிலடி, மீசாலையைப் பிறப்பிடமாகவும் கோட்டம்ரவர் இல. 41 E 2/1 பாபர் வீதி, கொழும்பு 13 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமலிங்கம் 20.05.2015 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவகாமி தம்பதியரின் பாசமிகு மகனும், பார்வதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21.05.2015 வியாழக்கிழமை மக்கள் அஞ்சலிக்காக கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, நேற்று (22.05.2015) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்: உறவினரும், நண்பனும் (சதாசிவம்)
077 772 2305

(41143)(4.3.7)

## சேக்கிழார் விழா

யாழ்ப்பாணம், மே 23

நாவற்குழி அறிவொளி மன்ற அறநெறிப் பாடசாலை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசணையுடன் சேக்கிழார் விழாவினை நடத்தவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை அறிவொளி பாடசாலை மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு விழா ஆரம்பமாகும். பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் வ.மேகலிங்கமும் கௌரவ விருந்தினராக இ.சொக்கலிங்கமும் கலந்துகொள்வர்.

(உ–10)

# கழிவு நீர் வாய்க்காலினுள் கறுப்பு நிற மோ. சைக்கிள்

## நீதிமன்ற களேபரத்தின் பின்னர் வீழ்ந்தது மீட்கப்படவேயில்லை

யாழ்ப்பாணம், மே 23

கடந்த புதன்கிழமை யாழ். நீதிமன்ற வளாகத்தின் முன்பாக இடம்பெற்ற களேபரத்தின்போது கழிவு நீர் வாய்க்காலுக்குள் விழுந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் இரு சைக்கிள்களும் கைவிடப்பட்டுள்ளன.

இவற்றின் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களா அல்லது பயம் காரணமாக இதுவரையில் தமது வாகனங்களை மீட்கவில்லையா என்பது தெரியவரவில்லை.

கடந்த புதன்கிழமை யாழ். நீதிமன்றத்தின் முன்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் அத்து மீறி நடந்து கொண்டனர். அதை அடுத்து பொலிஸார் அவர்களை நோக்கி கண்ணீர்புகைக் குண்டுகளை வீசி விரட்டினர். அதிலிருந்து தப்பியோடுகையில் கறுப்பு நிற பள்ஸர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்று யாழ். பொது நூலகம் முன்பாக உள்ள கழிவு நீர் வாய்க்காலுக்குள் வீழ்ந்துள்ளது. அது போன்றே இரு சைக்கிள்களும் வீழ்ந்துள்ளன.

அவை இதுவரையில் மீட்கப்படாமல் அப்படியே கிடக்கின்றன. இந்தக் களேபரத்தைத் தொடர்ந்து 60 மோட்டார் சைக்கிள்கள், 43 சைக்கிள்கள், 5 ஓட்டோக்கள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். அவை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும் கழிவு நீர் வாய்க்காலுக்குள் வீழ்ந்து கிடக்கும் இந்த இரு சைக்கிள்களையும் மோட்டார் சைக்கிளையும் பொலிஸாரும் மீட்டெடுக்கவில்லை. (உ–5)

## பொங்கல் விழா

மல்லாகம் நீலியம்பனை அருள்மிகு பெரியநாயகி தாயார் சமேத பெரியதம்பிரான் திருக்கோயில் வருடாந்த வைகாசிப்பெரும் பொங்கல் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தப் பொங்கல் வழிபாட்டையொட்டி இன்று சனிக்கிழமை மாலை 4மணி முதல் மல்லாகம் கோயில் வீதி சாடி மனையிலிருந்து பொங்கல் வழிபாட்டுக்குரிய வளந்துப் பானை, பொங்கல் பண்டங்கள் பெரியதம்பிரான் ஆலயத்துக்கு திருப்பவனியாக எடுத்துச் செல்லப்படவுள்ளன. இந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா மகத்துவங்களை தெய்விகப் பேருரையாக மதுரகவி காரை எம்பி.அருளானந்தன் வழங்கவுள்ளார்.

---

## மற்றொருவர்

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் பஸ்ரியன் சந்திக்கருகில் பழக்கடை நடத்தி வருபவரே கைது செய்யப்பட்டுள்ளார். அவரை பொலிஸார் நேற்று பிற்பகல் யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தினர். எதிர்வரும் மூன்றாம் திகதிவரையும் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பெ. சிவக்குமார் உத்தரவிட்டார். (உ–103)

## ரணிலுக்கு

சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்காக கையொப்பம் திரட்டும் பணிகளை கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பித்துள்ளதாகவும் கையொப்பம் திரட்டும் பணிகள் ஆரம்பித்து நான்கு மணிநேரத்திற்குள்ளாக 60 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளதுடன், இதில் தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களும் உள்ளடங்குவதாக டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்றையதினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியிலுள்ள அபேராம விகாரையில் இடம்பெற்ற இந்த ஊடகவியலாளர் மாநாட் டில் முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுடன் மஹிந்த ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளர்களிலொருவரான குமார் வெல்கம மற்றும் மனுஷ நாணயக்காரவும் கலந்துகொண்டனர்.

இதன்போது அங்கு கருத்துத் தெரிவித்த டலஸ் அழகப்பெரும , பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மிலேச்சத்தனமான செயற்பாடுகளை தொடர்ந்தும் எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது. இதன் காரணமாகவே நேற்றையதினம் (வியாழக்கிழமை) நான்கு அமைச்சர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்தனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்றார்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அதிகளவானவர்கள் ஆதரவு வழங்கி வருகின்றனர். இவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விரைவில் சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் நாடாளுமன்றில் எதிர்க் கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டுவந்தபோது அதனை அரசு பரிசீலிக்கத் தவறியுள்ள நிலையில், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை எங்ஙனம் வெற்றிபெறமுடியும் என எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை உறுப்பினர்களின் கையொப்பங்களை அடுத்து வரும் வாரங்களில் பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகக் குறிப்பிட்டார். அப்படிப் பெரும்பான்மை உறுப்பினர்களின் கையொப்பத்துடன் கையளிக்குமிடத்து அதனை சபாநாயகர் கருத்திற்கொள்வது அவசியமாகும் என்றும் கூறினார்.

## கிளிநொச்சியில்

பாடசாலை வளாகத்தில் கொல்லப்பட்ட மாணவிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாணவர்களும் மற்றவர்களும் கறுப்பு பட்டிகள் அணிந்து நிகழ்வில் பங்கேற்றனர். இரங்கல் செய்திகள், உரைகள், கவிதைகள் வாசிக்கப்பட்டன. உணர்ச்சிபூர்வமான அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேபோல் கிளிநொச்சி பளை பேருந்து நிலையத்தில் பளை கல்வி கோட்டத்தை சேர்ந்த ஒன்பது பாடசாலைகளின் மாணவர்கள் நேற்று வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தினர்.

கூட்டு பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கபட்டு உயிரிழந்த மாணவிக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். படுகொலைக்குக் காரணமானவர்கள், அதற்கு உடந்தையாக இருந்தவகயவர்கள் அனைவரையும் மக்கள், மாணவர்கள் முன்னிலையில் தூக்கில் இடவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

புங்குடுதீவில் நடந்தது போன்று இனி எந்தவொரு இடத்திலும் நடைபெற அனுமதிக்ககூடாது என்று முழக்கங்களையும் மாணவர்கள் எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் பளை பிரதேச செயலாளரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த மக்களும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றில் நேற்று ஈடுபட்டனர். உருத்திரபுரம் முருகன் ஆலயத்தில் இருந்து பேரணியாக வந்த மக்கள் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திவரை வாகனங்களில் வந்து அங்கிருந்து கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை நடைபவனியாகச் சென்று மனுக் கையளித்தனர். (உ–21)

## போதை விற்பனை,

மாணவர்களை அடிமையாக்கச் செய்வதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகளின் பின்புலம் குறித்தும் விரிவாகப் பேசப்பட்டது. இதனடிப்படையில் பாடசாலை மாணவர்களைப் போதைப் பொருள் பாவனைக்கு ஊக்குவிக்கும் இடங்கள், மதுவுக்கு அடிமையாக்கும் பகுதிகள், பாலியல் ரீதியிலான தொந்தரவு இடம்பெறும் பகுதிகள் என்பவற்றை மாவட்ட நன்னடத்தை அலுவலர்கள் அடையாளப்படுத்தினார்கள்.

யாழ்.இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி, ஏழாலை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு அருகில் வைத்து, பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

உப்புமடம் சந்தி, திருநெல்வேலிச் சந்தி, இணுவில் துரைவீதிச் சந்தி, இணுவில் சினிமா ஹோல், நாவற்குழி வீட்டுத் திட்ட மேற்குப் பகுதி, நாவற்குழி ஐயனார் கோயிலடி, ஐந்து வீட்டுத் திட்டம் நாவற்குழி, கொடிகாமம் மத்தி, மட்டுவில் வடக்கு மணலடிப் பிள்ளையார் கோயிலடி ஆகிய பிரதேசங்களில் போதைப் பொருள் விற்பனை இடம்பெறுவதும் அடையாளப்படுத்தப்பட்டது.

அரியாலை முல்லை வீதி, ஏழாலை வடக்கு கல்கோவில் பகுதி, மயிலங்காடு, ஐந்து சந்திப் பகுதி, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சில பகுதிகளிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அருகில் உள்ள இடங்கள் போன்றவற்றில் பெண்கள் பாலியல் ரீதியிலான தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்று பட்டியலிடப்பட்டது.

நல்லூர் அரசடிப் பகுதி, ஏழாலை வடக்கு, கட்டுவன் புலம், திருநகர், ஐந்து சந்தி ஆகிய பிரதேசங்களில் போதைப் பொருள் விற்பனை மற்றும் போதைப் பொருள் விநியோகம் என்பன இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. காரைநகரில் இரு பிரதேசங்களில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் மூன்று வாரங்களுக்கு முன்னர் கையளிக்கப்பட்டது. (உ–5)

## மட்டு.

யாளிகள் சார்பில் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் எவரும் முன்னிலையாகக்கூடாது என்றும்போராட்டக்காரர்கள் வலியுறுத்தினார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கான பஸ் சேவைகள் காலையில் இடம்பெற்றிருந்தன. எனினும் அவையும் மதியத்துடன் முடங்கின. பாடசாலைகளுக்கு மாணவர்கள் வரவு மிக மிகக் குறைவாகக் காணப்பட்டது. பெரும்பாலான பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

மாணவர்களும் பொதுமக்களும் வீதிகளுக்கு இறங்கி ஊர்வலங்களையும் நடத்தினர். அரச திணைக்களங்களுக்கு உத்தியோகத்தர்கள் வரவு குறைவாக இருந்ததினால் அவையும் மதியத்துடன் செயலிழந்தன. போராட்டம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டமே வெறிச்சோடிக் காணப்பட்டது என எமது செய்தியாளர்கள் அறிவித்தனர். முக்கிய நகரங்களில் ஆயுதத்துடன் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றையதினம் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் கிழக்கு மாகாண ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலைப் புறக்கணிப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதனால் பாடசாலைகள் செயலிழந்தன. போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறவில்லை. திருகோணமலை மாவட்டத்தில் வழமைக்கு மாறான அமைதி நிலைமை நிலவியதாக செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் ஒரு சில கிராமங்களில் மாத்திரமே ஹர்த்தால் முழுமையாக இருந்தது. இதன் காரணமாக மாவட்டத்தின் இயல்பு நிலை ஓரளவுக்கு பாதிக்கப்பட்டிருந்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மூன்று மாவட்டங்களிலும் 30 பாடசாலைகள் மற்றும் பத்துக்கு மேற்பட்ட பொது அமைப்புக்கள் என்பன தனித் தனியாக நேற்றுப் போராட்டங்களை நடத்தின. (உ–5, 10)

## என்னையும்

கொன்றுவிடுவார்கள். என்னைக் காப்பாத்துங்கோ" என்று அந்தப் 14 வயதுச் சிறுமி தனது ஆசிரியரிடம் கதறியதைத் தொடர்ந்து சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. ஆசிரியர் இது குறித்து சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்கு அறிவித்தார். அவர் பொலிஸாரிடம் வழக்கை எடுத்துச் சென்றார். இதனை அடுத்து, குறித்த சிறுமியை 6 மாதங்களுக்கு மேலாக பாலியல் முறைகேட்டுக்கு உள்ளாக்கி வந்தார் என்று சந்தேகிக்கப்படும் 50 வயதுடைய நபர் ஒருவர் தெல்லிப்பழை பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர், சிறுமியை பாலியல் முறைகேட்டுக்குப் பயன்படுத்திவிட்டு அவருக்கு உணவுப் பொருள்களை வாங்கிக் கொடுப்பதுடன் விரும்பிய பண்டங்களைச் சிறுமி வாங்கி உண்ணுமாறு கூறி பணமும் கொடுத்து வந்தார் என்று கூறப்படுகிறது. அத்துடன் தன்னுடனான பாலியல் செய்கைகள் குறித்து யாருக்கும் சொல்லக்கூடாதென அவர் சிறுமியை மிரட்டினார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இதனால் ஏற்பட்ட அச்சம் காரணமாகவே தனக்கு நடந்த கொடுமைகளை சிறுமி வெளியே தெரிவிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

புங்குடுதீவில் பள்ளி மாணவி வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட செய்தி வெளியாகி, அது தொடர்பில் தமிழ்ச் சமூகம் தனது கொந்தளிப்பை வெளிப்படுத்தியதைக் கண்ட சிறுமி தனக்கு நடந்தவைகள் குறித்து ஆசிரியரிடம் தெரிவித்துள்ளார். (உ–5)

## தெற்கில்

நியாயமானதாகும். எனினும், இதன்போது பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்துவதினாலும், நீதிமன் றத்துக்கு கல் எறிவதினாலும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. இங்கு சட்டம், ஒழுங்கு மீறப்பட்டுள்ளமையால் பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது. இதனை இனவாத அடிப்படை யில் எவரும் நோக்கக்கூடாது. வடக்கில் பிரச்சினை என்றால் தெற்கு மக்களாகிய எங்களுக்கும் கவலையளிக்கின்றது. விடுதலை இயக்கம் மீண்டும் தலைதூக்கு வதற்கான ஆரம்பமாக இருக்குமோ என்ற சந்தேகம் தெற்கு மக்கள் மத்தியில் நிலவுகின்றது. ஆனால், இந்தச் சம்பவத்தை அவ்வாறு நோக்காது மனிதாபிமான அடிப்படையில் நோக்கவேண்டும்.

இருந்தபோதிலும், இதுவே இராணுவச் சிப்பாயோ, பொலி ஸாரோ மேற்கொண்டிருப்பார்களாயின் பிரச்சினையை வேறு விதத்தில் அரசியல்வாதிகள் கொண்டு சென்றிருப்பார்கள் – எனத் தெரிவித்தார்.

## பொலிஸ்

வழங்கப்பட்டிருக்கின்றன. எனினும் இந்தக் காரணங்களுக்காகத் தான் இடமாற்றம் வழங்கப்படுகிறதா என்பதை பொலிஸ் திணைக்களம் உறுதிப்படுத்தவில்லை.

யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சக்ஷன் வீரசேகர, சீதாஎலிய என்ற இடத்திற்கும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விஜயசேகர, கிளிநொச்சிக்கும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சேனாரட்ண முல்லைத்தீவுக்கும், யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பாலசூரிய வவுனியாவுக்கும், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பெரேரா மன்னாருக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பதிலீடாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக, சீதவாக்கையிலிருந்த ஜெயலத் என்பவர் நியமிக்கப்பட்டு நேற்றுக் கடமைகளையும் பொறுப் பேற்றுக் கொண்டார். ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியாக பிரட்றிக் உதயகுமார உட்லர் இன்று காலையில் பொறுப்பேற்க உள்ளார். இவர் வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தவர். இவர் புங் குடுதீவு மாணவி கொலை வழக்கில் சந்தேகநபரான குமார் என்ப வரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்தவர். (உ–4, 86)

# ஹர்த்தால் மூலம் யாழில் சிங்களவருக்கு எச்சரிக்கை

## ஜாதிக ஹெல உறுமயவின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு, மே 23

யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் அனுஷ்டித்து, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் அங்கு வாழும் சிங்கள மக்களுக்கு எச்சரிக்கை விடுத்து அவர்களை அந்தப் பிரதேசங்களை விட்டு வெளியேறுமாறு அழுத்தம் பிரயோகிக்கின்றனர். இந்தச் சம்பவத்தின் மூலம் தேசியவாத, பிரிவினைவாத மற்றும் தீவிரவாதக் குழுக்கள் மீண்டும் தலைதூக்குவதற்கு முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு மாணவி கொலையைக் கண்டித்து இடம்பெறுகின்ற வன்முறைகளை தொடர்வதற்கு இடமளிக்க வேண்டாம் என்று ஜாதிக ஹெல உறுமய அறிக்கை ஒன்றின் ஊடாக அரசிடம் வலியுறுத்தியுள்ளது. அத்துடன் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக விரைந்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

புங்குடுதீவு பாடசாலை மாணவியை வன்புணர்வுக்கு உட்படுத்தி படுகொலை செய்தமையைக் கண்டித்து, சட்டத்தை கையில் எடுக்க முயற்சிக்கும் வன்முறை குழுக்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

படுகொலையைக் கண்டித்து கடைகள் அடைத்து ஹர்த்தால் அனுஷ்டித்தல், கறுப்புக் கொடியேற்றல், பாதைகளை மறித்தல் போன்ற எதிர்ப்பு நடவடிக்கை ஊடாக முக்கிய தலை ஒன்று செயற்படுவதை தெளிவாகக் காண முடிகின்றது. இவ்வாறான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள், யாழ்ப்பாணத்தில் வாழும் சிங்கள மக்களுக்கு எச்சரிக்கை விடுத்து அந்தப் பிரதேசங்களை விட்டு வெளியேறுமாறு அழுத்தம் பிரயோகிக்கின்றனர்.



இதன் மூலம் தேசியவாத, பிரிவினைவாத மற்றும் தீவிரவாத குழுக்கள் மீண்டும் தலைதூக்குவதற்கு முயற்சிக்கின்றனர். மேலும் பழிவாங்கும் நடவடிக்கைகளும் ஆரம்பமாகியுள்ளன.

பாடசாலை மாணவிக்கு இடம்பெற்றுள்ள குற்றம் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும். ஆனாலும் யாருக்கும் சட்டத்தை கையில் எடுக்கும் அதிகாரத்தை வழங்குவதற்கு இடமளிக்கக் கூடாது. இவ்வாறான வன்முறைகளுக்கு பின்னால் உள்ள நபர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்– என்று நிஷாந்த வர்ணசிங்க வலியுறுத்தியுள்ளார். (த–5)

# ஜனாதிபதி மைத்திரி மீது தொடர்ந்து குறி வைப்பு

## மாத்தறையிலும் தாக்குதல் முயற்சி

கொழும்பு, மே 23

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது தாக்குதல் நடத்துவதற்கு தொடர்ந்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த 19 ஆம் திகதி மாத்தறையில் இடம்பெற்ற, போர் வீரர்கள் நினைவு நாள் அணிவகுப்பின் போதும் தாக்குதல் முயற்சிக்கு திட்டமிட்டிருந்த நிலையில், அதனுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கடற்படையினர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தகவல் வெளியிடுகையில், மாத்தறையில் நடந்த அணி வகுப்பில் மாற்றுத் திறனாளியான கடற்படைச் சிப்பாய் ஒருவர் பங்கேற்றார். அவரின் சக்கர நாற்காலியை கடற்படைச் சிப்பாய் ஒருவர் தள்ளிச் சென்றார். அந்தக் கடற்படைச் சிப்பாயிடமிருந்த பையில், கல் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தக் கல் தொடர்பில் எதுவும் தெரியாது என்று சிப்பாய் குறிப்பிட்டார். தன்னை சிக்கலில் மாட்ட வேறு எவரேனும் தனது பையில் கல்லைப் போட்டிருக்கலாம் என்று சிப்பாய் விசாரணையில் தெரிவித்துள்ளார், என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு நிலையில் குறித்த சிப்பாயும், சந்தேகத்தின் பேரில் மற்றொரு கடற்படைச் சிப்பாயும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மாத்தறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை மே 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தர விடப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற அணிவகுப்பில் இவர்கள் எதற்காக கல்லைக் கொண்டு வந்தனர் என்பது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றது என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த மாதம் அம்பாந்தோட்டையில் நடந்த கூட்டம் ஒன்றில், நாமல் ராஜபக்ஷவுடன் சென்ற இராணுவக் கமான்டர் ஒருவர் கைத்துப்பாக்கியுடன், ஜனாதிபதியை நெருங்கிய சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏற்கனவே கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி நடந்த சுதந்திர தின அணிவகுப்பிலும், மைத்திரிபால சிறிசேன மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற புலனாய்வுத் தகவலை அடுத்து முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தககது. (த–5)

# இணுவில் இந்துவின் 150 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், மே 23

இணுவில் இந்துக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி திங்கள் வரை ஆகிய 3 தினங்களும் நடைபெறவுள்ளது. கல்லூரி வளாகத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதல் நாளான இன்று கட்டடத் திறப்பு விழாவும் கையளிப்பும் நடைபெறவுள்ளது. கல்லூரி முன்றிலில் உள்ள அமரர் நா.கணேசபிள்ளை அரங்கில் காலை 8.30 மணிக்கு இந்த நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

நுழைவாயிலை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா திறந்துவைக்கவுள்ளதுடன் புதிய கட்டடத்தை வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் திறந்துவைக்கவுள்ளார்.

இரண்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை 'இணுவில் இந்து' நூல் வெளியீட்டு விழா அமரர் பொ.அம்பிகைபாகர் அரங்கில் நடைபெறவுள்ளது.




இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச செயலர் மு.நந்தகோபன் கலந்துகொள்ளவுள்ளார்.

மூன்றாம் நாள் திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு கௌரவிப்பும் முத்தமிழ் விழாவும் இடம்பெறும். அமரர் இரா.சுந்தரலிங்கம் அரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ–10)

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ் விழா ஜூன் மாத இறுதியில்

யாழ்ப்பாணம், மே 23

திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ்விழா எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் 26ஆம் ,27ஆம் , 28ஆம் திகதிகளில் மூன்று நாள்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று நாள்களும் காலை 8.45 மணிதொடக்கம்மாலை430 மணிவரை இல.286, பிரதான வீதி,யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் ஈழத்துக் கலை இலக்கியம்– கருத்து நிலையும் , இயங்கு தளமும் என்னும் மையப் பொருளில் கவிதை , சிறுகதை , நாவல், நாடகம் உட்பட பல்றே துறைகளில் 24 தலைப்புக்களில் ஆறு அமர்வுகளாக ஆய்வரங்குகளும், மாலை 6.00 மணிக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது.

பொன் விழா ஆண்டில் திருமறைக் கலாமன்றம் முன்னெடுத்து வருகின்ற செயற்பாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக தமிழ் விழா அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# 'கலம்காரி ' ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 23

'கலம்காரி' ஓவியக் கண்காட்சி வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் புதிய கட்டடத் தொகுதியில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 27ஆம் திகதி புதன் கிழமைவரை மு.ப. 10 மணி முதல் மாலை 5 மணிவரையில் நடைபெறவுள்ள 'கலம்காரி' கண்காட்சி இந்திய பாரம் பரியங்களில் ஒன்று எனவும் அது யாழ்ப்பாணத்தின் பாரம்பரியங்களோடு தொடர்புடையது என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் கண்காட்சியில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிடலாம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் அ.நொ. கிருஷ்ணவேணி தெரிவித்துள்ளார். (ஒ–10)

# அமைச்சர்கள் பதவி விலகல் அரசுக்குச் சிக்கலேதுமில்லை

கொழும்பு, மே 23

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் நால்வரின் பதவி விலகலின் காரணமாக எந்தவொரு சிக்கலும் இல்லை என அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பவித்ரா வன்னியாரச்சி, டிலான் பெரேரா, சீ.பி.ரத்நாயக்க, மற்றும் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் நேற்றுமுன்தினம் தமது அமைச்சு பதவிகளில் இருந்து விலகினர்.

குறித்த நான்கு அமைச்சர்களும் பதவி விலகியமையால் எந்தவொரு சிக்[illegible] என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும் போரின் பின்னர் தமிழர்களின் மனங்களைக் கவருதல், ஜெனிவா பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கச் சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட காரணங்களுக்காகவே தான் தற்போதைய அரசுடன் இணைந்து கொண்டதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமல்லாது கட்சியின் தலைவர் என்றவகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த வேண்டுகோளுக்கமையவே தான் அமைச்சு பதவியை பொறுப்பேற்றுக்கொண்டதாகவும் அவர் குறிப்[illegible] (த)

# புத்தாண்டைத் தமதாக்கியது போன்று நாட்டையும் பறித்துவிடுவர் தமிழர்கள்

## சிங்கள அடிப்படைவாத அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, மே 23

தமிழர்கள், சிங்களப் புத்தாண்டை தமக்குரியதாக்கிக் கொண்டது போல், இந்த நாட்டையும் தமதாக்கிக் கொண்டு பெரும்பான்மை இனமாக அடையாளப்படுத்திக் கொள்வார்கள் என்று, சுவர்ண ஹங்ச பதனம என்ற சிங்கள அடிப்படைவாத அமைப்பின் தலைவர் கால்லகே புண்ணியவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை சிங்களவருக்குரிய நாடு. இதனால் தமிழ் – முஸ்லிம் பிரதிநிதித்துவம் நீக்கப்பட்ட சிங்களக் கொடியே நாட்டின் தேசியக் கொடியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். சிங்கள மக்களை சிங்களவர் என்றும் ஏனைய இனத்தவரை சிறுபான்மையினர் என்றுமே அடையாளப்படுத்த [illegible] வேண்டும்.

சிங்களவர்கள் ஒரு போதும் இலங்கையர்களாக அடையாளப் படுத்தப்படக் கூடாது. சிங்களவர் என்ற பெயரிலேயே அடையாளப்படுத்தப்பட வேண்டும். ஏனையோர் சிறுபான்மையினத்தவராகவே அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்தபோது, இந்த நாட்டில் தமிழருக்கு எந்த உரிமையும் இல்லை என்று கூறியே சிங்களவர்களிடம் நாட்டை ஒப்படைத்தனர். அதனால் சிங்களவர்களின் தேசியக் கொடியையும், தேசிய கீதத்தையும் நாட்டில் வேறு எந்த இனத்துக்கும் வழங்குவதை எம்மால் அனுமதிக்க முடியாது.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது சிங்களவர்களை [illegible] கொடிகளை ஏந்திக் கொண்டிரு[illegible] தமையிலும் எவ்வித தவறும் இல்[illegible] நாட்டின் தேசியக்கொடி சிங்கள[illegible]களை பிரதிநிதித்துவப்படுத்துவத[illegible] மட்டுமே அமைய வேண்டும். தமி[illegible] முஸ்லிம் இனங்கள் மட்டுமல்[illegible] வேறு எந்த இனத்தையும் பிரதிநி[illegible]துவப்படுத்துவதாக அமையக் கூடா[illegible] இன்று அரசு நாட்டின் சிங்கள ம[illegible]ளின் உரிமையை பாதுகாப்பதில்ல[illegible] இந்த நிலை தொடர்ந்தால் தமிழ[illegible] சிங்கள புத்தாண்டைத் தமதாக்[illegible] கொண்டது போன்று நாட்டைய[illegible] தமதாக்கிக் கொண்டு பெரும்பா[illegible]மையாகவும் தன்னை அடையாள[illegible]படுத்தி கொள்வர்.

13 ஆவது திருத்தத்தில் நாட்டின் [illegible]சியல் தலைமைகள் செய்த பிழை[illegible]யினாலேயே தமிழர்கள் தமது உ[illegible]மைகள் என்ற பெயரில் நாட்[illegible] கோருகின்றனர், என்று தெரி[illegible]துள்ளார். (த–

# ஆண்கள் பிரிவில் யூனியன்

## பெண்கள் பிரிவில் சுந்தரபுரம் சரஸ்வதி

## மாகாண எறிபந்தாட்டக் கிண்ணத்தை கைப்பற்றின







மாங்குளம் மே 23

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் தெல்லிப் பழை யூனியன் கல்லூரி அணியும் பெண்கள் பிரிவில் வவுனியா சுந்தர புரம் சரஸ்வதி அணியும் அசத்தல் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டன.

நேற்று வடமாகாணப் பாடசாலைகளிற்கிடையிலான 19 வயது ஆண்கள் பெண்களிற்கான எறிபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களிற்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஆங்கிலப் பாடசாலை அணி மோதியது. இதில் ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியினர் தமது அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினர். யூனியன் வீரர்களின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் மானிப்பாய் ஆங்கிலப் பாடசாலை அணியினர் மிகவும் சிரமப்பட்டனர். இதனால் தெல்லிப்பழை யூனியன் 25:11, 25:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் கடந்தாண்டு மாகாண மட்டத்தில் 1ஆம், 2ஆம் இடங்களைப் பெற்ற நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் வவுனியா மாதர்பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை அணியும் மோதியது. இதில் கடந்தாண்டு சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்த நெல்லியடி மத்திய கல்லூரி அணியை வவுனியா மாதர்பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் இலகுவாக விழ்த்தி 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

பெண்களிற்கான இறுதியாட்டத்தில் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன்கல்லூரி அணி மோதியது. மாகாண மட்ட இறுதியாட்டத்துக்கே உரிய பாணியில் இரு அணிகளும் மிகவும் பலமாக மோதிக்கொண்டன. முதல் செற்றில் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி அணியினர் தமது அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 25:20 என்ற அடிப்படையில் கைப்பற்றினர். அடுத்த செற்றில் வீறு கொண்ட யூனியன் கல்லூரி அணியினர் 25:19 என்ற அடிப்படையில் பழிதீர்த்தனர். இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் இறுதிச் செற் இரு அணிக்கும் பெரும் சவாலாக அமைந்தது. இருந்த போதும் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி அணியினர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 25:11 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றதோடு பெண்களிற்கான எறிபந்தாட்டத்தில் தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்த பெருமையையும் பதிவுசெய்தனர்.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை கன்னியர் மடம் அணி மோதியது. இதில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாக முல்லைத்தீவு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் சி.சுப்பிரமணி யேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ரி-422)

## தடகளப் போட்டி

யாழ்ப்பாணம். மே 23

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ரி-23)

## சென்.அன்ரனிஸ், சென்.மேரிஸ் இலகு வெற்றி

யாழ்ப்பாணம். மே 23

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். முஸ்லிம் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 3:0என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 3:0என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (23)

## இன்றைய மோதல்கள்

**ஸ்ரார் ஈகிள்ஸ் வி.க.தொடர்**

யாழ்ப்பாணம். மே 23

மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 20பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று சனிக் கிழமை காலை 9மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மன்னார் றைடஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் லயன்ஸ் அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் றோயல் அணியை எதிர்த்து கிளி பேட்ஸ் அணி மோதவுள்ளது.

**கே.ஸி.ஸி.ஸி. வி.க.தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடந்தும் 30பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று சனிக் கிழமை காலை இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து கந்தஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2மணிக்கு இடம் பெறும் காலிறுதி ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட் டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (புளுஸ்) விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

## சென்.லூட்சியா, சென்.சேவியர் அபாரம்

யாழ்ப்பாணம் மே 23

தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தின் திரு விழாவை முன்னிட்டு மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தேவன்பிட்டி புனித சவேரியார் விளையாட்டுக் கழம் வட மாகாண ரீதியாக நடத்தும் விலகல் முறையிலான உதைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தேவன்பிட்டி புனித சவேரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம் பெற்ற ஆட்டங்களில் பள்ளிமுனை சென்.லுட்சியா விளையாட்டுக் கழக அணிக்கும் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பள்ளிமுனை சென். லுட்சியா விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக 'சி' அணிக்கும் நாச்சிக் குடா சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக 'சி' அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி-23)

## புனித தோமையார் வி.க. முடிவுகள்



யாழ்ப்பாணம் மே 23

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவை முன்னிட்டும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம் பெற்ற ஆட்டங்களில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் அராலி அண்ணா விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. அராலி சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் அராலி அண்ணா விளையாட்டுக்கழக 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அராலி சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக 'பி'அணி 1:0என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழக 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக 'பி' அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி-23)

## வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கபடி நாளை

வலி வடக்கு மே 23

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் பெருவிளையாட்டுக்களின் ஒருபகுதியான 15, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கபடி ஆட்டங்கள் 24ஆம் 25ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

15 வயதுப் பிரிவு போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயம் எதிர் மன்னார் கருணாட்டங்கண்டல் மகாவித்தியாலயம், நெல்லியடி மத்திய கல்லூரி எதிர்வவுனியா பரக்கும்பா மகா வித்தியாலயம்,முல்லைத்தீவு கற்சிலைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எதிர் மன்னார் வட்டக் கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி, எதிர் கிளிநொச்சி பூநகரி மத்திய கல்லூரி, மன்னார் கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை எதிர் வடமராட்சி வேலாயுதம் மகா வித்தியாலயம். முல்லைத்தீவு பாலி நகர் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா கல்மடு மகா வித்தியாலயம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம் எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாம் சுற்றில் இருந்து கிளி நொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மோதவுள்ளது. (ரி-86)

# இந்தியா - இலங்கை ஓகஸ்ரில் மோதல்






சொந்த மண்ணில் வைத்து பழி தீர்க்குமா இலங்கை?

இந்திய அணி அடுத்த வருடம் நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணம் வரை தொடர்ச்சியாகப் பல ஆட்டங்களில் விளையாடவுள்ளது. இதன்படி இந்தியா எதிர் இலங்கை அணிகளுக்கிடையிலான தொடர் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளதாகத் தெரிகிறது.

ஓகஸ்ட் மாதம் இலங்கை சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முறைப்படி இந்த வருடத்துக்கான இந்தியா எதிர் இலங்கைத் தொடர் இந்தியாவிலேயே நடைபெற வேண்டும். ஆனால் கடந்த வருடம் மேற்கிந்தியத்தீவுகள் இந்தியத் தொடரை இடையிலேயே கைவிட்டு நாடு திரும்பிய காரணத்தினால் ஏற்பட்ட இழப்பை சரிசெய்ய இலங்கை அணி இந்தியாவுக்கு 5 ஒருநாள் ஆட்டங்களில் பங்கேற்க ஒப்புக்கொண்டு திடீர் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இதனால் இலங்கைக்கு பதிலுதவியாக இந்தியா-இலங்கையை தனது நாட்டுக்கு அழைக்காமல் இலங்கை வருகிறது.

கடந்த வருடத்தில் இந்தியாவுக்கு திடீரெனச் சுற்றுப்பயணம் மேற் கொண்ட இலங்கை அணி எந்தவொரு ஆட்டத்திலும் வெல்ல வில்லை. 5:0 என்ற அடிப்படையில் இந்தியாவிடம் வாங்கிக்கட்டியது. இந்தத் தொடரில் றோகித்சர்மா ஒருநாள் ஓட்டங்களில் 264 ஓட்டங்களை விளாசி ஒரு நாள் வரலாற்றில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர் என்ற சாதனையைப் படைத்தார். மட்டுமல்லாது அதிக தடவைகள் இரட்டைச்சதம் விளாசியவர் என்ற பெருமையையும் தனது பெயரில் பதிவுசெய்தார். இந்தப்படுதோல்விகளுக்கெல்லாம் பழிதீர்க்கும் படியாக இலங்கையணி தமது சொந்த மண்ணில் நடைபெறவுள்ள இந்தத்தொடரை பயன்படுத்த வேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளது. அதேநேரம் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து டோனி ஓய்வினை அஷீவித்த காரணத்தினால் டோனி இல்லாமல் இலங்கை வரும் இந்திய அணி இலங்கையை எப்படிச் சமாளிக்கப்போகிறது என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். (ரி)

## மீண்டது இங்கிலாந்து



இங்கிலாந்து மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்றுமுன்தினம் கிரிக்கெட்டின் பழமையான மைதானமான இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடும் இங்கிலாந்து 30-4 என்ற பெரும் சரிவில் இருந்து ஒருவாறு மீண்டு முதலாம் நாள் முடிவில் 357-7 என்ற கௌரவமான நிலையில் உள்ளது.

லோட்ஸில் கடந்த பத்து வருடங்களில் முதலில் துடுப்பெடுத்தாடிய அணி தோல்வியயைச் சந்திக்கவில்லை. இந்த நிலையில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணித்தலைவர் மக்கலம் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார். குளத்தில் லைத்துடன் குக். தொடக்கமே சொதப்பல் அறிமுகவீரர் லைத் 7 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். பலன்ஸ் மற்றும் பெல் இருவரும் ஒவ்வொரு ஓட்டத்துடன் பவிலியன் திரும்பக் கிரிக்கெட்டின் தாயகம் அதன் சொந்த மண்ணில் வைத்து பலமான ஆட்டம் கண்டது. பீற்றர் சனின் பழி பாவம் சும்மா விடுமா? குக் பதின்மத்துடன் பவிலியன் திரும்ப இங்கிலாந்து 30-4. நூறு ஓட்டங்களை எட்டுவதே எட்டாக் கனியாக இருந்த வேளையில் அணியில் உப தலைவர் ரூட்டும் ஸ்ரோக்ஸும் இணைந்து சரிவில் இருந்து அணியை படிப்படியாக மீட்டு கரை சேர்க்க முற்பட்டனர். மேலதிக இலக்கு இழப்பின்றி இங்கிலாந்து நூறு ஓட்டங்களை எட்டிப்பிடித்தது. இணைப்பாட்டம் அதிகரித்துக் கொண்டே சென்றது இலக்கு மட்டும் விழுந்தபாடில்லை. இணைப்பாட்டமாக 161 ஓட்டங்கள் பகிரப்பட்ட வேளையில் ஸ்ரோக்ஸ் சதத்தைத் தவறவிட்டு 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழ்நதார். ரூட்டாலும் சதத்தை எட்ட முடியவில்லை. 98 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இங்கிலாந்தின் முதல்தர சகலதுறை வீரர் மொயின் அலியும் தனது பங்களிப்பை செய்ய முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 357-7 என்ற நிலையில் உள்ளது. களத்தில் அலி 49 ஓட்டங்களுடன் உள்ளார்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து சார்பாக ஹென்றி 3 இலக்குகளையும் போல்ட் 2 இலக்குகளையும் சௌத்தி மற்றும் கிறைக் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றியுள்ளனர். (ரி)

## மகளிர் கிரிக்கெட்டில் பாலியல் இலஞ்சம்

### விசாரணை அறிக்கை ச்மர்ப்பிப்பு



இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியில் எழுந்த பாலியல் லஞ்சம் தொடர்பான விசாரணை அறிக்கை விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்கவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியில் பாலியல் லஞ்சம் நடப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. அதாவது அணியில் தெரிவாக வேண்டுமாயின் தெரிவாளர்களுக்கு பாலியல் லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டது. இதனை விசாரிக்க அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே விசாரணை குழுவொன்றை நியமித்தார். அதன்படி, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி நிமல் திஸாநாயக்க தலைமையிலான குழு நேற்று அமைச்சரிடம் அது தொடர்பாக அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. (ரி)

## ஐ.பி.எல். என்பது

### உரிமையாளர்களின் விளையாட்டு



நடப்பு ஐ.பி.எல். தொடரில் ஆரம்பத்தில் மிகவும் பின்தங்கிய மும்பை தற்பொழுது முதலாவது அணியாக இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளது. இந்த வெற்றியின் பின்னர் பொலார்ட் ஐ.பி.எல். ஒரு உரிமையாளர்களின் விளையாட்டு. இங்கு வீரர்கள் தமது திறனை நிரூபிக்க வேண்டுமாயின் சில காலம் தேவைப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இறுதியாட்டத்துக்கு முன்னேறியது தொடர்பாக பொலார்ட் தெரிவித்ததாவது:- எங்களுடைய தொடர் தோல்விக்கு எந்த குறைபாடும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஐ.பி.எல். ஒரு உரிமையாளர்களின் விளையாட்டு. ஒரு அணியில் இடம்பிடிக்கும் வீரர்கள் தொடர் நடைபெறுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு முன்புதான் ஒன்றாக இணைகிறார்கள். சில நேரம் வீரர்கள் ஒன்றிணைந்து விரைவாக செயல்படுகிறார்கள். சிலநேரம் இணைந்து செயல்பட தாமதமாகிறது. ஏனெனில் ஒவ்வொரு ஆண்டும் புதிய வீரர்கள் இணைகிறார்கள். இதனால்; வெற்றிப்பாதைக்காக கொஞ்சம் கால அவகாசம் கொடுக்க வேண்டும். சில அணிகள் மற்ற அணிகளை விட விரைவில் சிறப்பாக செயற்பட தொடங்கி விடுகிறது. இது பாராட்டப்பட வேண்டிய ஒன்று -என்றார். (ரி)

## இறுதிஆட்டத்துக்கும் இல்லிங்கே நடுவர்



...பு ஐ.பி.எல். தொடரில் சென்னை ...ர் மும்பை அணிகள் மோதிய ...தலாவது தகுதியாட்டத்தில் சென்னை துடுப்பெடுத்தாடிய வேளையில் முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே சிமித்துக்கு தவறான ஆட்டமிழப்பை கொடுத்ததன் மூலம் சென்னை ரசிகர்களின் ஒட்டுமொத்தக் கோபத்துக்கும் உள்ளாகியுள்ளார் நடுவர் ரிச்சர்ட் இல்லிங் வோர்த். இந்த நிலையில் இவரே இறுதியாட்டத்துக்கும் நடுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் களந்திரும்புகிறார் அமீர்



இங்கிலாந்துக்கு எதிரான தொடரின்போது ஆட்டநிர்ணயக் களச்சூதில் ஈடுபட்டதால் கடந்த 2010ஆம் ஆண்டில் இருந்து சர்வதேச ஆட்டங்களில் விளையாடாத பாகிஸ்தானின் இளம் வேகப்பந்து வீச்சாளர் அமீரின் தடைக்காலம் இந்த வருடத்தின் இறுதியில் முடிவடைகிறது. இந்த நிலையில் அதன்பின் சர்வதேச அணியில் இடம்பிடிப்பது புதிய வாழ்க்கையின் தொடக்கமாகும் என்று அமீர் தெரிவித்துள்ளார்.

துடைக்காலம் முடிவடைவது தொடர்பாக மொகமது அமீர் தெரிவிக்கையில் இங்கிலாந்து எதிராக ஆட்ட நிர்ணயக் களச்சூதில் ஈடுபட்ட விவாகரத்தில் தடைபெற்ற பின்னர் பல்வேறு கட்டங்களில் கிரிக்கெட்டில் இருந்து விலகி விடலாமா? என்று நினைத்தேன், ஆனால், உள்ளூர் ஆட்டங்களில் ரசிகர்கள் கொடுத்த அதீத ஆதரவு மீண்டும் பாகிஸ்தான் அணிக்காக விளையாட வேண்டும் என்று என்னை ஊக்குவித்தது. மீண்டும் சர்வதேச கிரிக்கெட் விளையாடுவது எனது புதிய வாழ்வின் தொடக்கம் என்பதை நான் கட்டாயம் ஒத்துக்கொள்ள வேண்டும். பாகிஸ்தான் அணிக்காக விளையாட தயாராக இருக்கிறேன். பாகிஸ்தான் அணிக்கு திரும்பிய பிறகு ரசிகர்கள் கொடுக்கும் ஆதரவை பார்ப்பதற்காக காத்துக்கொண்டிருக்கிறேன். அது உண்மையிலேயே என்னை ஊக்குவிப்பதாக இருக்கும். ஏன்றார். தடைபெறும் பொழுது அமீருக்கு 18 வயது மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## சங்கா என்றால் சதங்கள்



சர்ரே அணிக்காக மீண்டும் சதம் விளாசி சாதனை படைத்துள்ளார் இலங்கையின் ஜாம்பவான் குமார் சங்கக்கார.


இங்கிலாந்தின் கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டத்தொடர் தற்பொழுது நடைபெற்றுவருகிறது. இந்தத்தொடரில் சர்ரே எதிர் நொதம்ரென்ஜஷயா அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நொதம்ரென்ஜஷயா அணி 309 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சர்ரே 6 இலக்குகள் இழப்புக்கு 499 ஓட்டங்களைப் பெற்றிருந்தபொழுது ஆட்டத்துக்குரிய நான்கு நாள்களும் முடிவடைந்து ஆட்டம் சமநிலையானது. இந்த ஆட்டத்தில் சர்ரே கழகத்துக்காக ஒப்பந்தமான சங்கா 111 ஓட்டங்களை விளாசி அந்த அணிக்காக மீண்டும் ஒரு சதத்தைப் பதிவுசெய்தார். 11 பவுண்டரிகள் அடங்கலாக 60 என்ற ஓட்ட சராசரியில் சங்கா இந்தச் சதத்தை எட்டியமை குறிப்பிடத்தக்கது. (ரி)

## ரெய்னாவின் ரொமான்ஸ்

சென்னை அணியின் புதுமாப்பிள்ளை ரெய்னா தனது மனைவி பிரியங்கா சவுத்ரியை பிரிந்து இருக்க முடியவில்லை என்று ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

ரெய்னாவுக்கு கடந்த ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி திருமணம் நடந்தது. ஏப்ரல் 5ஆம் திகதி ரெய்னா சென்னை அணியுடன் இணைந்தார். இந்த நிலையில் மனைவியின் பிரிவை தாங்க முடியாமல் நேற்று பிரியங்கா சவுத்ரி படத்தை ருவிட்டரில் பதிவேற்றி உன்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை அன்பே என்று பதிவிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து ரெய்னா என்னமா ரொமான்ஸ் பண்ணுகிறார் என்று ரசிகர் ஒருவர் கருத்து தெரிவிக்க, ரசிகை ஒருவர் நான் இன்னும் அழுது கொண்டிருக்கிறேன் ரெய்னா என்று தெரிவித்துள்ளார்கள். இவர்களைவிட சரமாரியாக தங்களது கருத்துக்களை ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர். (ரி)




## ரூபல் விடுதலை





பங்களாதேஷ் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராக வளர்ந்து வருபவர் ரூபெல் ஹொசைன். இவர் தன்னை திருமணம் செய்வதாக ஆசைவார்த்தை கூறி ஏமாற்றி விட்டார் என்று நஸ்னின் அக்தார் ஹேப்பி என்ற நடிகை முறைப்பாடு செய்திருந்தார். இந்த நிலையில் வழக்கில் ரூபெல் மீதான குற்றசாட்டுக்கு எந்தவிதமான ஆதாரதம் இல்லை என்று டாக்காவின் நீதிமன்றம் தெரிவித்தது. இதனையடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

ரூபெல் என்னை திருமணம் செய்வதாக பொய் வாக்குறுதி கொடுத்து என்னுடன் தொடர்பு வைத்திருந்தார் என்று கடந்த டிசம்பர் மாதம் ஹேப்பி குற்றம் சாட்டியிருந்தார். இதனால் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் அவர் விளையாடுவாரா? என்ற கேள்வி எழுந்தது. ஆனால், பங்களாதேஷ் அரசு பங்களாதேஷ் அணியில் அவரின் தேவையை உணர்ந்து அவரை ஆஸ்திரேலியா செல்ல அனுமதித்தது. உலகக்கிண்ணத் தொடரில் இங்கிலாந்தை வீழ்த்தி பங்களாதேஷ் காலிறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற ரூபெல் முக்கிய காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## அடுத்த வருடம் ரி-20 உலகக்கிண்ணம் சொந்தமாக்க வியூகம் வகுக்கிறது இந்தியா

ரி-20உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவில் அடுத்தவருடம் நடைபெற இருக்கிறது. இரண்டாவது முறையாக உலகக்கிண்ணத்தை வெல்லும் நோக்கத்தில் இந்தியா அடுத்த 12 மாதங்களில் 11 ஆட்டங்களில் விளையாடும் வகையில் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்திய அணி ஜூலை மாதத்தில் சிம்பாப்வே சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறது. அப்போது இரண்டு ரி-20 ஆட்டங்களில் விளையாடும். செப்ரெம்பர் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரை இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்யும் தென்னாபிரிக்கா அணி மூன்று ரி-20 ஆட்டங்களில் விளையாடுகிறது. இதைவிட அடுத்த வருடம் ஜனவரியில் இந்தியா ஆஸ்திரேலியாவில் நடைபெற இருக்கும் மூன்று ரி-20 ஆட்டங்களில் விளையாட இருக்கிறது. அதன் பின்னர் இலங்கை அணி பெப்ரவரி மாதம் இந்தியா வருகிறது. அப்போது இரு அணிகளுக்கு இடையே மூன்று ரி-20 ஆட்டங்கள் நடைபெறவுள்ளது. இவ்வாறு அதிகப்படியான ரி-20 ஆட்டங்களை தனது நிரலில் சேர்த்து மேலதிக பயிற்சிமூலம் ரி-20 உலகக்கிண்ணத்தை கைப் பற்ற இந்தியா வியூகம் வகுத்துள்ளது. (ரி)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

- 45 நாள் நிரம்பிய டாசோன் (Brown)
- 7 மாதம் நிரம்பிய கிறேடன் (Black)

தொடர்பு:
077 744 8689

(60026) (9.3.6)

## மெர்ஸிடஸுடன் ஹாமில்டன் புதிய ஒப்பந்தம்




கார் பந்தயத்தின் நடப்புச் சம்பியனான இங்கிலாந்தின் லீவிஸ் ஹாமில்டன் மெர்ஸிடஸுடன் தனது ஒப்பந்தத்தை மேலும் 3 ஆண்டுகள் நீடித்துள்ளார். இதற்காக ஹாமில்டனுக்கு குறித்த நிறுவனம் இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட இரண்டாயிரத்து அறுநூறு கோடிகள் வரை கொடுத்துள்ளது.

புதிய ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தை நீண்ட நாட்களாக நடந்து வந்த நிலையில் இப்போது கையெழுத்தாகி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது மெர்ஸிடஸ். இது தொடர்பாக லீவிஸ் ஹாமில்டன் தெரிவிக்கையில் மெர்ஸிடஸ் எனது இல்லம் போன்றது. நான் தற்போது இயக்கி வரும் மெர்ஸிடஸ் எனது வாழ்க்கையில் இயக்கிய கார்களில் மிகச்சிறந்த காராகும். மெர்ஸிடஸ் பென்ஸ் நிறுவனம் 1998 முதல் எனக்கு ஆதரவளித்து வருகிறது. இப்போது மேலும் 3 ஆண்டுகள் என்னுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதனால் எதிர்வரும் 2018ஆம் ஆண்டுவரை மெர்ஸிடஸுக்காக விளையாடவுள்ளேன். இந்த ஒப்பந்தம் முடியும்போது மெர்ஸிடஸுடன் நான் 20 ஆண்டுகள் ஒப்பந்தத்தில் இருந்தவன் என்ற பெருமையைப் பெறுவேன் என்றார். (ரி)

**குறைந்த விலையில் கணினிகள்**

HP, Dell, Lenovo, IBM

Rs. 8750/- இருந்து

Pro Core 2 due 2.3Ghz
Ram DDR II 2Gb
H.Disk 80Gb
DVD Rom

Warranty 06 Months

Micro System Manipay 077 2487082 021 2256165

**வங்கியியல் கற்கை நெறி**

CBF/IABF DBF/DABF

- இதற்கான அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில்.
- எமது வழமையான ஆசிரியர் குழாம்.
- ஆரம்பம்: 23.05.2015 (சனி)

தொடர்புக்கு:
K. [illegible] (கணக்கீட்டு ஆசிரியர்)
(கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அருகில்)
தொ.பே: 077 4598 430

## மரண அறிவித்தல்

### நாகேஸ்வரி தனபாலசிங்கம்



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் 81, மணிக்கூட்டு கோபுரவீதி (பெருமாள் கோயிலடி) யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி தனபாலசிங்கம் 20.05.2015 சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகரெத்தினம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் நா.தனபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், வைத்திய கலாநிதி லயன் மு.கதிர்காமநாதன் (மன்னார்), காலஞ்சென்ற மு.வரதராஜன் (திரைப்பட தயாரிப்பாளர்- சென்னை), காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி, சேனாதிராஜா மற்றும் பாலசுப்பிரமணியம் (கனடா), பிரபல தொழில் அதிபர் கனகேந்திரநாதன் (தென் ஆபிரிக்கா), Dr.லயன் க.மு.பத்மநாதன் (உரிமையாளர் வெஸ்கோ பாமசி, யாழ்ப்பாணம்) ஆகியோரது அன்புச் சகோதரியும், பூலோகேந்திரன் (இந்தி ரன் சுவீட்ஸ்- கனடா), கஜேந்திரன் (கனடா), வியேந்திரன் (கனடா), சுரேந்திரன் (கனடா), ஜெஜேந்திரன் (கனடா), நாகராசா (ஜேர்மனி), பாலதேவன்- வரதா (ஜேர்மனி), சுதனி (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும், நாகேஸ்வரி, பத்மாதேவி, கமலாதேவி (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வைத்திய கலாநிதி ச.சுஜாதா (ஒக்ஸ்போட்-லண்டன்), வைத்திய கலாநிதி க.சுதாகர் (பிராந்திய வைத்திய தொற்று நோயியலாளர்- மன்னார் மாவட்டம்), வ.மதியழகன் (இயக்குநர்- சரஸ்வதி மருத்துவக் கல்லூரி, சரஸ்வதி மருத்துவமனை, திரைப்படத் தயாரிப்பாளர்- புதுடெல்லி, இந்தியா), வ.சுரேஸ் (தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்- அமெரிக்கா), வைத்தியகலாநிதி பிரஷனா, பிரவீந்த் (தொழில்நுட்ப பொறியியலாளர்), பிறின்சிகா (மாணவி) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு 81, மணிக்கூட்டு வீதியில் (பெருமாள் கோயிலடி) உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: நா.தனபாலசிங்கம் (கணவர்)
லயன் வைத்தியகலாநிதி மு.கதிர்காமநாதன் (மன்னார்)
லயன் Dr.K.M. பத்மநாதன்
வெஸ்கோ பாமசி- யாழ்ப்பாணம். (60053)(4.3.7)